## கண்ணீர் அஞ்சலி!



'சூப்பர் சினிமா' மாத இதழின் ஆசிரியரும் 'ராஜஸ்ரீ பப்ளிகேஷன்ஸ்' உரிமையாளரும், எனது கணவருமான திரு. R.M. குமரவேல் (ரேசாகீ) அவர்கள் உடல் நலபாதிப்பின் காரணமாக கடந்த 10.1.2010 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 12 ஆண்டுகளாக சூப்பர் சினிமா மாத இதழையும் மற்றும் கிரேட் நாவல், எவரஸ்ட் நாவல், பெஸ்ட் நாவல்களை மிகச் சிறப்பாக வெளியிட்டு வந்தார்.


உடல் மறைந்தாலும் அவரது ஆன்மா பத்திரிகைப் பணிகளையே நினைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனது கணவர் திரு. குமரவேல் அவர்களின் மரணத்திற்கு நேரிலும் தொலைபேசி மூலமும் வருத்தம் தெரிவித்த அனைவருக்கும் எனது நன்றிகள்.

K. விஜி



# வானவில்லின் எட்டாவது நிறம்



## ராஜேஷ்குமார்




தன் ஆறு மாதக் காதலனோடு டெலிபோனில் சம்பாஷித்துக் கொண்டிருந்தாள் சுஜாதா. மிகமிக லேசாய் லாரா தாத்தாவை நினைவு படுத்தும் தோற்றம்.

"அப்புறம் ராகவ்...?"

"நீ தான் சொல்லணும்."

"ஒரு நல்ல கவிதையைப் படிக்கிறேன், கேட்கிறியா...?"

"நீ பேசினாலே கவிதைதான்...!"

"எனக்கு ஏற்கெனவே சைனஸ் ப்ராப்ளம். ஏ.ஸி.ரூம்ல வேற இருக்கேன். ஒரு டிபிக்கல் காதலன் மாதிரி பேசாதே... கவிதையைப் படிக்கட்டுமா... வேண்டாமா...?"

"படி...படி..."

**"மூங்கில் காயம் பட்டதால்**
**புல்லாங்குழல் ஆனது**
**நிலம் காயம் பட்டதால்**
**விளைச்சல் காட்டியது.**
**கல் காயம் பட்டதால்**
**சிலையானது.**
**மனிதா! நீ மட்டும்**
**காயம் பட்டவுடன்**
**நோயாளியாகிப் போவது ஏன்...?"**

ராகவ் மறுமுனையில் "வாரே வாவ்...! இது நீ எழுதின கவிதையா...?" என்றான்.

"கவிதை எழுதற அளவுக்கு எனக்கு அறிவு இருந்தா உன்னை நான் லவ் பண்ணியிருப்பேனா...?"

"என்ன சொன்னே...?"

"டேக் இட் ஈஸி ராகவ். ஒரு வார இதழில் வெளிவந்த கவிதை இது."

"என்னோட ஈகோவில் இப்போ ஒரு பெரிய பங்க்சர்..."



"ஸி...சாயந்தரம் நான் உன்னை மீட் பண்ணும் போது ஒரு சைக்கிள் கடைக்குப் போய் பங்ச்சர் ஒட்டிக்கலாம்..."

"உன்னை...! நேர்ல வா... சொல்றேன்."

"என்ன பண்ணுவியாம்...?"

"பேசிய வாயை..."

"வாயை...?"

"இப்ப சொல்ல மாட்டேன். நேர்ல பார்க்கும் போது உனக்கே தெரியும்."

"சரி... இன்னிக்கு சாயந்திரம் எங்கே சந்திக்கலாம்?"

"நீயே சொல்லு..."

"சாந்தி தியேட்டர்க்குள்ளே இருக்கிற சரவண பவன்..."

"கூட்டம் அதிகம் இருக்குமே...?"

"கூட்டம் அதிகமாயிருந்தாத்தான் உன்னோட கையும் சும்மாயிருக்கும்..."

"வரவர நீ கில்லாடியாயிட்டே?"

"இல்லேன்னா நீ பாட்டுக்கு விளையாடிட்டுப் போயிடுவியே..."

"அடிப்பாவி...! நான் என்ன காமாந்தகனா...?"

"யார் கண்டது...! எனக்கு உன்னைத் தெரியும். உனக்குள்ளே இருக்கிற ராவக் எப்படிப்பட்டவன்னு எனக்குத் தெரியாதே... அந்த ராகவ் திருட்டுப் பயலாகக்கூட இருக்கலாமே...!"

"ஏய்...சுஜி... இன்னிக்கு நீ ரொம்பவும் ஓவர். ஏதாவது தமிழ்ப்படம் பார்த்தியா...?"

"ஆமா... நேத்து ராத்திரி டி.வி.யில..."

"என்ன படம்...?"

"சன் டி.வி.யில் 'கணவனே கண்கண்ட தெய்வம்' விஜய் டி.வி.யில் 'மணாளனே மங்கையின் பாக்கியம்..."

"கிழிஞ்சது போ..."

சுஜாதா சிரித்துக் கொண்டிருக்கும்போதே... ஆபீஸ் போர்டிகோவில் அந்த சில்வர் க்ரே காண்டஸா கார் வந்து நின்றது.

சுஜாதா பதட்டமானாள்.

"ராகவ்...! ரிஸீவரை வைக்கிறேன். என்னோட எம்.டி வந்தாச்சு. இனிமே நாம அரட்டை அடிக்க முடியாது. சாயந்தரம் ஆறு மணிக்கு சரவணபவன் வாசல்ல மீட் பண்ணுவோம்..."

சுஜாதா ரிஸீவரை வைத்துவிட்டு பவ்யமாய் எழுந்து நிற்க, காண்டஸா கார் நின்றதும், இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தாள் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் வசுந்தராதேவி.

ஐம்பது வயது. நீலநிற பார்டர் ஓடியிருந்த உஜாலா வெள்ளைப் புடவையில் 'பளிச்' தோற்றம் காட்டிய வசுந்தராதேவிக்கு அந்த காலத்து எம்.வி. ராஜம்மா சாயல். உயர்த்தி போட்ட கொண்டையில் நரை முடிகள் வெள்ளிக் கம்பிகளாய் மின்னின. கையில் ஒரு எக்ஸிக்யூடிவ் ப்ரீஃகேஸ்.

"குட் ஈவினிங் மேடம்..."

வசுந்தராதேவி நின்றாள். ஆபீஸின் மொத்தப் பரப்பையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு சுஜாதாவின் முகத்தில் நிறுத்தினாள்.

"சுஜா..."

"மேடம்..."

"உன்வாட்ச்ல டைம் எவ்வளவு?"

"ஃபோர் ஃபிப்டி ஃபைவ் மேடம்..."

"ஆபீஸ் முடிய இன்னும் அஞ்சு நிமிஷம் இருக்கு. அதுக்குள்ளே எல்லோரும் கிளம்பியாச்சே... தினமும் இப்படித்தான் போயிட்டிருக்காங்களா...?"

"ஆமா... மேடம்..."

"நீ என்னோட பர்சனல் செக்ரட்டரி. இந்த விஷயத்தை என்னோட கவனத்துக்கு நீ ஏன் கொண்டு வரலை...?"

"அது வந்து மேடம்..."

"ஐ டோண்ட் வாண்ட் எனி ப்ளடி எக்ஸ்ப்ளேனேஷன் ஃப்ரம் யூ... நாளையிலிருந்து எல்லா ஸ்டாஃபும் சரியா அஞ்சு மணிக்குத்தான் சீட்டை விட்டு எழுந்திரிக்கணும். நாளைக்குக் காலையில் வந்ததும் முதல்வேலையா ஒரு சர்க்குலர் போட்டு எல்லாருடைய டேபிளுக்கும் அனுப்பிவை..."

"எஸ் மேடம்..."

"ஒரு பத்து நிமிஷம் கழிச்சு என்னோட ரூமுக்கு வா. நிக்கல்சன் கெமிக்கல் கம்பெனிக்கு ஒரு லெட்டரை ஃபேக்ஸ் பண்ண வேண்டியிருக்கு."

"ஃபைவ் டென்னுக்கு வந்தா போதுமா மேடம்?"

"போதும்..."

வசுந்தரா பக்கவாட்டில் இருந்த லிஃப்ட்டுக்குப் போய் இரண்டாவது மாடிக்கு உயர, சுஜாதா தன் நாற்காலிக்குச் சாய்ந்து நாளைக்கு அனுப்ப வேண்டிய சர்க்குலரை கம்ப்யூட்டரைத்தட்டித் தயார் செய்ய ஆரம்பித்தாள்.

பல நிமிஷங்கள் கரைந்திருந்தபோது இன்டர்காம் மெல்ல முனகி கூப்பிட்டது.

ரிஸீவரை எடுத்தாள். செக்யூரிட்டி செல்லில் இருந்து எஸ்.ஓ. பேசினார்.

"மேடத்தைப் பார்க்கணும்ன்னு சொல்லி ஒரு சேல்ஸ் எக்ஸிக்யூடிவ் வந்து வெயிட் பண்ணிட்டிருக்கார். உள்ளே அலவ் பண்ணலாமா...?"

"எந்தக் கம்பெனின்னு கேட்டீங்களா...?"

"அரோமா பார்மஸூட்டிகல்ஸ்."

"அனுப்புங்க..." ரிஸீவரை வைத்துவிட்டு கம்ப்யூட்டரில் மறுபடியும் கவனமானவளை இரண்டாவது நிமிஷம் ஒரு குரல் கலைத்தது.

"எக்ஸ்க்யூஸ் மீ..."

நிமிர்ந்தாள் சுஜாதா.

அந்த இளைஞன் நின்றிருந்தான். பீட்டர் இங்க்லாண்ட் செர்ரி நிற சர்ட்டிலும் ஒயிட் பேண்ட்டிலும் அமர்க்களமாய் நின்றிருந்த அந்த இளைஞன் கெட்டியான மீசைக்குக் கீழே புன்னகைத்தான்.

"கம்மிங் ஃப்ரம் அரோமா பார்மஸூட்டிகல்ஸ். மேடத்தைப் பார்க்கணும்..."

"கிவ்...மீ...யுவர் விஸிட்டிங் கார்ட்..."

எடுத்துக் கொடுத்தான். சுஜாதா கார்டை வாங்கிப் பார்த்துவிட்டு கேட்டாள்.

"யூ... ஆர் மிஸ்டர் பூர்ணசந்திரன்...?"

"எஸ்..."

"இங்கே உட்கார்ந்து வெயிட் பண்ணுங்க...நான் மேடத்துக்கிட்ட கேட்டுட்டு வந்துடறேன்..."

அவனுக்கு ஒரு பாலிவினைல் நாற்காலியைக் காட்டிவிட்டு லிஃப்டில் உயர்ந்த சுஜாதா, பத்து நிமிடம் கழித்து வந்தாள்.

"நீங்க போய் மேடத்தைப் பார்க்கலாம். பத்து நிமிஷத்துக்கு மேல் உங்க பிஸினஸ் டாக் இருக்கக் கூடாது. மேடத்துக்கு வேற என்கேஜ்மெண்ட்ஸ் இருக்கு..."

பூர்ணசந்திரன் சிரித்தான். "நோப்ராப்ளம்... சரியா பத்தாவது நிமிஷம் நான் லிஃப்டிலிருந்து இறங்கிட்டிருப்பேன்..."

சொல்லிவிட்டு அவன் லிஃப்ட்டை நோக்கிப் போனான்.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு "எஸ் கம் இன்..." என்று குரல் கொடுத்தாள் வசுந்தராதேவி.

பூர்ணசந்திரன் இடதுகை விரல்களால் கழுத்து டையை நிரடிக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

"குட் ஈவினிங் மேடம்..."

தலையசைப்பால் அவனுடைய குட் ஈவினிங்கை ஏற்றுக் கொண்ட வசுந்தராதேவி, தனக்கு முன்னால் இருந்த இருக்கையைக் காட்டினாள்.

"ப்ளீஸ்... ஸீட்டட்..."

உட்கார்ந்தான். வசுந்தராதேவி மேஜையின் மேல் தன் இரண்டு முழங்கைகளையும் ஊன்றிக் கொண்டாள்.

"சொல்லுங்க பூர்ணசந்திரன்...!"

வசுந்தராதேவி கலக்கமாய் மேஜை மேல் இருந்த விசிட்டிங் கார்டை எடுத்துப் பார்த்தாள்.

"அ... அப்படீன்னா... அரோமா பார்மஸூட்டிகல்ஸ் என்கிற இந்த விசிட்டிங் கார்டு...?"



"உங்களை இப்படி சுலபமா மீட் பண்றதுக்காக ப்ரிண்ட் பண்ணின கார்டு அது. இல்லேன்னா கேட்ல இருக்கிற செக்யூரிட்டி செல்லை மீறிக்கிட்டு உள்ளே வரமுடியுமா என்ன...?"

வசுந்தராவின் நெற்றியில் வியர்வை அரும்பி மின்னியது.

"உ... உ... உனக்கு என்ன வேணும்...? எதுக்காக இப்படி மீட் பண்ணி உள்ளே வந்திருக்கே...?"

சுஜா ஒரு புன்னகையோடு தான் கையோடு கொண்டு போயிருந்த ப்ரீஃப் கேஸை மேஜையின் மேல் வைத்துத் திறந்தான்.

"இதுக்குள்ளே என்ன இருக்குன்னு ஒரு நிமிஷம் பார்க்கறீங்களா மேடம்...?"

வசுந்தரா பயக் கண்களால் - வாய் பிளந்த அந்த ப்ரீஃப்கேஸைப் பார்க்க, அவள் உடம்பின் மொத்த பில்லியன் செல்களிலும் குளிர் பரவியது.




**வா**ய் பிளந்து கிடந்த அந்த ப்ரீஃப்கேஸூக்குள் நூறு ரூபாய் கரன்ஸிகள் கட்டுக்கட்டாய் நெருக்கியடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்க, அதன் மேல் காபினட் சைஸில் ஒரு போட்டோ மல்லாந்து தெரிந்தது.

சுஜா சிரித்தான்.

"என்ன மேடம்... அப்படியே உறைஞ்சு போயிட்டீங்க. அது உங்க போட்டோதான்... கையில எடுத்துத்தான் பாருங்களேன்..."

வசுந்தரா கை நடுங்க அந்த போட்டோவை எடுத்தாள்.

போட்டோவில் வசுந்தரா ரத்த வெள்ளத்தில் படுத்துக்கிடக்க, அவள் காலடியில் ஒரு மலர் வளையம் வைக்கப்பட்டிருந்தது.

குரல் குழறியது வசுந்தராவுக்கு.

"இது...இது...!"

கஜா நாற்காலியில் நன்றாக சாய்ந்து உட்கார்ந்து கொண்டு புன்னகைத்தான்.

"இது உங்கள் நிஜமான போட்டோ கிடையாது. கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் மூலமா உருவான போட்டோ..! ஐ...மீன் கற்பனை போட்டோ... இந்த கற்பனை போட்டோவை நிஜமாக்கிக் கொடுத்தா எனக்குக் கிடைக்கப் போகிற தொகை எவ்வளவு தெரியுமா மேடம்...? பத்து லட்சம். இப்போ இந்த ப்ரீஃப்கேஸ்ல இருக்கிற அஞ்சு லட்சம் எனக்கு அட்வான்ஸா கொடுக்கப்பட்ட பணம்."

வசந்தரா உறைந்து போய் உட்கார்ந்திருக்க, கஜா ப்ரீஃப்கேஸில் இருந்த ரூபாய் நோட்டுக்களை விலக்கி, உள்ளேயிருந்து ஒரு சிறிய கேமராவையும் ஒரு பிஸ்டலையும் எடுத்து வைத்தான்.

"இது ஜெர்மன் மேக் பிஸ்டல். இதுலயிருந்து ஒரு தோட்டா உங்க உடம்புக்குள்ளே பாய்ஞ்சாலே போதும். இந்தியத் துப்பாக்கியோட ஆறு தோட்டாக் களுக்குச் சமம். இருதயப் பகுதிக்குள்ளே தோட்டா பாய்ஞ்சா மரணம் ஒரு நிமிஷத்துக்குள்ளே கிடைச் சுடும். உங்களை இந்தத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்னுட்டு, நீங்க ரத்த கோலத்துல கிடக்கிற காட்சியை கேமராவால 'க்ளிக்' பண்ணிக் கொண்டு போய்க் கொடுத்தா மீதி அஞ்சு லட்சம் என் கைக்கு கிடைச்சுடும்."

"நோ... ஓ...ஓ...ஓ...ஓ...!" வசந்தரா அலறிக் கொண்டே எழ முயல, கஜா தன் கையில் வைத்திருந்த பிஸ்டலால் அவளை அமர்த்திக் கொண்டே புன்னகைத்தான்.

"பயப்படாதீங்க மேடம்... உங்களைக் கொல்றது தான் என்னோட நோக்கமாயிருந்தா வந்த உடனேயே காரியத்தை முடிச்சுக்கிட்டு நான் பாட்டுக்கு போய்க்கிட்டேயிருந்திருப்பேன். நான் வந்த நோக்கம் அது இல்லை..."

"பி...பின்னே..." வசுந்தரா இயல்பானாள்.

"உங்களை நான் காப்பாத்தத்தான் வந்திருக் கேன்... நீங்க வியர்க்காமே என்கிட்ட பேசலாம்."



"நீ...நிஜமாத்தான் சொல்றியா...?" வசந்தரா எச்சில் விழுங்க, "நிஜம்... நிஜம்..." என்றான் கஜா.

"உனக்கு இந்தப் பணத்தைக் கொடுத்து என்னைக் கொலை பண்ணச் சொன்னது யாரு...?"

"அது எனக்குத் தெரியாது..."

"உனக்குத் தெரியாம எப்படி...?"

"மேடம்! உங்ககிட்ட நான் சில உண்மைகளைச் சொல்லியாகணும். நான் ஒரு கூலிப்படை ஆசாமி. அரசியல் வட்டாரத்திலேயும் எனக்குக் கொஞ்சம் செல்வாக்கு உண்டு. இருபது வயசிலேயே ஒருத்தனை வெட்டிக் கொலை பண்ணிட்டு தகுந்த சாட்சி இல்லாததினால் தூக்குக் கயித்துக்கும் ஆயுள் தண்டனைக்கும் தப்பிச்சு ரெண்டு வருஷ கடுங்காவல் தண்டனையோடு ஜெயிலுக்கு போய்ட்டு வந்ததுமே, என்னோட பேட்டைவாசிகள், என்னை தாதா ரேஞ்சுக்கு கொண்டு போயிட்டாங்க... மிலிட்ரிக் கடை ஹோட்டல்ல, நான்-வெஜிடேரியன் அயிட்டங்களுக்கு விலை போடற மாதிரி ஒருத்த னோட கையை எடுத்தா இவ்வளவு ரேட், காலை எடுத்தா இவ்வளவு ரேட், எரிச்சா ஒரு தொகை, புதைச்சா ஒரு தொகைன்னு தொழில் பண்ணிட் டிருக்கேன்.

அரசியல்வாதிகளுக்கு நாணயம், இதயம், மனிதாபிமானம் இல்லாததினால் என்னை மாதிரி யான தாதாக்களுக்கு தொழில் அமோகமா இருந்து கிட்டிருக்கு. ஆளும் கட்சிக்கு என்னை மாதிரியான ஆட்களோட தயவு தேவைப்படறதினால, என்மேல எத்தனை கேஸ்கள் இருந்தாலும் அது பாட்டுக்கு நடந்துக்கிட்டே இருக்கும். நான் பாட்டுக்கு ஜாமீன்ல சுத்திக்கிட்டேயிருப்பேன்..."

பேச்சை சில விநாடிகளுக்கு நிறுத்திய கஜா, பேண்ட் பாக்கெட்டுக்கு கையைக் கொண்டு போய் ஒரு சிறிய பாலித்தீன் கவரை எடுத்து அதன் வாயைப் பற்களால் கிழித்து, உள்ளே மடித்து வைக்கப்பட்டிருந்த பீடாவை எடுத்தான்.

"ஸாரி மேடம்...! ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை இந்த பீடாவை நான் வாய்க்குள்ளே போட்டேயாகணும். நான் தண்ணியடிக்க மாட்டேன்.

பொம்பளைகளைத் தேடிக்கிட்டு போகமாட்டேன். ஆனா இந்த பீடா மட்டும் எனக்கு வேணும்..."

சொன்ன சஜா கையில் வைத்திருந்த பீடாவை வாய்க்குள் திணித்துக் கொண்டான். பீடாவை அரை நிமிஷ நேரம் மென்று ஒரு பக்கமாய் அதக்கிக் கொண்டவன் மறுபடியும் பேச ஆரம்பித்தான்.

"இனி உங்க விஷயத்துக்கு வர்றேன் மேடம். போன வாரம் ஞாயிற்றுக் கிழமை ராத்திரி எனக்கு ஒரு போன்கால் வந்தது. போன்ல பேசினது ஒரு ஆண் குரல். 'காஸ்ட்லியான ஒரு உயிருக்கு முற்றுப் புள்ளி வைக்கணும். டீல் பேசிக்கலாமா... வேண்டாமா'ன்னு கேட்டுச்சு. பேசிக்கலாம்ன்னு சொன்னேன்.

'விப்ஜியார் கெமிக்கல்ஸ் கம்பெனியின் மேனேஜிங் டைரக்டர் வசுந்தராதேவியை உனக்குத் தெரியுமா'ன்னு கேட்டாங்க. தெரியாதுன்னு நான் சொன்னேன். 'போட்டோவையும் அஞ்சு லட்ச ரூபாயை அட்வான்ஸாவும் தர்றேன். காரியத்தை முடிச்ச இருபத்தி நாலு மணி நேரத்துக்குள்ளே மீது அஞ்சு லட்சம் உன் கைக்கு வந்து சேரும்'ன்னு சொன்னாங்க... நான் ஒத்துக்கிட்டேன்.

உங்க போட்டோவையும் ரூபாய் அஞ்சு லட்சத்தையும் ஒரு ப்ரீஃப்கேஸ்ல வெச்சு அடையாறு சாந்தி காலனியில், உபயோகத்தில் இல்லாத ஒரு டெலிபோன் பூத்துக்குள்ளே வெச்சுட்டு எனக்கு போன் பண்ணி எடுத்துக்கச் சொன்னாங்க. நானும் போய் எடுத்துக்கிட்டேன். உங்க போட்டோவை இந்தக் கோலத்துல அவங்க கிராஃபிக்ஸ் பண்ணி அனுப்பினது எனக்கு அதிர்ச்சியாயிருந்தது.

ஒரு பெரிய கம்பெனிக்கு எம்.டி.யா நிர்வாகம் பண்ணிட்டு வர்ற உங்களை மாதிரியான ஒரு பெண்ணைக் கொலை பண்ண எனக்கு மனசாட்சி ஒத்துக்கலை. நான் பணத்துக்காக துப்பாக்கியையும், அரிவாளையும் தூக்கற ஆள்தான். இருந்தாலும் உங்க விஷயத்துல என்னோட கைகள் எந்த ஆயுதத்தையும் தொடாது..."

வசுந்தரா பிரமித்து போய் உட்கார்ந்திருக்க, சஜா பீடா சாற்றை வாஷ் பேசினுக்குப் போய் உமிழ்ந்து விட்டு வந்து மறுபடியும் தொடர்ந்தான்.



"ரெண்டு நாள் கழிச்சு மறுபடியும் எனக்கு போன் வரும். 'ஏன் வசுந்தராவை தீர்த்துக் கட்டலை?'ன்னு கேட்பாங்க. 'எனக்கு இந்த டீல் வேண்டாம். ஒரு பொண்ணை கொலை பண்ண எனக்குப் பிடிக்கலை. பணத்தை ரிட்டர்ன் பண்றேன். எங்கே கொண்டு வந்து, எப்படித் தரட்டும்'னு கேட்கப் போறேன். அதுக்குள்ளே உங்களைத் தீர்த்துக்கட்ட நினைக்கிறவங்க யாராயிருக்கக் கூடும்கிறதை கெஸ் பண்ணி போலீஸுக்கு விசயத்தைக் கொண்டு போயிடறது பெட்டர்...! நானும் வேணும்னா போலீஸுக்கு மறைமுகமா உதவி பண்றேன்..."

வசுந்தரா பரபரத்தாள்.

"போலீஸை இப்பவே கூப்பிடட்டுமா...? அஸிஸ்டெண்ட் போலீஸ் கமிஷனர் எனக்கு ரொம்ப வேண்டியவர். ஃபேமிலி ஃப்ரண்ட். பிஸினஸ் ரீதியா எனக்கு வந்த பல பிரச்சினைகளை சால்வ் பண்ணியிருக்கார்."

"அப்புறமென்ன... இந்தப் பிரச்சினையையும் அவரையே ஹேண்டில் பண்ணச் சொல்லுங்க. முறைப்படி போலீஸ்ல கம்ப்ளையண்ட் பண்ணினா விஷயம் எல்லாருக்கும் தெரிஞ்சு பேப்பருக்கும் போயிடும். காதும் காதும் வெச்ச மாதிரி விசாரணை நடக்கணும். ஒரே ராத்திரியில் ஆளை அமுக்கிடணும்."

வசுந்தரா டெலிபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்துக் கொள்ள சஜா சொன்னான்.

"கமிஷனரை யூனிஃபார்ம்ல வரச் சொல்லாதீங்க மேடம். மஃப்டியில் ஒரு ஆட்டோ பிடிச்சு வரட்டும்!"

வசுந்தரா தலையசைத்துவிட்டு டெலிபோன் டயலில் ஆட்காட்டி விரலை ஒற்றியெடுக்க ஆரம்பித்தாள்.

அஸிஸ்டண்ட் கமிஷனர் தளவேல் மஃப்டி உடையில் ஒரு ஆட்டோ பிடித்து வசுந்தராவின் விப்ஜியார் கெமிக்கல் கம்பெனிக்கு வந்து சேர்ந்தபோது மணி ஆறு. கம்ப்யூட்டரில் மெயில் பார்த்துக் கொண்டிருந்த சுஜாதா எழுந்து நின்றாள்.

"குட் ஈவினிங் சார்...! மேடம் உங்களுக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்காங்க..."

"என்னம்மா...உன்னோட காதல் எப்படியிருக்கு?"

"அமோகம் சார்!"

"எப்போ கல்யாண சாப்பாடு...?"

"இன்னும் டிசைட் பண்ணலை சார்...!"

"ஏமாத்திடப் போறான்..."

"அவருக்கு அந்த அளவுக்கு தைரியம் கிடையாது சார். எப்ப வேணும்ன்னாலும் காதைப் பிடிச்சு கல்யாண மண்டபத்துக்கு கூட்டிட்டு வந்துடலாம்."

"வெரிகுட்...!" சிரித்த தனவேல் லிஃப்ட்டை நோக்கி போய்க் கொண்டே சொன்னார்.

"உன்னோட முதலாளியம்மா எதுக்காக போன் பண்ணி வரச்சொன்னாங்கன்னு தெரியலை.. போய்ப் பார்த்துட்டு வர்றேன்..."

தனவேல் லிஃப்ட்டுக்குள் நுழைந்து மேலே போய்விட, சுஜாதா சில விநாடிகள் நின்று சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு ஹாலின் கோடியில் இருந்த டாய்லெட்டை நோக்கிப் போனாள்.

உள்ளே நுழைந்து கதவைச் சாத்தித் தாழிட்டவள் மார்புப் பகுதிக்கு கையைக் கொண்டு போய் ஆஃப் செய்து வைத்திருந்த செல்போனை எடுத்தாள். அதை உயிர்க்குக் கொண்டு வந்து டயல் எண்களைத் தட்டி காதுக்குக் கொடுத்தாள்.

"ஹலோ...!"

"ம்..." ஆண் குரல்.

"நான் சுஜாதா பேசறேன்..."

"சொல்லு... என்ன விஷயம்...?"

"அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேல் மஃப்டி டிரஸ்ஸில் ஒரு ஆட்டோ பிடிச்சு கம்பெனிக்கு வந்திருக்கார்."

"எப்போ?"

"இப்பத்தான்..."

"எதுக்கு...?"

"தெரியலை..."



"காரணம் இல்லாமே ஏ.ஸி.வரமாட்டாரே! வாட்ச் பண்ணு... என்ன பேசிக்கிறாங்கன்னு கேட்க முடியுமா?"

"அது முடியாது. கண்ணாடிக் கதவு. ஏ.ஸி.ரூம். துளிச் சத்தம் வெளியே கேட்காது..."

"ட்ரை பண்ணிப்பாரு..."

"ம்... பார்க்கறேன்..." செல்லை அணைத்து, மார்புக்குள் புதைத்துக் கொண்டு டாய்லெட்டில் இருந்து வெளிப்பட்டாள் சுஜாதா.



அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேல் வசுந்தரா தேவியின் அறைக்குள் நுழைந்தபோது, அவள் வியர்த்த முகத்தோடு அறையின் குறுக்கவும் நெடுக்கவும் நடைபோட்டுக் கொண்டிருந்தாள்.

"வாங்க தனவேல்...!"

தனவேல் புன்னகைத்துக் கொண்டே ஒரு நாற்காலிக்குத் தன்னைக் கொடுத்தார்.

"இன்னிக்கு உங்க முகத்துல நிறைய வியர்வை, பிரச்சினையும் பெருசுன்னு நினைக்கிறேன்."

"ஆ-ஆமா..." தன் இருக்கைக்கு வந்து சாய்ந்தாள் வசுந்தரா.

"ஏதாவது லேபர் பிரச்சினையா...?"

"இல்லை தனவேல்... இது என்னோட பர்சனல் ப்ராப்ளம்..."

"சொல்லுங்க! சரி பண்ணிடுவோம்..."

"இந்த போட்டோவைக் கொஞ்சம் பாருங்க" சொன்ன வசுந்தரா, சுஜா கொடுத்துவிட்டுப்போன அந்த போட்டோவை எடுத்து நீட்டினாள்.

வாங்கிப் பார்த்த தனவேலின் கண்களில் அதிர்ச்சியலைகள் பரவின.

"மை குட்னஸ்...! என்ன இப்படியொரு போட்டோ...! இந்த போட்டோ உங்களுக்கு எப்படி கிடைச்சுது? போஸ்ட்ல வந்ததா...?"

"இல்லை... அரைமணி நேரத்துக்கு முன்னாடி 'கஜா'ன்னு ஒருத்தன் வந்து கொடுத்துட்டுப் போனான்..."

"கஜாவா...?"

"ம்... அவன் முழுப் பேர் கஜேந்திரன், கூலிப்படை நபர்..." என்' பேச்சை ஆரம்பித்த வசுந்தரா, கஜா வந்து விட்டுப்போன விபரத்தைச் சொல்லி முடிக்க, தனவேல் முகத்திலும் இப்போது வியர்வை.

"அந்த கஜா இப்போது எங்கே...?"

"போய்ட்டான்..."

"அவனையும் இருக்கச் சொல்லியிருக்கலாமே...?"

"சொன்னேன்... அவன் கேட்கலை. 'உங்க உயிர்க்கு ஆபத்து இருக்குன்னு தெரிஞ்ச, அதை உங்ககிட்டே சொல்லிட்டேன். இனிமே வேண்டிய ஸ்டெப்ஸ் எடுத்து உங்க உயிரைக் காப்பாத்திக்க வேண்டியது உங்களோட பொறுப்பு'ன்னு சொல்லிட்டுப் போய்ட்டான்."

"உங்க உயிர்க்கு பத்து லட்ச ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, குற்றவாளி ஒரு பெரிய கையாகத்தான் இருக்க முடியும்ன்னு என் மனசுக்குப்படுது. நீங்க உயிரோட இல்லைன்னா யார்க்கு லாபம்ங்கிறதை யோசனை பண்ணிப் பார்த்தீங்களா...?"

"ம்... இப்பவும் யோசனை பண்ணிக்கிட்டுத்தான் இருக்கேன். யாரையும் என்னால் சந்தேக வட்டத்துக்குள்ளே கொண்டுட்டு வர முடியலை..."

"உங்க கணவர் இறந்து இப்போ எத்தனை வருஷம் இருக்கும்...?"

"நாலு வருஷம்..."

"உங்களுக்கும் உங்க மகன் மனோவுக்கும் டெர்ம்ஸ் இப்போ எப்படியிருக்கு...?"

"அதே பழைய கண்டிஷன்தான். அவன்தான் ஆஸ்திரேலியப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு சிட்னியில் செட்டிலாயிட்டானே... என்னிக்காவது ஈ-மெயில் பண்ணி சௌக்கிய மான்னு கேட்பான். நானும் அதுக்கு வேண்டா வெறுப்பா ரிப்ளை பண்ணுவேன். மத்தபடி அவனால எந்த ப்ராப்ளமும் கிடையாது..."



"உங்க பிசினஸோட மெயின் காம்படீட்டர் யாரு...?"

"நிறைய பேர் இருக்காங்க..."

"குறிப்பிட்டு யாரையாவது சொல்ல முடியுமா?"

"அப்படி யாரையும் சொல்ல முடியாது. அப்படிச் சொன்னா அது பிசினஸ் ரீதியா சில பாதிப்புகளை உண்டாக்கும். அதுவுமில்லாமே பிசினஸ்ல ஜெயிக்கிறதுக்காக என்னை யாரும் கொலை செய்ய நினைக்க மாட்டாங்க."

"எனக்கொரு சந்தேகம் மிஸஸ் வசுந்தரா..."

"என்ன..."

"அந்த கஜா உங்களை கலவரப்படுத்தறதுக்காக இப்படியொரு காரியத்தை ஏன் பண்ணியிருக்கக் கூடாது?"

"அதனால அவனுக்கு என்ன லாபம்...?"

"ஏதோ ஒரு லாபம் இருக்கப்போய்த்தான் பண்ணியிருக்கான்... கஜாவை க்ளோஸா ஃபாலோ அப் பண்ணினா இந்த விவகாரத்துல வெளிச்சம் கிடைக்கலாம்."

"டொக்...டொக்..."

அறைக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு வசுந்தரா குரல் கொடுத்தாள்.

"எஸ்..."

சுஜாதா குளிர்பான டம்ளர்களோடு உள்ளே வந்தாள். மேஜையின் மேல் டம்ளர்களை வைத்துவிட்டுக் கேட்டாள். "வேற ஏதாவது வேணுமா மேடம்...?"

"ஒன்னும் வேண்டாம்... நீ கிளம்பு."

"மேடம்...! நிக்கல்ஸன் கம்பெனிக்கு ஒரு ஃபேக்ஸ் செய்தி கொடுக்கணும்ன்னு சொல்லியிருந்தீங்க?"

"எல்லாத்தையும் நாளைக்குப் பார்த்துக்கலாம். கொஞ்சம் யர்லியரா வந்துரு..."

"எஸ் மேடம்..." சொன்ன சுஜாதா லிஃப்டில் கீழே இறங்கி, ஆள் நடமாட்டம் அற்ற காரிடாரில் நடந்து லேடீஸ் டாய்லெட்டுக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டு, மார்புக்கு நடுவில் கையைக்

கொண்டு போய், செல்போனை எடுத்து உயிர்ப்பித்தாள். எண்களைத் தட்டிவிட்டுக் காத்திருக்க... மறுமுனையில் ஆண் குரல் ஒலித்தது.

"சொல்லு..."

"அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேல் பேசிக் கொண்டிருக்கிறார்."

"பேச்சை ஓவர் ஹியர் பண்ண முடிந்ததா...?"

"இல்லை..."

"முயற்சி செய்து பார்."

"முயற்சி செய்தால் மாட்டிக் கொள்ள நேரிடும். பரவாயில்லையா...?"

"மாட்டிக் கொள்வது முட்டாள்தனம்."

"அந்த முட்டாள் தனத்தைச் செய்ய நான் விரும்பவில்லை. வசுந்தரா என்னை புறப்பட்டு போகச் சொல்லிவிட்டாள். இனி நான் ஆபீஸில் இருக்க முடியாது."

"எய்த் கலர் ஆஃப் ரெயின்போ பற்றி ஏதாவது க்ளூ கிடைத்ததா...?"

"இல்லை..."

"நாட்கள் போய்க் கொண்டிருக்கிறது. சீக்கிரம் தகவல் கிடைத்தால் பரவாயில்லை..."

"நீங்கள் அவசரப்படுவதுபோல் நான் இங்கே அவசரப்பட முடியாது...! கொஞ்சம் நிதானியுங்கள். நான் சுதாரித்துக் கொள்ள வேண்டிய விஷயங்கள் வண்டி வண்டியாய் இருக்கிறது. வானவில்லின் எட்டாவது நிறம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க நிறைய பொறுமையும் அவகாசமும் வேண்டும்."

"அஸிஸ்டண்ட் கமிஷனர் தனவேல் இன்னமும் வசுந்தராவிடம் பேசிக் கொண்டிருக்கிறாரா...?"

"ஆமாம்..."

"சரி! நீ வீட்டுக்குக் கிளம்பு. தனவேல் விவகாரத்தை நாளைக்குப் பார்த்துக் கொள்வோம்."

சுஜாதா செல்போனை அணைத்து ஜாக்கெட் ப்ளவுசுக்குள் தள்ளி மறைத்துக் கொண்டு டாய்லெட் கதவைத் திறந்து வெளிப்பட்டாள்.

வசுந்தரா நின்றிருந்தாள்.



"கஜா..."

பான் கடைக்கு முன்பாய் போட்டிருந்த பெஞ்சில் உட்கார்ந்து பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த கஜா, குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். நேரம் ராத்திரி பத்தரை மணி.

நொண்டி தியாகு வேகமாய் வந்து கொண்டிருந்தான். உடம்பில் பதட்டம். கண்களில் பயம்.

"என்னடா."

"கஜா...! உன்னைத் தேடிக்கிட்டு போலீஸ் வருது."

"போலீஸா...?"

"ம்..."

"எதுக்கு...? ஒரு வாரமா எந்த தப்பும் பண்ணலையே...?"

வாயில் இருந்து பான் சாற்றை உமிழ்ந்துவிட்டு லுங்கியைத் தூக்கிக் கட்டியபடி எழுந்தான்.

போலீஸ் ஜீப் ஹெட்லைட் வெளிச்சத்தை வாரியிறைத்தபடி கஜாவுக்குப் பக்கத்தில் வந்து நின்றது.

இன்ஸ்பெக்டர் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் கீழே குதித்து அவனை நெருங்கினார்கள். இன்ஸ்பெக்டர் தன் கையில் வைத்திருந்த லட்டியால் அவன் தோளைத் தொட்டார்.

"நீ தானே கஜா...?"

"ஆமா... சார்..."

"போய் ஜீப்ல ஏறு..."

"எதுக்கு சார்...?"

"உன்னைக் கொஞ்சம் விசாரிக்க வேண்டியிருக்கு..."

"எந்த ஸ்டேஷன்...?"

"பி-போர்..."

"வாங்க! போகலாம்..." வாயில் இருந்த பான் சாற்றை ரோட்டோரமாய் உமிழ்ந்துவிட்டு, ஜீப்பின் பின்பக்கம் போய் தாவி ஏறிக் கொண்டான் கஜா.

ஜீப் கிளம்பி வேகம் பிடித்து ரோட்டைத் தேய்த்தது.

இரண்டு நிமிஷ மௌனமான பயணத்துக்குப் பிறகு கஜா கேட்டான்.

"கேஸ் என்னான்னு தெரிஞ்சா பரவாயில்லை."

இன்ஸ்பெக்டர் அவனுடைய முகத்தைப் பார்த்தார்.

"இன்னிக்கு சாயந்தரம் அஞ்சு மணி சுமார்க்கு நீ விட்ஜியார் கெமிக்கல் கம்பெனிக்கு போயிருந்தியா?"

கஜா சிரித்தான்.

"ஓ! அந்த விவகாரமா...? ஆமா போயிருந்தேன்."

"கம்பெனி எம்.டி.வசுந்தராவைப் பார்த்துப் பேசினியா?"

"ஆமா... சார்..."

"எதுக்காக அவரைப் பார்க்கப் போனே...? என்ன பேசினே...?"

"மேடம் ஒண்ணும் சொல்லலையா சார்?"

"அவங்க சொன்னது இருக்கட்டும். நீ என்ன பேசினே... அதைச் சொல்லு...?"

"மேடத்தை கொலை பண்றதுக்காக ஒரு பார்ட்டி எனக்கு பேரம் பேசின விஷயத்தைச் சொல்லி அவங்களை அலர்ட் பண்ணினேன்..."

"அலர்ட் பண்ணியா...?"

"ஆமா...சார்..."

"இது துரோகம் இல்லையா...?"

"துரோகமா...?"

"ம்... துரோகம்தான்...! கையில் அஞ்சு லட்சத்தை வாங்கிட்டு, நீ சொன்னபடி கொலை செய்யாமே பார்ட்டிக்கு டிமிக்கி கொடுத்தா அதுக்கு என்ன பேரு...?"

ஜீப் வேகமாய் இருட்டில் போய்க் கொண்டிருக்க...

**கஜாவின் தலைக்குள் ஏவுகணை ஒன்று பறந்தது.**

**'இவர்கள் உண்மையான போலீஸ் கிடையாது.'**



## 4

ஜீப் இருட்டில் வேகமாய்ப் போய்க் கொண்டிருக்க இன்ஸ்பெக்டர் யூனிபார்மில் இருந்தவன் திரும்பி பார்த்துச் சிரித்தான்.

"என்ன கஜா! பேச்சையே காணோம்?"

"என்னை இதுவரைக்கும் யாரும் ஏமாத்தினது கிடையாது. இன்னிக்கு உங்க போலீஸ் உடுப்பப் பார்த்து ஏமாந்துட்டேன். நீங்கள்லாம் யாரு...? எதுக்காக என்னை இப்படி கூட்டிக்கிட்டு போறீங்க?"

ஜீப் ரோட்டோரமாய் ஒதுங்கி ஒரு பெரிய புளிய மரத்துக்குக் கீழே போய் நின்று இருட்டோடு கலந்தது. ஜீப்பின் உள்விளக்கு போடப்பட, மெல்லிய வெளிச்சம் பரவியது.

இன்ஸ்பெக்டர் யூனிஃபார்மில் இருந்தவன், தன் கையில் வைத்திருந்த லத்தியால் கஜாவின் மோவாயை நிமிர்த்தினான்.

"நீ இப்படி துரோகம் பண்ணலாமா கஜா?"

"இது துரோகம் கிடையாது. ஒரு பெண்ணை கொலை செய்ய என் மனசாட்சி இடம் கொடுக்கலை..."

"உனக்கு இதில் இஷ்டம் இல்லாத பட்சத்தில் மௌனமாய் விலகி நின்றிருக்கலாமே...! எதுக்காக வசுந்தராதேவிகிட்ட போய்ச் சொன்னே...?"

"அவங்க உயிரைக் காப்பாத்த நினைச்சேன்."

"இப்ப உன்னோட உயிர்க்கு ஆபத்து வந்துடுச்சே...!"

கஜா நிமிர்ந்தான். லத்தி அவனுடைய மார்பைக் குத்தியது. "என்ன பார்க்கிறே.. நீ ஒரு கூலிப்படைதான். ப்ரொபஷனல் கில்லர். உன்னோட ப்யூட்டி பணத்தை வாங்கிக்கிட்டு நாங்க காட்ற ஆளைக் கொலை பண்ண வேண்டியவன். அதை விட்டுட்டு... நீ எங்களையே..."

"இதோ பார்... நா... ஒண்ணும் உன் வீட்டு வேலைக்காரன் கிடையாது. பணத்துக்காக கொலை செய்யற ப்ரொபஷனல் கில்லர்தான் நான்... அதுக்காக

காரண காரியம் பார்க்காம கத்தியை எடுக்கிற ஆள் கிடையாது. இதுவரைக்கும் நான் நாலஞ்சு கொலைகள் பண்ணியிருக்கேன். எல்லாமே நியாயமான கொலைகள். ஒருத்தன் பொம்பளைப் பொறுக்கி. ரெண்டு பேர் சாக்கடைப் புழுக்களைக் காட்டிலும் கேவலமான அரசியல்வாதிகள். ஒருத்தன் கள்ளச் சாராய வியாபாரி. கடைசியா நான் கொலை பண்ணினது ஒரு ஃபைனான்ஸ் கம்பெனி அதிபரை. பொதுமக்களோட கோடிக்கணக்கான பணத்தைத் தன் பணமா நினைச்சு தன்னோட பொண்டாட்டி பேர்லேயும், ரெண்டு வப்பாட்டி பேர்லேயும் எழுதி வெச்சவன். இப்படி நான் பண்ணின எல்லா கொலைகளுக்கும் பின்னாடி ஒரு சரியான காரணம் இருக்கு.

ஆனா வசந்தராதேவியைக் கொல்ல ஒரு காரணமும் இல்லை. நான் வெளியே விசாரிச்சளவில் அந்தம்மாவைப் பத்தி யாரும் தப்பு சொல்லலை. கணவன் இறந்த பிறகு அவர் விட்டுட்டுப்போன கெமிக்கல் கம்பெனியை நல்ல முறையில் நிர்வாகம் பண்ணிட்டு வர்றாங்க... யார்க்கும் எந்தத் தொந்தரவும் தராத ஒரு பெண்ணை எதுக்காக...கொலை பண்ணனும்...?"

"ஒரு ப்ரொபஷனல் கில்லர்க்கு கொஞ்சம்கூட மனிதாபிமானம் இருக்கக் கூடாது. பட் உனக்கு இருக்கு. இது தப்பு. பெரிய தப்பு. நானும் ஒரு ப்ரொபஷனல் கில்லர்தான். உன்னைவிட்டு வசந்தராதேவியை யார் கொல்லச் சொன்னாங்களோ, அவங்க இப்போ என் கிட்ட வந்திருக்காங்க. புதிய பேரம். உன்னைத் தீர்த்துக்கட்ட ஒரு லட்ச ரூபாயை கை நீட்டி வாங்கிட்டேன். இப்ப... என்ன சொல்றே...?"

இன்ஸ்பெக்டர் வேஷப் பேர்வழியின் கையில் இப்போது பிஸ்டல் ஒன்று ஜனனமாகியிருக்க, சுஜாவின் உடம்பிலிருந்த அத்தனை மில்லியன் செல்களும் போர்க்கவசம் பூண்டன.

ஒரு மைக்ரோ செகண்ட் விநாடிதான்!

சுஜா ஜீப்பினின்றும் எம்பி வெளியே குதித்து ரோட்டுச் சரிவில் உருண்டான். சடடென்று இருட்டில் கலந்து ஓட ஆரம்பிக்க, ஜீப்பில் இருந்த மூன்று



பேரும் அதே விநாடி ஜீப்பிலிருந்து குதித்துத் துரத்த ஆரம்பித்தார்கள்.

**பா**ர்த்துக் கொண்டிருந்த டி.வி. சீரியல் பொறுமையைச் சோதிக்கவே ரிமோட் ஸ்டிக்கை உபயோகித்து டி.வி. திரையை இருட்டாக்கிவிட்டு வால் க்ளாக்கில் நேரம் பார்த்தாள் சுஜாதா. மணி ராத்திரி பத்தேமுக்கால்.

அணிந்திருந்த நைட்டியின் முடிச்சை இறுக்கிக் கொண்டு எழ முயன்றவள், வாசலில் அழைப்பு மணி ஒலித்ததும் எழுந்துபோய் கதவின் வியூ பைண்டரில் வலது கண்ணை வைத்து வெளியே பார்த்தாள்.

ஜெர்க்கின் கோட்டும் தலைக்குத் தொப்பியும் அணிந்த அந்த நபரைப் பார்த்ததும் பதட்டமாய்க் கதவைத் திறந்தாள்.

ஜெர்க்கின் கோட் ஆசாமி வாயில் புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டை கீழே போட்டு பூட்ஸ் காலால் நசுக்கிக் கொண்டே புன்னகையோடு கேட்டான்.

"என்ன சுஜி..! தூங்கிட்டியா...?"

"இல்ல.... தூங்கலாமான்னு யோசனை பண்ணிட்டிருக்கும்போது நீங்க வந்துட்டீங்க. உள்ளே வாங்க..."

அவன் உள்ளே வந்தான். சுஜாதா கதவைச் சாத்தி தாழிட்டாள்.

"இந்த நேரத்துல உங்களை நான் எதிர் பார்க்கலை. போன் பண்ணியிருக்கலாமே...?"

"நேர்ல பார்த்துப் பேச வேண்டிய விஷயம் இது. அப்படியே ஒரு ஃபைல் குறிப்பும் கிடைச்சது. கொண்டு வந்துட்டேன்."

"அப்படியா... அது என்ன ஃபைல் குறிப்பு?"

அவன் ஜெர்க்கின் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து அந்தக் கம்ப்யூட்டர் ப்ரிண்ட் அவுட் தாளை எடுத்துக் கொடுத்தான்.

"இதை இப்படிப்படிக்க வேண்டாம். கொஞ்சம் டைம் எடுத்து நிதானமா படிச்சுப்பாரு. வான வில்லோட எட்டாவது நிறம் என்னவாயிருக்கு

மென்கிறதுக்கான க்ளு கிடைக்கும். கஷ்டப்பட்டு சேகரிச்ச குறிப்பு பத்திரமா வெச்சுக்க சுஜி...!"

சுஜாதா அதை வாங்கி மேஜையின் இழுப் பறைக்குள் போட்டுவிட்டு அவனுக்கு எதிராக உட்கார்ந்து கொண்டாள். அவன் கேட்டான்.

"அஸிஸ்டண்ட் கமிஷனர் தனவேல் எத்தனை மணிக்கு கம்பெனியை விட்டுப் போனார்...?"

"தெரியலை...! வசுந்தரா என்னைப் போகச் சொல்லிட்ட பின்னாடி நான் கம்பெனியில் இருக்கிறது சரியில்லையே."

"வசுந்தரா உன்னை பூர்ணமா நம்பறாளா?"

"ம்... நம்பறா... சில சமயம் என்னை ஓரம் கட்டிடுவா...புரிஞ்சுக்க முடியலை. அன்னிக்கு சாயந்தரம் அவகிட்ட மாட்டிக்க இருந்தேன்..."

"மாட்டிக்க இருந்தியா...?"

"ம்..."

"எப்படி...?"

"வசுந்தரா என்னை வீட்டுக்குப் புறப்பட்டு போகச் சொன்னதும், கீழே டாய்லெட்டுக்கு வந்து நம்ம பாஸுக்குப் போன் பண்ணினேன். போன் பண்ணிட்டு டாய்லெட் கதவைத் திறந்துக்கிட்டு வெளியே வர்றேன்... வசுந்தரா வெளியே நின்னுட்டிருக்கா..."

"அ..அப்புறம்...?"

"ஒரு விநாடி எனக்குத் தூக்கிவாரிப் போட்டுடுச்சு. என்னை ஸ்மெல் பண்ணிட்டாளோன்னு நினைச்சேன். ஆனா அவளோட பர்சனல் டாய்லெட் யூஸ் பண்ண முடியாத கண்டிஷனில் இருந்ததால கீழே இருக்கிற டாய்லெட்டுக்கு வந்திருக்கா... விஷயம் தெரியறப்ப எனக்கு வேர்த்து விறுவிறுத்துப் போயிடுச்சு..."

"எதுக்கும் நீ கொஞ்சம் ஜாக்கிரதையாவே இரு சுஜி... நாம எவ்வளவுதான் கெட்டிக்காரத்தனமா செயல்பட்டாலும் ஏதாவது ஒரு சின்ன விஷயம் நம்மைக் கவிழ்க்க வைத்துவிடும்... பி... கேர்ஃபுல்..."

சுஜாதா புன்னகைத்தாள்.



"என்னைப் பத்தின கவலையே உங்களுக்கு வேண்டாம். பாஸ் போட்டுக் கொடுத்த திட்டப்படி எல்லாமே ஸ்மூத்தா போயிட்டிருக்கு..."

"அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேல் எதுக்காக வந்திருப்பார்ன்னு நீ நினைக்கிறே...? டெஸ்ட் பண்ணிப்பாரேன்."

"பார்த்துட்டேன். எதுவும் பிடிபடலை. நாளைக்குக் கம்பெனிக்குப் போனாலாவது ஏதாவது தகவல் கிடைக்கலாம்."

"அதிகப்படியான முயற்சி வேண்டாம். உன்னோட மூவ்மெண்ட்ஸ் கேஷுவலா இருக்கட்டும்..."

"எனக்கு இன்னும் ஒரு வாரம் டயம் போதும். வானவில்லோட எட்டாவது நிறம் என்னங்கிறதை கண்டுபிடிச்சுடுவேன்..."

ஜெர்க்கின் கோட் எழுந்து கொண்டான்.

"இந்த வார்த்தைபோதும். பை..த..பை.. உன்னோட காதல் எப்படியிருக்கு...?"

"ரொம்ப ஆரோக்கியமா..."

"பேர் என்ன..?"

"ராகவ்."

"ஒரு நாளைக்குப் பார்க்கணும். அறிமுகப்படுத்தி வையேன்..."

"இப்ப வேண்டாம்... எட்டாவது நிறம் கிடைக்கட்டும். மேரேஜ் இன்விடேஷனையே உங்க கையில் குடுத்துடுறேன். நான் இப்படி ஒரு காரியத்துல ஈடுபட்டிருக்கிறது ராகவ்க்கு தெரிஞ்சா, அவர் இடிஞ்சு போயிடுவார். அவரையும் நான் ஜாக்கிரதையா டீல் பண்ணிட்டிருக்கேன்..."

"இட்ஸ்... ஓ.கே... நான் கிளம்பட்டுமா! பாஸ் வெய்ட் பண்ணிட்டிருப்பார்...." ஜெர்க்கின் ஆசாமி எழுந்து ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்ட விநாடி....

டெலிபோன் அடித்தது.

"அது பாஸ்தான்" என்றான் ஜெர்க்கின்.

சுஜாதா போய் ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

"இச்..." ஒரு முத்தம் சத்தமாய் கேட்டது.
"யா...யாரு...?"
"யாரா... என்னைத் தவிர உனக்கு எவன் முத்தம் கொடுப்பான்...?"

மறுமுனையில் ராகவ் சிரித்தான்.

## 5

சுஜாதாவின் முகம் சந்தோஷத்தில் ஒரு பெரிய சூர்யகாந்திப்பூ வாய் மாறியது.

"ராகவ்... நீயா?"

"நானே... நானே...!"

"என்னடா இந்த நேரத்துல போன்...?" சுஜாதாவுக்கு அதிக சந்தோஷம் வந்தால், ராகவ்க்கு 'டா' பட்டம்தான் கிடைக்கும்.

"டி.வி.யில் மந்த்ராவைப் பார்த்தேன். உடனே உன்னோட ஞாபகம் வந்துடுச்சு...!"

"டேய்...! உதை விழும்...! சேனலை மாத்து டிஸ்கவரி சானலுக்குப்போ... இல்லேன்னா ஆட்டோ பிடிச்சு வந்து உதைப்பேன்..."

ஜெர்க்கின் ஆசாமி தான் புறப்படுவதாக சைகை காட்ட, ரிஸீவரின் வாயை இடது கை விரல்களால் பொத்திக் கொண்டாள் சுஜாதா.

"இது ராகவ்! நீங்க புறப்படுங்க. நாளைக்கு ஆபீஸ் நிலவரம் பார்த்துட்டு உங்களை செல்லில் காண்டாக்ட் பண்றேன்."

ஜெர்க்கின் சிரித்தான். "உன்னோட காதல் விவகாரத்தில் நம்ம விஷயத்தை மறந்துடாதே...!"

"அதெப்படி மறப்பேன்...?"

"ஓ.கே...ஸீ...யூ..." ஜெர்க்கின் சிகரெட் புகையோடு வாசல் கதவைத் திறந்து கொண்டு வெளியேறிவிட சுஜாதா ரிஸீவர்க்கு உதட்டைக் கொடுத்தாள்.

"சொல்லு... ராகவ்...!"

"ட்வெண்ட்டி செக்கண்ட்ஸ் எங்கே காணாமே போயிட்டே?"

"யாரோ கதவைத் தட்டற மாதிரி இருந்தது. போய்ப் பார்த்துட்டு வந்தேன்."



"சொல்லிட்டுப் போயிருக்கலாம் இல்லையா...? நான் ஹலோ ஹலோன்னு கத்தி தொண்டையில் லேசாய் ஒரு விரிசல்."

"வீட்ல பெரிகால் இருக்கா...?"

"இருக்கு..."

"ஒட்டிக்கோ..."

"சுஜிக்கண்ணு...! இன்னிக்கு நீ ரொம்பவும் சந்தோஷமா இருக்கே போலிருக்கு?"

"ஆமா...! ஆமா...!"

"அந்த சந்தோஷத்தை நான் இப்ப கெடுக்கட்டுமா?"

"அபிஷ்ட்டு...! என்னடா சொல்றே...?"

"நாளைக்கு காலை ஃபர்ஸ்ட் ஃப்ளைட்ல நான் கொல்கத்தாவுக்குப் பறக்கணும்..."

"எ...எதுக்கு...?"

"ஹெட்டாபீஸ்ல வரச் சொல்லியிருக்காங்க... ஏதோ எக்ஸிக்யூட்டிவ்ஸ் மீட்டாம்."

"அடப்பாவிங்களா...? போய்ட்டு எப்ப ரிட்டர்ன்?"

"எப்படியும் ஒரு வாரமாயிடும்..."

"கண்டிப்பா ஒரு வாரமாயிடுமா?"

"ஆமா..."

"அப்படீன்னா என்னோட கை வளையல்களையெல்லாம் கழட்டி வெச்சுட வேண்டியதுவன்."

"ஏன்...?"

"உன்னைப் பிரிஞ்சு இருக்கிற ஒரு வாரப் பிரிவுல என் கையெல்லாம் மெலிஞ்சு போய் போட்டிருக்கிற வளையல் எல்லாம் கழண்டு விழுந்துடுமே...?"

"இந்த சங்ககால கப்ஸாவெல்லாம் என்கிட்ட வேண்டாம். நீ எப்பேர்ப்பட்ட 'டக்கால்ட்டி பார்ட்டி'ன்னு எனக்குத் தெரியாதா...? ஒரு வாரத்துக்கு நீ ஜாலியா இருப்பே...! மவுண்ட்ரோட்ல ஒரு தியேட்டர் விடாமே ஈவினிங் ஷோ பார்ப்பே..."

"அய்யோ... பொய்யி...! பொய்யி...!"

"சரி...! கொல்கத்தாவிலிருந்து உனக்கு என்ன வாங்கிட்டு வரட்டும்...?"

"ரசகுல்லா...

"எத்தனை டின்...?"

"நான் என்ன உன்னை மாதிரி தின்னிப் பண்டாரமா? ஒன்னு போதும்டா...!"

"சரி... நான் கொல்கத்தாவிலிருந்து திரும்பற வரைக்கும் நீ அடிக்கடி நினைச்சு சிரிக்கக்கிற மாதிரி ஒரு 'ஏ' ஜோக் சொல்லட்டுமா...?"

"வேண்டாண்டா... நீ எந்த 'ஏ' ஜோக்கை சொன்னாலும், அது வயித்தைக் குமட்டும். டெலிபோன் உடனே கூவமா நாறும்... ரிஸீவரை வெச்சுட்டு போய்ப் படு..."

"சின்னதா ஒரே ஒரு ஜோக்...!"

"மவனே... ஒர்ர்ர்ரே அடி...! ஒழுங்கா கொல்கத்தாவுக்குப் போய்ட்டு வா."

"ஒரு 'இச்' கிடையாதா...?"

"தமிழ் சினிமா பார்த்துப் பார்த்து நீ ஒரு டைப்பாவே மாறிட்டே ராகவ். உன்னைக் கொஞ்சம் செதுக்க வேண்டியிருக்கு. இந்த 'இச்' தர்றது, வாங்கறது எல்லாமே ஜெமினிகணேசன் காலத்து காதல், அரதப் பழசு... உனக்கு சந்தோஷம் வர்ற மாதிரி ஒரு காரியம் பண்ணட்டுமா?"

"பண்ணு... பண்ணு..."

"நாளைக்கு உனக்கு ஃப்ளைட் எத்தனை மணிக்கு?"

"எட்டு இருபத்தஞ்சுக்கு..."

"நான் ஏர்போர்ட்டுக்கு வந்து உன்னை செண்ட் ஆப் பண்றேன்..."

"ஹுர்ர்ர்ரே...! நிஜமாவா...?"

"நிஜமோ... நிஜம்...செவன் தர்ட்டிக்கெல்லாம் ஏர்போர்ட்ல இருப்பேன். சந்தோஷப்பட்டுக்கிட்டே போய்த் தூங்கு. குட்நைட் பேட் ட்ரீம்ஸ்..."

சுஜாதா ரிஸீவரை கவிழ்த்து விட்டு நகர முயன்ற விநாடி, மறுபடியும் டெலிபோன் அடித்தது.

எடுத்தாள்.

காதுக்கு ரிஸீவரைக் கொடுத்தாள். முகம் மாறி பவ்யமானாள்.

"சொல்லுங்க... பாஸ்...!"



இரவு பதினோரு மணி.

வசந்தராதேவியின் பங்களா மெல்லிய இருட்டில் மூழ்கியிருக்க, காம்பெளண்ட் கேட் அருகேயும் போர்டிகோவிலும் ரைஃபிள்ஸ் தாங்கிய போலீசார் லேசர் பார்வைகளோடு தெரிந்தார்கள்.

அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேலின் கார் பங்களாவுக்குள் நுழைந்ததும், அட்டென்ஷனுக்கு வந்து, தளர்ந்தார்கள். காரினின்றும் இறங்கிய தனவேல் சற்று தூரத்தில் வாக்கி டாக்கியோடு நின்றிருந்த சீஃப் செக்யூரிட்டி ஆபீஸர் தாமஸை கையசைத்துக் கூப்பிட்டார்.

"மிஸ்டர் தாமஸ்!"

அவர் பூட்ஸ் சத்தத்தோடு ஓடி வந்தார். அட்டென்ஷனுக்குப் போய் சுனீர் என்று சல்யூட் வைத்தார்.

"டிட் யூ கெட் எனி ட்ரேஸ்...?"

"ஸோ ஃபார்... நாட் ஃபவுண்ட் சார்..."

"பி கேர் ஃபுல். டைட் செக்யூரிட்டி கொடுத்தா மட்டும் போதாது. மித மிஞ்சிய அலர்ட்னஸ் வேண்டும். ஒரு விநாடி அலட்சியமாக இருந்தாலும் நாம் தோற்றுப் போய்விடுவோம். யுவர் ஸ்க்வாட் ஷுட் பி அலர்ட் கம்மிங் எவ்ரி செக்கண்ட்ஸ்."

"எஸ்...சார்..."

தனவேல் போர்டிகோ படிகள் ஏறி அழைப்பு மணிக்கு வேலை கொடுக்க, நிமிஷ நேரத்துக்குப் பிறகு கதவு திறந்தது.

வசந்தராதேவி கலக்கம் பரவிய முகத்தோடு நைட் கவுனில் நின்றிருந்தாள். கண்களில் மெல்லிய படலமாய் பயம்.

"வாங்க... ஏ.சி.சார்!"

தனவேல் உள்ளே நுழைந்து கதவைச் சாத்தினார். வசந்தரா கேட்டாள்.

"சுஜா கிடைச்சானா...?"

"கிடைக்கலை... ப்ராப்பரா அவன் எந்த ஏரியான்னு தெரியலை. ஒரு ப்ரொபஷனல் கில்லர் அவ்வளவு சுலபமா போலீஸ் கைக்கு கிடைச்சுட மாட்டான். எப்படியும் விடியறதுக்குள்ளே கண்டு

பிடிச்சுடுவோம்... அவன் கைக்குக் கிடைச்சாத்தான் உங்களைக் கொலை செய்ய நினைக்கிற கும்பல் யார்ன்னு தெரியும்..."

"அவங்க யார்னு தெரியாத வரைக்கும் எனக்குத் தூக்கம் கிடையாது ஏ.சி. சார்..."

"நான் இப்போ இங்கே வந்ததுக்கு காரணம் கைவசம் வேற திட்டம் ஒண்ணு இருக்கு மேடம்."

வசுந்தராதேவி நிமிர்ந்தாள்.

"என்ன திட்டம்...?"

"தரமணியில் உங்களுக்கு ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருக்கு இல்லையா...?"

"ஆமா..."

"அந்த கெஸ்ட் ஹவுஸுக்கு நீங்க போயிடறது பெட்டர்."

"எப்போ...?"

"இப்பவே...!"

"எப்படிப் போக முடியும் ஏ.சி.சார்...? என்னோட எதிரிகள் இப்பக்கூட இந்த வீட்டை கண்காணிச்சுட்டு இருக்கலாம். நான் வெளியே போய் போர்டிகோவில் நின்னுட்டிருக்கிற காரில் ஏறினால் தெரிஞ்சுடுமே...!"

தனவேல் புன்னகைத்தார்.

"பங்களாவுக்கு முன்பக்கமா போனாத்தானே தெரியும்?"

"பின்னே எப்படிப் போறது...?"

"பின்பக்க வழியா..."

"கார்...?"

"அங்கே இந்த நிமிஷம் இருட்டில் ஒரு கறுப்பு அம்பாசிடர் கார் வெயிட் பண்ணிக்கிட்டிருக்கு. அதுவும் போலீஸ் டிபார்ட்மெண்ட்டோட கார்தான். டெப்டி போலீஸ் கமிஷனர் சித்தார்த் உங்களுக்காக காரில் வெயிட் பண்ணிக்கிட்டிருப்பார்."

"நான் கெஸ்ட் ஹவுஸுக்குப் போய் தங்கறதால என்ன பிரயோஜனம் ஏ.ஸி.சார்...?"

"எதிரிகள் நீங்க இந்த வீட்ல இருக்கிற மாதிரி நினைச்சுக்கிட்டு செயல்பட்டுக்கிட்டு இருப்பாங்க. அதுல சில விஷயங்கள் வெளியாகலாம்."



"கெஸ்ட் ஹவுஸ்ல எனக்குப் பாதுகாப்பு கிடைக்குமா...?"

"கண்டிப்பா...! அங்கே ஷேடோ செக்யூரிட்டி என்கிற நிழல் பாதுகாப்பு வளையம் உங்க கெஸ்ட் ஹவுஸைச் சுத்தியும் போடப்பட்டிருக்கும். பட் அவங்க யார் கண்ணுக்கும் தெரியமாட்டாங்க... உங்களுக்கு ஏதாவது ஒரு ஆபத்துன்னா அந்த நிமிஷமே மின்னல் வேகத்துல அவங்க செயல்படுவாங்க. நீங்க எதுக்கும் பயப்பட வேண்டியது இல்லை."

"ஏ.ஸி.சார்... இந்தப் பிரச்சினையை நீங்க எப்படி டீல் பண்ணினாலும் சரி... ஒத்துழைப்பு கொடுக்க நான் தயாராயிருக்கேன்."

"நான் இங்கே வீட்ல இருக்கும்போதே நீங்க பங்களாவின் பின்பக்க வழியா போய், அங்கே வெய்ட் பண்ணிட்டிருக்கிற கார்ல ஏறிக்குங்க. நேரா உங்க கெஸ்ட் ஹவுஸ் போயிடுங்க. உங்க எதிரிகளைக் கண்டுபிடிக்கிற வரை நீங்க அங்கேயே ரெண்டு நாளைக்கு இருக்கணும். ஆபீஸுக்கும் போக வேண்டாம்."

தலையசைத்த வசுந்தராதேவி இரண்டு மாற்றுடைகளை எடுத்து ப்ரீஃப்கேஸில் வைத்துக் கொண்டு பங்களாவின் பின்பக்கக் கதவை நோக்கி நடந்தாள்.

தனவேல் பின் தொடர்ந்தார்.

"கெஸ்ட் ஹவுஸில் வாட்ச்மேனைத் தவிர வேற வேலைக்காரங்க யாரும் இல்லையே மேடம்...?"

"இல்லை..."

பங்களாவின் பின்பக்கம் இருட்டோடு வந்தது. தோட்டத்துக்கு மத்தியில் நடந்து, அந்த பழங்கால மரக்கதவை நெருங்கினார்கள்.

சற்று சிரமப்பட்டு கதவைத் திறந்தாள் வசுந்தராதேவி.

வெளியே பரவியிருந்த கரி இருட்டில், அந்தக் கறுப்பு அம்பாசிடர் திருட்டுத்தனமாய் நின்றிருந்தது.

# 6

இருட்டோடு இருட்டாய் கலந்து நின்றிருந்த கறுப்பு அம்பாசிடர் காரை நெருங்கினாள் வசுந்தரா. காருக்குள் உட்கார்ந்திருந்த டெப்டி போலீஸ் கமிஷனர் சித்தார்த் கதவைத் திறந்துவிட்டார்.

"ப்ளீஸ்... கெட் இன் மேடம்..."

வசுந்தரா உள்ளே போய் பின் சீட்டுக்கு சாய்ந்ததும் கார் புறப்பட்டது.

சித்தார்த் சொன்னார். "மேடம்...! ரெண்டே நாள் நீங்க உங்க தரமணி கெஸ்ட் ஹவுஸில் இருந்தா போதும். அதுக்குள்ளே எதிரிகளை நாங்க ஸ்மெஷ் பண்ணிடுவோம். கெஸ்ட்ஹவுஸ்ல இப்ப யார் இருக்காங்க...?"

"வாட்ச்மேன் மட்டும்தான்..."

"வேற வேலைக்காரங்க...?"

"யாரும் கிடையாது."

"வாட்ச்மேன் பேர் என்ன...?"

"துரையப்பன்..."

கார் மெயின் ரோட்டுக்கு வந்து வேகம் பிடித்து தரமணி இருந்த திசை நோக்கி புல்லட்டாய் பாய்ந்தது.

"வாட்ச்மேன் துரையப்பன் உங்க நம்பிக்கைக்கு உரிய நபர்தானே...?"

"ஆமா! பத்து பன்னிரெண்டு வருஷமா வேலைக்கு இருக்கான். இதுவரைக்கும் ஒரு தப்புத்தண்டா பண்ணினது கிடையாது..."

"நீங்க அங்கே அடிக்கடி போய் தங்கறது உண்டா...?"

"இல்லை... மாசத்துக்கு ஒரு தடவை போனாலே அதிகம். அஃபிஷியல் விஷயமா வெளியூரிலிருந்து வர்ற பிசினஸ் பார்ட்டிகளுக்காகக் கட்டப்பட்ட கெஸ்ட் ஹவுஸ் அது..."

வசுந்தரா சொல்லிக் கொண்டிருக்கும்போதே காரில் பொருத்தப்பட்டிருந்த வயர்லெஸ் கரகரத்தது.



டிரைவர் வயர்லெஸ் ஹேண்ட் செட்டை எடுத்து சித்தார்த்திடம் கொடுக்க, அவர் ரிஸீவரை காதுக்குப் பொருத்திக் கொண்டு மைக்ரோ போனில் பேச ஆரம்பித்தார்.

"யெஸ்... நான் சித்தார்த்..."

"சார்... திஸ் ஈஸ் ஹெட்க்வார்ட்டர்ஸ் கண்ட்ரோல் ரூம்..."

"என்ன? கஜா பற்றி ஏதாவது தகவல் கிடைச்சுதா...?"

"கிடைச்சுது சார்... அவனை போலீஸ் ஜீப்ல வந்து யாரோ கூட்டிக்கிட்டுப் போனதாகத் தகவல்..."

"போலீஸா...?"

"ஆமா சார்..."

"அப்படிக் கூட்டிக்கிட்டுப் போனதா எந்த ஸ்டேஷனில் இருந்தும் தகவல் இல்லையே... என்கொயர் பண்ணிப் பார்த்தீங்களா?"

"பார்த்தோம் சார். பாஸிடிவ் ரிப்ளை வரலை. கஜாவைக் கூட்டிக்கிட்டுப் போனது போகஸ் போலீஸ் ஆட்களாக இருக்கலாம்."

"அவங்களைக் கண்டுபிடிக்க என்ன ஸ்டெப்ஸ் எடுத்து இருக்கீங்க...?"

"சிட்டி முழுக்க இப்போ பெட்ரோலிங் ஸ்க்வாட் ரோந்து போயிட்டிருக்கு சார்... ஸ்டேட் பவுண்ட்ரீஸ்களில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு செக்கிங் நடந்துக்கிட்டு இருக்கு..."

"தீஸ் ஆர் ஆல் ஃபார்மாலிட்டீஸ், எனக்கு வேண்டியது ரிசல்ட். அட் எனி காஸ்ட் கஜா நம்ம கைக்குக் கிடைச்சாகணும்... அதுவும் விடியறதுக்குள்ளே...!"

"எஸ்...சார்..."

"ரிசல்ட் கிடைக்காம என்னை வயர்லெஸ்ஸில் காண்ட்ராக்ட் பண்ண வேண்டாம்..." கோபமாய் வயர்லெஸ்ஸை அணைத்த சித்தார்த்த வசுந்தராவை கவலையாய் ஏறிட்டார்.

"திங்க்ஸ் ஆர் கோயிங் டு பி ஸீரியஸ். போகஸ் போலீஸ் ஆட்கள் கஜாவை சாதுர்யமா கடத்திக் கிட்டுப் போயிருக்காங்க..."

வசந்தராவின் கண்களில் பயம் பரவியது.

"எம்மேல யார்க்கு என்ன கோபம்னு தெரியலையே... நடக்கிற சம்பவங்களைப் பார்த்தா பயமாயிருக்கு."

"நோ... மேடம்...! நீங்க பயப்பட வேண்டியது இல்லை. போலீஸுக்கு நீங்க சரியானபடி ஒத்துழைப்பு கொடுத்தா போதும். எதிரிகள் யார்ங்கிறதை இந்த ராத்திரி விடியறதுக்குள்ள கண்டுபிடிச்சுடலாம்."

"சுஜாவை எதுக்காகக் கடத்திக்கிட்டுப் போயிருப்பாங்க..."

"உங்களைக் கொலை செய்ய ஏவப்பட்டவன், உங்களுக்கே உதவி பண்ணினது எதிரிகளுக்குப் பிடிக்கலை. போலீஸ் மாதிரி வந்து கொண்டு போயிருக்காங்க."

கார் சென்னையின் போக்குவரத்தற்ற சாலைகளில் விரைந்து தரமணியை நெருங்கிய போது மணி சரியாய் பன்னிரண்டு.

கெஸ்ட் ஹவுஸ், பங்களா மரங்களுக்கு மத்தியில் யார்க்கோ பயந்த மாதிரி உட்கார்ந்திருந்தது. கார் கேட்டுக்கு முன்பாக நின்று ஹார்ன் கொடுக்க உள்ளேயிருந்த வாட்ச்மேன் டார்ச் வெளிச்சத்தோடு ஓடி வந்தான். கேட்டை திறக்காமலேயே வெளிச்சத்தை காரின் மேல் அடித்துக் குரல் கொடுத்தான்.

"யாரது...?"

வசந்தரா எட்டிப் பார்த்தாள். "துரை...! கேட்டை திறந்துவிடு..."

துரையப்பன் பதட்டமாகி கேட்டின் பூட்டை விடுவித்து அகலமாய் திறந்து வைக்க, கார் உள்ளே போய் லானின் ஓரமாய் பயணித்து போர்டிகோவில் போய் என்ஜின் சத்தத்தை நிறுத்திக் கொண்டது. வாட்ச்மேன் துரையப்பன் கேட்டை மறுபடியும் பூட்டிவிட்டு காருக்குப் பின்னாலேயே ஓடி வந்தான்.

காரிலிருந்து வசந்தராவும் சித்தார்த்தும் இறங்கினார்கள்.

"துரை..."



"அம்மா..."

"பங்களாவைத் திற..."

சாவியோடு போர்டிகோ படிகள் ஏறி பிரதான தேக்கு மரக்கதவுக்குப் போனான்.

"நான் இங்கே ரெண்டு நாளைக்கு தங்கப் போறேன். இந்த விஷயம் வெளியே யார்க்கும் தெரியக்கூடாது..."

"சரிங்கம்மா..."

தேக்குக் கதவை அடைகாத்திருந்த பெரிய கனமான பித்தளைப் பூட்டுக்கு விடுதலை கொடுத்தான் துரையப்பன். கதவைத் திறந்து வைக்க இருவரும் உள்ளே போனார்கள். சுவரில் இருந்த ஸ்விட்சுகள் தேய்க்கப்பட்ட பங்களாவின் உட்பரப்பு வெளிச்சத்தில் நிரம்பியது.

"அம்மா... ஒரு போன் பண்ணி விபரம் சொல்லியிருந்தா பங்களாவை சுத்தம் செஞ்சி வெச்சிருப்பேன்."

"பரவாயில்ல துரை...! நீ கேட்டுக்குப் போ. உன்னோட இன்டர்காம் ஒர்க் பண்ணுதா...?"

"ஒர்க் பண்ணுதும்மா..."

"ஏதாவது தேவைப்பட்டா... நான் கூப்பிடறேன்."

"சரிங்கம்மா..." தலையாட்டிவிட்டு நகர முயன்ற துரையப்பனை கையசைப்பால் நிறுத்தினார் சித்தார்த்.

"இதோ பார்...! எங்களை கேட்காம உள்ளே யாரையும் அலவ் பண்ணக்கூடாது. சந்தேகப்படும்படியான நபர்கள் வீட்டுப்பக்கமா திரிஞ்சா உடனே எனக்குத் தகவல் கொடுக்கணும்..."

துரையப்பன் மிரண்டு போய் தலையாட்டினான்.

"சரிங்கய்யா..."

"நீ போய் உன்னோட வேலையைக் கவனி..."

அவன் போய்விட, சித்தார்த்த வசந்தராவிடம் திரும்பினார். "மேடம்! நீங்க போய் ரெஸ்ட் எடுங்க."

"நீங்க...?"

"செக்யூரிட்டி சம்பந்தப்பட்ட வேலைகளையெல்லாம் நான் அரேஞ்ச் பண்ணணும். இன்னிக்கு

நான் தூங்க முடியாது. அந்த டெலிபோனை நான் யூஸ் பண்ணிக்கலாமா...?"

"தாராளமா!"

"உங்க பெட்ரூம் மேலேயா...? கீழேயா...?".

"கீழேதான்...! அதோ அந்த கார்னர் ரூம்..."

"தென்... நோ ப்ராப்ளம். ரூமை உள் பக்கமா லாக் பண்ணிட்டு படுத்துக்குங்க. எனக்கு ஏதாவது தகவல் சொல்லணும்னா இன்டர்காம்ல காண்டாக்ட் பண்ணுங்க..."

"என் ஒருத்தியால உங்க எல்லார்க்கும் தொந்தரவு..."

"நோ...நோ... இது எங்க டிபார்ட்மெண்ட்டோட கடமை. உங்களை மாதிரியான வி.ஐ.பி.களுக்கு ஒரு ஆபத்து ஏற்பட்டா அது எங்களுக்குத்தான் அவமானம்..."

வசுந்தரா சில விநாடிகள் மௌனமாய் நின்றுவிட்டு தன் படுக்கையறையை நோக்கிப் போனாள்.

படுக்கையறைக்குள் நுழைந்து ட்யூப்லைட்டை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த வசுந்தரா, கதவை உட்பக்கமாய் லாக் செய்து கொண்டு படுக்கையில் வந்து சாய்ந்தாள். பயம் இருதயத்துக்குள் இரும்பை வைத்த மாதிரி கனத்தது. அந்த நள்ளிரவில் நெற்றி சொதசொதப்பாய் வியர்த்தது. தொண்டை காகிதம் போல் உலர்ந்திருந்தது.

யோசித்தாள்.

'என்னுடைய மரணத்தில் யார்க்கு என்ன லாபம்?'

'பிசினஸ் ரைவல்ஸ் பிசினஸ் ரீதியாய் தொந்தரவு கொடுப்பார்களே தவிர, கொலை செய்கிற அளவுக்கு கீழே போகமாட்டார்கள்...!'

யோசிக்க யோசிக்க வசுந்தராவுக்கு சர்வாங்கமும் வியர்த்தது. வியர்வையில் ஏற்கெனவே ஊறியிருந்த முகம் பிசுபிசுத்தது. காற்றை உஷ்ணமாய் உணர்ந்தாள்.

'முதலில் முகத்தை சோப்பு போட்டு அலம்ப வேண்டும்.'

எழுந்தாள்.



படுக்கையறையை ஒட்டியிருந்த அந்த அட்டாச் பாத்ரூமின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனாள்.

வாஷ்பேஷினை நோக்கி நடந்தவளின் பார்வை எதேச்சையாய் தண்ணீர் இல்லாத பாத் டப்புக்குப் போக கண்கள் அப்படியே நிலைத்தன.

பாத்டப்புக்குள் யாரோ ஒருக்களித்து படுத்து இருப்பது தெரிந்தது. ரத்தக்களரியோடு ஒரு ஆண்.




**வ**சுந்தரா பாத் டப்பை விழிகள் விரியப் பார்த்துக் கொண்டே பின்வாங்கினாள். இதயத்துடிப்பு தாளம் மாறியிருக்க வேகவேகமாய்ப் போய் இன்டர்காமின் ரிஸீவரைத் தொட்டு எடுத்துக் கொண்டாள். வியர்த்த விரலால் ஒரு பட்டனைத்தட்ட மறுமுனை மெலிதாய் சிணுங்கியது.

வெளியே சென்ட்ரி வேலையில் ஈடுபட்டிருந்த சித்தார்த் ரிஸீவரை எடுத்தார்.

"எஸ்..."

"நான்... நான்...வ...வ...வசுந்தரா..."

"சொல்லுங்க மேடம்..."

"உடனே என்னோட ரூமுக்கு வாங்க..."

"ஏதாவது பிரச்சனையா மேடம்...?"

"எஸ்...! பாத் டப்புக்குள்ள யாரோ விழுந்து கிடக்கிறாங்க..."

சித்தார்த் சுவாசிக்க காற்று கிடைக்காமல் திணறினார்.

"பாத் டப்பில் யாரோ விழுந்து கிடக்கிறாங்களா?"

"ஆமா...உடனே வாங்க..."

சித்தார்த் ரிஸீவரை வைத்துவிட்டு வசுந்தரா இருந்த அறையை நோக்கி ஓடினார்.

வசுந்தரா அறை வாசலிலேயே தவிப்போடு எதிர்கொண்டாள்.

"வாங்க..." குளியலறைக்குக் கூட்டிக் கொண்டுப் போய் பாத்டப்பைக் காட்ட சித்தார்த் வேகமாய்ப் போய் குனிந்து பார்த்தார்.

ஒரு இளைஞனின் உடல் பாத் டப்புக்குள் அவஸ்தையான கோணம் ஒன்றில் படுக்க வைக்கப் பட்டிருக்க, டப் சுவர்களில் ரத்தம் கோடுகோடாய் வழிந்து உறைந்து போயிருந்தது. கைகளுக்கு கர்ச்சீஃபை சுற்றிக் கொண்டு உடலை அசைத்து மல்லார்த்தினார் சித்தார்த்.

முப்பது வயது இளைஞன். தலையில் ஒரு மூர்க்கமான ரத்தக்காயம் தெரிந்தது. தலைமுடி ரத்தத்தில் நனைந்து திரித்திரியாய் காட்சியளிக்க, நாசித்துவாரங்களில் கெட்டித்துப் போன கருஞ்சிவப்பு ரத்தம். உடுத்தியிருந்த பேண்ட்டும் சர்ட்டும் கிழிபட்டிருந்தது.

"மேடம்..! பக்கத்துல வாங்க..." சித்தார்த் கூப்பிட வசந்தரா கலக்கத்தோடு நடந்து வந்தாள். அவர் கேட்டார்.

"இவன்தான் கஜாவா?"

"இல்லை..."

"பின்னே யாரு..?"

"எனக்குத் தெரியாது... இதுக்கு முந்தி இவனைப் பார்த்ததுகூட கிடையாது."

"நல்லாப் பார்த்துச் சொல்லுங்க மேடம்..! தகுந்த காரணம் இல்லாம அவன் உங்க பாத்டப் வரைக்கும் வந்திருக்கமாட்டான்..."

"ஸாரி..! அவன் யார்னு எனக்குத் தெரியலை. பூட்டியிருக்கிற இந்த கெஸ்ட்ஹவுஸுக்குள்ளே இப்படி ஒரு காரியம் எப்படி நடந்ததுன்னும் தெரியலை..."

"கெஸ்ட் ஹவுஸ் சாவி யார்கிட்ட இருக்கும்...?"

"வாட்ச்மேன் துரைகிட்டதான்..."

"அப்படீன்னா அவனுக்குத் தெரியாம இப்படி ஒரு காரியம் நடந்திருக்க வாய்ப்பில்லை..." சொன்ன சித்தார்த் குளியலறையிலிருந்து வெளிப்பட்டு இண்டர்காமில் அவனைத் தொடர்பு கொண்டார்.

"துரை! கேட்டைப் பூட்டிக்கிட்டு உள்ளே வா..."



"இப்ப வர்றேன்யா..."

ஒரு ஐந்து நிமிஷ அவகாசத்துக்குப் பிறகு துரை தயக்கமாய் வந்து அறை வாசலில் நின்றான்.

"அய்யா..."

"உள்ளே வா..."

அறைக்குள் நிலவிய இறுக்கத்தைப் பார்த்து மிரண்டு போன துரை அங்குலம் அங்குலமாய் நடை பெயர்ந்து உள்ளே வந்தான். சித்தார்த் கேட்டார்.

"இந்த கெஸ்ட்ஹவுஸ் பங்களாவோட சாவி உன்கிட்ட மட்டும்தானே இருக்கும்..?"

"ஆமாங்கய்யா..."

"அம்மாவைத் தவிர வேற யாராவது இந்த கெஸ்ட் ஹவுஸுக்கு வந்து போறாங்களா...."

"அப்படி யாரும் வர்றலங்க இல்லீங்கய்யா..."

"வந்துட்டு போறதா எனக்குத் தகவல்..."

"எம் புள்ளமேல சத்தியமா அப்படியெல்லாம் கிடையாதுங்கய்யா..."

"பொய் சத்தியம் போடாதே..!"

"அய்யா... எனக்கு பொய் பேசத் தெரியாதுங்க... என்னைப் பத்தி அம்மாவுக்கு எல்லாந் தெரியும்...! உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ற கேவலமான பிறவி நான் இல்லீங்கய்யா..."

"உனக்குத் தெரியாம இந்த வீட்டுக்குள்ளே ஒரு ஈ எறும்பு கூட நுழைய முடியாதுன்னு சொல்றே. அப்படித்தானே..?"

"ஆமாங்கய்யா..."

"சரி... அந்தக் குளியலறைக்குள்ள போய்ப் பார். டப்புக்குள்ளே யார் படுத்திருக்காருன்னு பார்த்துட்டு வா."

துரையின் கண்களில் பயம்.

"அ-அய்யா..."

"ம்...போய்ப் பார்த்துட்டு வா...! பார்த்துட்டு வந்ததும் மத்ததைப் பார்க்கலாம்..."

துரை இரண்டு பேர்களையும் ஒரு தயக்கப் பார்வை பார்த்துவிட்டு குளியலறையை நோக்கி

மெல்லப் போனான். நடையில் ஒரு பாறாங்கல்லின் கனம் தெரிந்தது.

குளியலறைக் கதவை நெருங்கியவன் அதை மெல்லத் தள்ளி உள்ளே எட்டிப் பார்த்தான். முகம் இருட்டுக்குப் போய் சித்தார்த்தைத் திரும்பிப் பார்த்தான்.

"அ...அ...அய்யா... அது யாருங்க...?"

"நீதான் சொல்லணும்...! இன்னும் உள்ளே போய்ப் பாரு... அப்பத்தானே அவன் யார்னு உனக்குத் தெரியும்?"

துரை சில விநாடிகள் தயங்கிவிட்டு குளியல் அறைக்குள் நுழைந்தான். சில விநாடிகள் கழித்து வெளிப்பட்ட அவன் முகத்தில் கலவரம் நிகழ்ந்து கொண்டிருந்தது. உடம்பில் நடுக்கம்.

சித்தார்த் கேட்டார்.

"அவன் யார்னு இப்ப தெரிஞ்சுதா?"

"தெரியலீங்கய்யா..."

"எப்படி உள்ளே வந்தான்...? எப்படி செத்தான்...?"

"தெரியலீங்கய்யா..."

சித்தார்த் குரலை உயர்த்தினார். "இதோ பார் துரை...! நீ இப்படி எல்லாத்துக்கும் 'தெரியலை தெரியலை'ன்னு சொல்லி தப்பிச்சுக்க முடியாது. இந்த கெஸ்ட்ஹவுஸுக்கு நீ வாட்ச்மேன். எல்லா சாவியும் உன்னோட கையில்தான் இருக்கு. உன்னைத்தாண்டி யாரும் உள்ளே போயிருக்க முடியாது. ஆனா போயிருக்காங்க. எப்படிப் போனாங்க...?பணம் வாங்கிட்டியா...?"

துரை மண்டி போட்டு உட்கார்ந்து இரண்டு கைகளையும் உயரத் தூக்கிக் கும்பிட்டான். கண்கள் நீரை உகுக்க கதறினான்.

"அய்யா...! சத்தியமா எனக்கு எதுவுமே தெரியாதுங்க... யாரோ எப்படியோ உள்ளே பூந்து இப்படி ஒரு காரியத்தைப் பண்ணியிருக்காங்க. என்னை நம்புங்கய்யா."

வசுந்தரா சித்தார்த்தை ஏறிட்டாள்.

"துரை மேல எனக்கு நம்பிக்கையிருக்கு. அவன் எனக்கு துரோகம் பண்ண நினைக்கமாட்டான். நீங்க



இந்த விவகாரத்தை வேற கோணத்துல டீல் பண்றது பெட்டர். இந்த கெஸ்ட் ஹவுஸுக்குப் பின்பக்கம் பாதுகாப்பு அவ்வளவு சரியில்லை. கொஞ்சம் குட்டையான காம்பௌண்ட் சுவர். யார் வேணும்ன்னாலும் சுலபமா தாண்டி குதிச்சு உள்ளே வரலாம். சிறிய முயற்சி எடுத்துக்கிட்டாலே போதும். ஏதாவது ஒரு சன்ஷேடை பிடிச்சு மொட்டை மாடிக்குப் போயிடலாம். மொட்டை மாடியில் இருக்கிற க்ரில் கதவைத் திறக்கிறதும் அவ்வளவு பெரிய விஷயம் கிடையாது."

சித்தார்த் துரையிடம் திரும்பினார்.

"உன்கிட்ட டார்ச் இருக்கா...?"

"இருக்குங்கய்யா..."

"எடுத்துக்கிட்டு முன்னாடி நட. மொட்டை மாடிக்குப் போய்ப் பார்ப்போம்."

வசுந்தராவும் அவர்களோடு கிளம்பினாள். மூவரும் டார்ச் வெளிச்சத்தோடு மாடிப்படியில் ஏறி அதன் உச்சிக்கு வந்தார்கள். மொட்டை மாடிக்குப் போகும் வழியை க்ரில் கேட் கனமாய் அடைத்து இருந்தது.

கேட்டை உலுக்கிப் பார்த்தார் சித்தார்த். அது அசையவில்லை.

"இந்த க்ரில் கேட்டை அவ்வளவு சுலபத்துல உடைக்க முடியும்ன்னு எனக்குத் தோணலை. பூட்டு அப்படியே இருக்கு. பாத்டப்பில் கிடக்கிறவன் இந்த வழியா வந்திருக்க முடியாது. கெஸ்ட் ஹவுஸோட பின்பக்க வழியாத்தான் வந்து இருக்கணும்... வாங்க... பின்பக்க கதவைப் போய்ப் பார்ப்போம்."

போனார்கள்.

பின்பக்க கதவு பெரிய பூட்டோடு பழுதில்லாமல் இருந்தது. நாலடி ஸ்கொயர் ஃபீட் பரப்பளவுக்கு சுவரில் பொதிந்து தெரிந்தது.

"ரெண்டு பக்கமும் வழி அடைபட்டிருக்கும்போது அவன் எப்படி உள்ளே வந்தான்?"

"துரை ஏமாந்து இருக்கும்போது முன்பக்க வழியாக அவன் வந்திருக்கலாம்..." வசுந்தரா சொல்ல துரை தீர்க்கமாய்த் தலையாட்டி மறுத்தான்.

"இல்லீங்கம்மா...! என் கண்ணுல படாம அவன் உள்ளே போயிருக்கவே முடியாது."

சித்தார்த் பெருமூச்சுவிட்டார். "ஃபாரன்ஸிக் வந்து இந்த கெஸ்ட் ஹவுஸை அங்குலம் அங்குலமாய் கிளறிப் பார்த்தாத்தான் இவன் எப்படி உள்ளே வந்தான்ங்கிற கேள்விக்கு விடை கிடைக்கும். இந்த கேஸோட அடுத்த கட்டம் ஃபாரன்ஸிக்குக்கு போன் பண்ண வேண்டியதுதான். ஆனாலும் நாம காலம் கடத்திக்கிட்டு இருக்க முடியாது..."

மூன்று பேரும் குளியலறைக்கு வந்தார்கள். பாத் டப்பில் அந்த ஆளின் உடல் மல்லாந்து தெரிய சித்தார்த் டெலிபோனை தொட்டு ரிஸீவரை எடுத்துக் கொண்டு டயலில் எண்ணைத் தட்டினார். பேச ஆரம்பித்தார்.

"ஹலோ... ஃபாரன்ஸிக் விங்...?"

பேச்சு தொடர்ந்தது.

சரியாய் பதினைந்து நிமிடம்.

ஒரு ஃபாரான்ஸிக் ஸ்க்வாட் வந்து சேர்ந்தது. மொத்தம் ஏழு பேர். அதில் ஒருவர் டாக்டர் வின்சென்ட்.

சித்தார்த் அவரை ஏறிட்டார்.

"டாக்டர்...! இவன் கொலை செய்யப்பட்ட நேரத்தை கொஞ்சம் துல்லியமா கணிச்சு சொல்ல முடிஞ்சா அது பல கேள்விகளுக்கு விடையாக இருக்கும்."

வின்சென்ட் தலையாட்டிவிட்டு பாத் டப்புக்குள் குனிந்து அந்த இளைஞனின் உடலை பரிசோதிக்க ஆரம்பித்தார்.

முழுமையாய் ஒரு நிமிடம்.

டாக்டர் நிமிர்ந்தார்.

"மிஸ்டர் சித்தார்த்..."

"சொல்லுங்க டாக்டர்..."

"இவன் இன்னும் சாகலை... உயிரோடுதான் இருக்கான். உடனடியா ஹாஸ்பிட்டலைஸ் பண்ணினா காப்பாத்திடலாம்..."



## 8

டாக்டர் வின்சென்ட் சொன்னதைக் கேட்டு சித்தார்த்தின் நெற்றிப் பரப்பு ஆச்சர்யக் கோடுகளை உயர்த்தச் செய்தது.

"இவன் இன்னும் சாகலையா...?"

"இல்லை! பல்ஸும், ஹார்ட் பீட்டும் இன்னும் நொண்டிக்கிட்டு இருக்கு. உடனடியா ஹாஸ்பிட்டலுக்குக் கொண்டு போனா உயிர் பிழைக்க நாற்பது சதவீதம் வாய்ப்பு இருக்கு..."

"பக்கத்துல எந்த ஹாஸ்பிட்டல் இருக்கு?"

வசுந்தரா குறுக்கிட்டு சொன்னாள். "அடுத்த தெருவோட ரெண்டாவது க்ராஸ் கட்டில் சுபிட்சா க்ளீனிக் இருக்கு. அவர் எனக்குத் தெரிஞ்ச டாக்டர்தான். பேரு பாலசுப்பிரமணியன். நம்ம காரிலேயே கொண்டு போயிடலாம்."

"மேடம்...! நீங்க அந்த டாக்டருக்கு போன் பண்ணி விவரத்தைச் சொல்லிடுங்க. நாங்க இவனை கார்க்கு கொண்டு போயிடறோம்." சித்தார்த் சொல்லிவிட்டு செயலில் இறங்க, வசுந்தரா டெலிபோனை நோக்கிப் போனாள். டைரியில் நம்பர் பார்த்துக் கொண்டு டயலில் எண்ணைத் தட்டினாள்.

சுபிட்சா க்ளீனிக் நள்ளிரவு வேளையிலும் பேஷண்ட்களின் நடமாட்டத்தோடு ஏராளமான ட்யூப் லைட்களின் உதவியோடு வெளிச்சமாய்த் தெரிந்தது.

க்ளீனிக்கிற்கு பின்புறம் டாக்டர் பாலசுப்ரமணியத்தின் பங்களா. வசுந்தரா போன் செய்து சொல்லியிருந்ததால் அவர் தூக்கத்தை பாதியில் ரத்து செய்துவிட்டு வேஷ்டி சட்டையில் வந்து காத்துக் கொண்டிருந்தார்.

காரிலிருந்து இறக்கப்பட்ட உடல் ஸ்ட்ரெச்சர் மூலமாக ஐ.ஸி.யூனிட்டுக்கு கொண்டு போகப்பட, டாக்டர் பின்தொடர்ந்து உள்ளே போனார்.

வசுந்தராவும் சித்தார்த்தும் நாற்காலிகளில் உட்கார்ந்து விநாடிகளைப் போக்கிக் கொண்டிருக்க ஹாஸ்பிட்டலுக்கு வெளியே செண்ட்ரி போலீஸ் நிழலுருவங்களாய் இயங்கியது.

"மேடம்..!" குரலைத் தாழ்த்திக் கொண்டு சித்தார்த் பேசினார். "உங்களுடைய எதிரிகள் தீர்மானமாய் செயல்பட்டுக்கிட்டு இருக்காங்க.. அவங்களை நாங்க 'ட்ரேஸ்' பண்ணிப் பிடிக்கிற வரைக்கும் நீங்க ஏதாவது ஒரு வெளியூருக்குப் போய் பாதுகாப்பா தங்கிட்டா என்ன...?"

"எதிரிகளோட பார்வை இருபத்தி நாலு மணி நேரமும் என் மேலேயே இருக்கும்போது நான் எங்கேயிருந்தாலும் ஒண்ணுதான். போலீஸ் பாதுகாப்பை மட்டும் கொஞ்சம் டைட் பண்ணுங்க போதும்."

"ஏற்கெனவே டைட் பொஸிஷனில்தான் இருக்கு. உங்களை யாரும் நெருங்க முடியாது." சித்தார்த் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே டாக்டர் பாலசுப்ரமணியன் ஐ.ஸி.யூனிட்டிலிருந்து வெளிப்பட்டார்.

"டாக்டர்..."

இருவரும் எழுந்தார்கள்.

"ப்ளீஸ் கம் வித்...மீ... உங்ககிட்டே கொஞ்சம் பர்சனலாபேச வேண்டியிருக்கு."

தொடர்ந்தார்கள்.

பாலசுப்ரமணியன் வராந்தாவின் கோடியில் இருந்த தன்னுடைய அறைக்குள் நுழைந்து இருக்கையில் அமர்ந்து கொண்டே எதிர் இருக்கைகளைக் காட்டினார்.

"உட்காருங்க..."

வசுந்தராவும் சித்தார்த்தும் தவிப்போடு உட்கார்ந்தார்கள்.

"டாக்டர்...! அந்த ஆள்...?"

"ஸாரி...! ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி கொண்டு வந்திருந்தால் ஒருவேளை காப்பாத்தியிருக்கலாம்."

"அப்படீன்னா... இப்போ...?"

"ஹி ஈஸ் டையிங்... பல்ஸ் ரேட்டும் ஹார்ட் பீட்ஸும் அதள பாதாளத்துக்குப் போயிட்டிருக்கு. மீறிப் போனால் ஒரு பத்து நிமிஷம் உயிரோடு இருக்கலாம்."



"டாக்டர்...! இந்தப் பத்து நிமிஷத்துக்குள்ளே அவனை கான்ஷியஸ்ஸுக்கு கொண்டு வந்து பேச வைக்க முடியுமா...?"

"நத்திங் டூயிங்...! இம்பாஸிபிள்..! ஹி... ஈஸ் ஆல்மோஸ்ட் டெட். அவன் உடம்பில் சுண்டு விரலைக்கூட அசைக்க முடியாது." சொன்ன டாக்டர் தன் சர்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து மூன்று நசுங்கிய பாஸ்போர்ட் போட்டோக்களை எடுத்து மேஜையின் மேல் போட்டார்.

"இந்த போட்டோக்களைக் கொஞ்சம் பாருங்க."

சித்தார்த் எடுத்துப் பார்த்தார்.

முதல் போட்டோவில் ஒரு வழுக்கைத் தலை மனிதர் கேமராவைப் பார்த்து கஷ்டமாய் சிரித்து வைத்திருந்தார். இரண்டாவது போட்டோவில் ஒரு நடுத்தர வயது நபர் மோவாயை இரண்டு கைகளாலும் தாங்கி போஸ் கொடுத்திருந்தார்.

மூன்றாவது போட்டோவில்...

வசுந்தரா.

போட்டோக்களைப் பார்த்துக் கொண்டு வந்த வசுந்தரா திடுக்கிட்டு போய் முகம் வியர்த்தாள்.

சித்தார்த் கேட்டார்.

"டாக்டர்...!இந்த போட்டோக்கள் உங்களுக்கு எப்படிக் கிடைச்சது...?"

"உள்ளே உயிரை விட்டுக்கிட்டு இருக்கிற அந்த இளைஞனின் சுருட்டிய முழுக்கை சர்ட்டுக்குள் இந்த மூணு போட்டோவும் இருந்தது."

சித்தார்த் வியர்த்துப் போயிருந்த வசுந்தராவின் பக்கமாத் திரும்பினார்.

"மேடம்! இந்த இரண்டு போட்டோக்களில் இருக்கிற நபர்கள் யார்னு உங்களுக்குத் தெரியுமா...?"

வசுந்தரா பார்த்துவிட்டு கலக்கமாய்த் தலையாட்டினாள்.

"யார்னு தெரியலையே...!"

டாக்டர் சொன்னார். "அந்தப் போட்டோக்களைக் கொஞ்சம் திருப்பிப் பாருங்க. ரோமன் லெட்டர்ஸ்ல ஏதோ நம்பர்ஸ் மாதிரி தெரியுது..."

சித்தார்த் போட்டோக்களைத் திருப்பிப் பார்த்தார். IV, III, V, V, VI, VII, IX என்று கிறுக்கலாய் எழுதப்பட்ட ரோமன் எழுத்துக்கள்.

சித்தார்த் பெருமூச்சோடு தாடையைத் தேய்த்துக் கொண்டார்.

"ஒண்ணும் புரியலையே...!"

டாக்டர் சொன்னார்,"எனக்கு லேசா புரியற மாதிரி இருக்கு...! மேடம்! உங்க போட்டோவுக்குப் பின்னாடியிருக்கிற ரோமன் எழுத்துக்களைப் படிங்க..."

வசுந்தரா வாங்கிப் படித்தாள்.

"4, 3, 5, 5, 6, 7, 9..." என்று படித்து முடித்ததுமே "இது என்னோட பர்சனல் போன் நம்பர். இந்த நம்பர் வெளியே யாருக்கும் தெரியாது." சொல்லி பதட்டப்பட்டாள்.

"இது உங்க டெலிபோன் நம்பர். அதே மாதிரி மத்த ரெண்டு போட்டோக்களுக்குப் பின்னாடியிருக்கிற ரோமன் எழுத்துக்கள் அவங்களோட பர்சனல் டெலிபோன் நம்பர்களைக் குறிக்கலாமில்லையா...?"

"சட்டர்ன்லி..."

"டெலிபோன் நம்பர்கள் கிடைச்சா அவங்க யார்ங்கிறதைக் கண்டுபிடிக்கிறதும் சுலபம்தானே...! வழுக்கைத் தலை நபரோட போட்டோவைத் திருப்பி ரோமன் எழுத்துக்களைப் படிங்க."

சித்தார்த் படித்தார.

ஏழு எண்கள் கிடைத்தன.

"இன்னொரு போட்டோவோட ரோமன் எழுத்துக்களையும் படிங்க."

படித்தார்.

ஏழு எண்கள்.

டெலிபோனை நகர்த்தி வைத்தார் டாக்டர். "மிஸ்டர் சித்தார்த்...! டெலிபோன் எக்ஸ்சேஞ்சை காண்டாக்ட் பண்ணி இந்த டெலிபோன் எண்களுக்குரிய நபர்கள் யார்ங்கிறதைக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு உங்களோடது."



ரிஸீவரைக் கையில் எடுத்துக் கொண்டு எக்ஸ்சேஞ்சுக்கு டயல் செய்து தனக்குத் தெரிந்த ஒரு அதிகாரியைப் பிடித்தார் சித்தார்த்.

"கோவிந்தராஜன்! ஒரு ஹெல்ப்"

"சொல்லுங்க..."

"ஒரு கேஸ் சம்பந்தமா ரெண்டு டெலிபோன் நம்பர்ஸ் கிடைச்சிருக்கு..."

"பேரும் அட்ரஸும் வேணும்... அதானே...?"

"அதேதான்..."

"முதல் நம்பர் என்ன?"

வழுக்கைத்தலை நபரின் எண்களைச் சொன்னார் சித்தார்த். ஏழு நிமிடஷம் கழித்து எக்ஸ்சேஞ்சில் இலிருந்து பதில் வந்தது. "அட்ரஸை நோட பண்ணிக்கறீங்களா?"

"ம்... சொல்லுங்க..."

ஜெயவர்த்தன்.

49, பீச்ரோடு, நைன்த் க்ராஸ்,

திருவான்மியூர்.

பெயரையும் அட்ரஸையும் தன் டைரியில் குறித்துக் கொண்ட சித்தார்த் அடுத்த போட்டோவின் பின்புறம் இருந்த டெலிபோன் எண்களைச் சொல்ல, அதற்குள் அடுத்த நிமிஷமே பதில் வந்தது.

புஷ்பகுமாரன்,

டோர் நம்பர் 347-அ

இளங்கோநகர் எக்ஸ்டன்ஷன்,

சாலிகிராமம்.

"தேங்க்யூ கோவிந்தராஜன்..." ரிஸீவரை வைத்துவிட்டு டாக்டரையும் வசுந்தராவையும் ஏறிட்டார்கள் சித்தார்.

"என்ன பண்ணலாம்...! ஜெயவர்த்தன், புஷ்பகுமாரன் இந்த ரெண்டு பேரையும் நேரிடையாய் போய்ப் பார்க்கலாமா... இல்லை போன் பண்ணிப் பார்க்கலாமா...?"

"மொதல்ல போன் பண்ணி பல்ஸ் பார்த்துட்டு அதுக்கப்புறமா போய்ப் பார்க்கிறதுதான் சரின்னு

என் மனசுக்குப்படுது..." டாக்டர் பாலசுப்ரமணியன் சொல்ல சித்தார்த் வசுந்தராவைப் பார்த்தார்.

"நீங்க என்ன சொல்றீங்க மேடம்?"

"டாக்டர் சொல்றதுதான் சரின்னு என் மனசுக்கும் படுது... மொதல்ல இந்த ஜெயவர்த்தன், புஷ்ப குமாரன்... யாரு... எந்தபேக் க்ரெளண்ட்ல இருக்காங்கங்கிறதை ட்ரேஸ் பண்ணனும்..."

சித்தார்த் டெலிபோன் ரிஸீவரை எடுத்துக் கொண்டு எடுத்தார்.

மறுமுனையில் ரிங் போய் உடனே ரிஸீவர் எடுக்கப்பட்டது.

"ஹலோ..." சித்தார்த் குரல் கொடுத்தார்.

"ஹலோ..." மறுமுனையில் ஆண் குரல்.

"மிஸ்டர் ஜெயவர்த்தன் ப்ளீஸ்..."

"நீங்க...?"

"அவரோட ஃப்ரெண்ட்..."

"பேர்..."

"மயில்வாகனன்..."

"இந்த ராத்திரி நேரத்துல எதுக்காக அவருக்கு போன் பண்ணியிருக்கீங்க...?"

"நீங்க யாரு... க்ராஸ் கொஸ்டியன் பண்ணிக்கிட்டு...?"

"இன்ஸ்பெக்டர்..."

"இன்ஸ்பெக்டரா...?"

"எஸ்...! இதோ பாருங்க மயில்வாகனன். நீங்க விஷயம் தெரிஞ்சுதான் போன் பண்றீங்களா...? இல்லை தெரியாம போன் பண்றீங்களா...?"

"என்ன விஷயம்...?"

"ஜெயவர்த்தன் கொலை செய்யப்பட்டிருக்கிறார்."

## 9

டெப்டி போலீஸ் கமிஷனர் சித்தார்த் வசுந்தராவுக்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துவிட்டு திருவான்மியூர் போய்ச் சேர்ந்த போது நேரம் நள்ளிரவைத்



தாண்டி இரண்டு மணியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. சோடியம் வேப்பர் விளக்குகள் யூனிட் கணக்கில் மின்சாரத்தை விழுங்கிக் கொண்டிருக்க, ஆள் அரவமற்ற ரோடுகள் மஞ்சள் பூசிக் குளித்துக் கொண்டிருந்தன.

பீச் ரோட்டின் ஒன்பதாவது குறுக்குத் தெருவில் ஜீப் வருகிற போதே வெளிச்சமாய் அந்த பங்களா தெரிந்தது. வாசலில் ஒரு போலீஸ் ஜீப் சுழலும் சிவப்பு விளக்கோடு நின்றிருந்தது. கொஞ்சம் தள்ளி ஒரு ஆம்புலன்ஸ் வேன்.

சித்தார்த் ஜீப்பை நிறுத்தி விட்டு கீழே இறங்க அந்த இன்ஸ்பெக்டர் ஓடி வந்தார். யூனிஃபார்ம் சட்டையில் குத்தியிருந்த நேம் பேட்ஜ் ஜோதி பாண்டியன் என்று பெயர் சொன்னது. சல்யூட் வைத்து நகர்ந்தார்.

"சார்...!"

சித்தார்த் உள்ளே போய்க் கொண்டே கேட்டார்.

"ஜெயவர்த்தனோட மரணம் எப்படி...?"

"பிஸ்டல் சார் ரெண்டு தோட்டா மார்புல, ரெண்டு தோட்டா வயித்துல..."

"கொலைக்கு என்ன காரணம்...?"

"தெரியலை சார்..."

"ஜெயவர்த்தன் பிஸினஸ் மேனா...?"

"ஆமா சார். கிண்டி தொழிற்பேட்டையில் ரெண்டு இண்டஸ்ட்ரி வெச்சு ரன் பண்ணிட்டிருக்கார்..."

"சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் இருக்கும்...?"

"ஒரு மணி நேரம் இருக்கும் சார்... ப்ளீஸ் கம் திஸ் வே சார்" ஹாலையொட்டியிருந்த மாடிப் படிக்கட்டுகளில் ஏறி ஜோதிபாண்டியன் போக, சித்தார்த் பின்தொடர்ந்தார். படிகளில் ஏறிக் கொண்டிருக்கும்போதே ஒரு பெண்ணின் அழுகைச் சத்தம் காற்றை கீறிக் கொண்டிருந்தது.

"அழறது யாரு...?"

"அவரோட ஒய்ஃப் சார்...பேர் பரிமளா..."

"இந்த வீட்ல வேற யாரெல்லாம் இருக்காங்க?"

"வேற யாரும் கிடையாது சார்... ஜெயவர்த்தனுக்கு குழந்தைகள் கிடையாது."

"இவ்வளவு பெரிய பங்களாவில் அவங்க இரண்டு பேர் மட்டும்தான் இருந்த இருக்காங்க...?"

"ஆமா சார்..."

மாடிப்படிகள் முடிவடைந்து இருக்க, இப்போது அழுகைச் சத்தம் பெரிதாய்க் கேட்டது. ஜோதி பாண்டியன் மாடி வராந்தாவில் நடந்து பக்கத்து அறைக்குக் கூட்டிக் கொண்டு போனார். சுவர்க்கு சாய்ந்து உட்கார்ந்தபடி ஒரு நடுத்தர வயதுப் பெண் அழுது கொண்டிருக்க கட்டிலில் அந்த வழுக்கைத்தலை மனிதர் ரத்தச் சகதியில் கிடந்தார். ஒரு ஃபாரன்ஸிக் அதிகாரியும் ஒரு எஸ்.ஐ.யும் அறையை மார்க்கிங் செய்து கொண்டிருந்தார்கள். சித்தார்த்தை அவர்கள் பார்த்ததும் அட்டென்ஷனுக்கு வந்து சல்யூட் வைத்துவிட்டு தம் பணியைத் தொடர்ந்தார்கள்.

ஜெயவர்த்தனை நான்கு தோட்டாக்கள் ரத்தச் சகதியாக்கியிருந்தன. அணிந்திருந்த நைட்கவுன் ரத்தத்தில் ஊறி உறைந்து போயிருந்தது.

சித்தார்த் ஜோதி பாண்டியனை ஏறிட்டார். "அந்த அம்மாவை என்கொயர் பண்ணீங்களா...?"

"பண்ணினேன் சார்... அவங்களால தெளிவா எதையும் பேச முடியலை. கணவன் கொலை செய்யப்பட்ட அதிர்ச்சியிலிருந்து அவங்க மீளலை"

"கால் ஹர்!"

ஜோதி பாண்டியன் போய் அந்த அம்மாவைக் கூட்டிக் கொண்டு வந்தார். அழுது அழுது கண்கள் சிவப்பேறிப் போயிருக்க உடம்பு ஒரு மெல்லிய நடுக்கத்துக்கு உட்பட்டிருந்தது.

சித்தார்த் குரலில் கனிவைக் கலந்து கொண்டு அவளிடம் குனிந்தார்.

"இதோ பாருங்கம்மா... நீங்க உங்க மனசைத் தேத்திக்கிட்டு கேட்கற கேள்விகளுக்கு பதில் சொன்னாத்தான் கொலையாளி யார்ங்கிறதைக் கண்டுபிடிக்க முடியும்..."

அந்தப் பெண் பரிமளா உதட்டைக் கடித்து அழுகையை அடக்கியபடி தலையாட்டினாள்.

சித்தார்த் கேட்டார்.



"உங்க கணவரைச் சுட்டது யார்னு உங்களுக்குத் தெரியுமா?"

"தெ..தெரியாது..." சொல்லும்போதே பரிமளாவின் கண்களில் புதுநீர் படைஎத்தது.

"சம்பவம் எப்படி நடந்தது...?"

"திடீர்னு அவர் அலர்ற சத்தம் கேட்டு, தூங்கிட்டிருந்த நான் கண் விழிச்சுப் பார்த்தேன். அவர் ரத்தமா துடிச்சிட்டிருந்தார். உடனே நான் எங்க டாக்டருக்கு போன் பண்ணினேன். அவரோட போன் அவுட் ஆஃப் ஆர்டர்னு எக்சேஞ்ச் ரிக்கார்டர் வாய்ஸ் கேட்டது. என் போன் பேசி முடிக்கிற துக்குள்ளே என் கணவரோட துடிப்பு அடங்கிடுச்சு... எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை. அவசர போலீசுக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொன்னதும் போலீஸ் அடுத்த பத்து நிமிஷத்துக்குள்ளே வந்துட்டாங்க..."

"உங்க கணவரை துப்பாக்கியால் சுட்டிருக்காங்க... சத்தம் உங்களுக்கு கேட்கலையா...?"

"கேட்கலை...!"

ஜோதி பாண்டியன் குறுக்கிட்டுச் சொன்னார், "கொலையாளி உபயோகப்படுத்தின துப்பாக்கி சைலன்ஸர் டைப்பாக இருக்கலாம் சார்..."

"பக்கத்து பங்களாவில் யார் இருக்காங்க?"

"யாரும் இல்லீங்க சார்..."

சித்தார்த் மறுபடியும் பரிமளாவிடம் திரும்பினார்.

"மேடம்! உங்களுக்கு வசந்தரான்னு யாரையாவது தெரியுமா?"

"தெரியாது...!"

"விப்ஜியார் கெமிக்கல் கம்பெனிக்கு அந்த வசந்தரா மேனேஜிங் டைரக்டர். கேள்விப் பட்டிருக்கீங்களா?"

"இல்லை..."

"போட்டோவைப் பாருங்க. இவங்கதான் வசந்தரா..." சித்தார்த் போட்டோவை எடுத்துக் காட்ட, பரிமளா பார்த்துவிட்டு தலையாட்டினாள்.

"இவங்களை நான் பார்த்ததே கிடையாது..."

"சரி...! இவரையாவது பார்த்திருக்கீங்களா?" புஷ்பகுமாரனின் போட்டோவை எடுத்துக்காட்டினார் சித்தார்த்.

பரிமளாவின் தலையாட்டியது.

"இல்லை..."

ஜெயவர்த்தனின் போட்டோவை எடுத்து அவளுடைய முகத்துக்கு நேரே பிடித்தார்.

"இது, உங்க கணவர்தானே?"

"ஆமா...! இந்த போட்டோ உங்களுக்கு எப்போ கிடைச்சது...?"

"வசந்தரா, புஷ்பகுமாரன், உங்க கணவர் இந்த மூணு பேரோட போட்டோஸ் ஒருத்தனோட முழுக்கை சர்ட்ல சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. ஆனா அவன் இப்போ உயிரோடு இல்லை. வசந்தராவோட கெஸ்ட் ஹவுஸ் பாத்ரூமில் 'பாத்டப்'புக்குள் அவன் கொலை செய்யப்பட்டுக் கிடந்தான். போட்டோவுக்குப் பின்னாடி ரோமன் எழுத்துகளால் குறிக்கப்பட்டிருந்த டெலிபோன் எண்களை வெச்சுதான் உங்க வீட்டுக்கு போன் பண்ணினேன். அப்பத்தான் ஜெயவர்த்தன் கொலையான விஷயம் இன்ஸ்பெக்டர் மூலமா தெரிந்தது."

பரிமளாவின் முகம் இப்போது திகிலின் நிழலோடு தெரிந்தது.

"பாத்டப்புக்குள்ளே கொலையாகிக் கிடந்த அந்த நபரோட போட்டோ உங்ககிட்ட இருக்கா...?"

"இல்லை... அந்த போட்டோ நாளைக்குக் காலையில் தான் கிடைக்கும்... வசந்தராவையும் கொலை பண்ண ஒரு கும்பல் கஜா என்கிற ப்ரொபஷனல் கில்லரை அமர்த்தி செயல்பட்டது. ஆனா, கஜா வசந்தரா கிட்டே உண்மையைச் சொல்லப்போக இப்போது இவ்வளவு பிரச்சனைகள். கஜாவையும் இப்போ காணோம்..." சித்தார்த் எல்லா சம்பவங்களையும் சொல்லி முடிக்க, ஜோதி பாண்டியன் கவலையான குரலோடு அவரை ஏறிட்டார்.

"சார்...! வசந்தரா, ஜெயவர்த்தன், புஷ்பகுமாரன் இந்த மூணு பேரும் யாரோ ஒருத்தனோட ஹிட்லிஸ்ட்டில் இருக்காங்க... வசந்தராவை கொலை பண்ற முயற்சி தோல்வியடைஞ்சதால ஜெயவர்த்தனை முடிச்சிருக்காங்க."

"பாத்டப்புக்குள்ளே கிடந்தவன் தான் கொலையாளின்னா, அவன் ஏன் கொலை செய்யப் படணும்...?" சித்தார்த் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அந்த ஃபாரன்ஸிக் நபர் பக்கத்தில் வந்து நின்றார்.

"சார்..."

"எஸ்..."

"ஜெயவர்த்தன், தூங்கிக் கொண்டிருந்த நிலையிலேயே துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருக்கிறார்."

"இது பூட்டிய அறை. உள்ளே யார் வந்து இந்தக் கொலையைப் பண்ணியிருக்க முடியும்...?"

"தோட்டாவோட 'ட்ராஜக்டரி பாத்' எதுன்னு கண்டுபிடிச்சுட்டேன் சார்...!"

"எது?"

"அந்த வெண்டிலேட்டர்" கட்டிலுக்கு நேர் எதிரே இருந்த ஸ்லைடிங் கண்ணாடியோடு கூடிய வெண்டிலேட்டரைச் சுட்டிக்காட்டினார் அவர்.

சித்தார்த் வெண்டிலேட்டர்க்குக் கீழே போய் நின்று இரண்டு நிமிடம் அதன் கோணத்தை சரி பார்த்துவிட்டு ஜோதி பாண்டியனிடம் வந்தார்.

"சரி, வெண்டிலேட்டர்க்கு கீழே ஒன்றரையடி அகலத்தில் ஒரு சன்ஷேட் இருக்கு. அந்த சன்ஷேடுக்கு யாராவது போனால்தான் அங்கே வசதியா உட்கார்ந்துகிட்டு துப்பாக்கியால சுடமுடியும். பட் அந்த சன்ஷேடுகுப் போக எந்த மார்க்கமும் இருக்கிற மாதிரி தெரியலையே..."

"மார்க்கம் இருக்கு சார்..." ஃபாரன்ஸிக் நபர் சொல்ல, சித்தார்த் திகைத்தார்.

"எப்படி...?"

"பக்கத்து பங்களா மொட்டை மாடிக்கும் இந்த பங்களாவோட மொட்டை மாடிக்கும் இடையே உள்ள தூரம் ஆறடி மட்டுமே. பக்கத்து பங்களா இப்போ காலியா இருக்கிறதால யாராவது உள்ளே

புகுந்து மொட்டை மாடிக்குப் போய் இந்த மொட்டை மாடிக்குத் தாவியிருக்கலாம்."

"பார்த்துடலாம் வாங்க..."

பராமரிக்கப்படாத புல் தரையில் நடந்து டார்ச் வெளிச்சத்தில் கதவை நெருங்கினார்கள்.

கதவில் கனமாய் அலிகார் பித்தளைப் பூட்டு.

"இந்தப் பூட்டைத் திறக்க முடியாதே..!" சொல்லிக் கொண்டே நம்பிக்கையில்லாமல் பூட்டை இழுத்துப் பார்த்தார் சித்தார்.

அது கையோடு கழன்று கொண்டது.



## 10

கையில் கழன்ற பூட்டோடு சித்தார்த் ஜோதி பாண்டியனைப் பார்த்தார். விழிகளில் வியப்பு உறைந்து போயிருந்தது.

"பூட்டைப் பூட்டின மாதிரியே தொங்க விட்டிருக்காங்க... பூட்டை மாட்டற கொண்டியை ஆக்ஸா ப்ளேடால அறுத்து பூட்டை அப்படியே எடுத்திருக்காங்க..."

"ஆமா சார்.."

"கதவைத் தள்ளுங்க..."

டார்ச் வெளிச்சத்தின் உதவியோடு, கதவு மெல்ல தள்ளப்பட்டது.

அறை அவ்வளவு சுத்தமாக இல்லை. விரித்துப் போட்ட பழைய பேப்பர்கள். சுவரோரமாய் உருண்டு கிடக்கும் காலி பீர் பாட்டில்கள்.

"பூட்டியிருக்கிற இந்த வீட்டுக்குள் யாரோ குடும்பமே நடத்தியிருக்காங்க சார்..."

"ஸோ... கொலையாளி இங்கே சில நாளா தங்கி உளவு பார்த்து அதுக்கப்புறமா ஒரு நேரத்தை செலக்ட் பண்ணி ஜெயவர்த்தனின் உயிரை எடுத்து இருக்கணும்."

"யூ...மே...பி...கரெக்ட் சார். இந்த வீடு காலியா இருக்கப் போய் அது கொலையாளிக்கு வசதியாயிடுச்சு."



"வாங்க... மொட்டை மாடிக்குப் போய்ப் பார்க்கலாம்."

ஹாலின் ஓர் ஓரத்தில் இருந்து வளைந்து போன மாடிப்படிகளில் ஏறினார்கள். மாடிப்படிகளிலும் ஆங்காங்கே சிகரெட் துண்டுகள். காலி சிகரெட் பாக்கெட்டுகள்.

மொட்டை மாடிக்குப் போகும் கிரில் கேட் பாதி திறந்து கிடந்தது.

"இந்தப் பூட்டையும் உடைச்சிருக்காங்க சார்."

"பக்கத்து வீட்டுக்கு சத்தம் கேட்காம இவ்வளவு காரியத்தையும் பண்ணியிருக்காங்க..."

மொட்டை மாடியின் பரப்புக்கு வந்தார்கள். கடல் காற்று எல்லோரையும் வேகமாய் அலம்பிக் கொண்டு போயிற்று. உடன் வந்த ஃபாரன்ஸிக் ஆபீஸர் சொன்னார்.

"பார்த்தீங்களா சார்... ரெண்டு மொட்டை மாடிக்கும் இடையே உள்ள தூரம் ஆறடிக்கும் குறைவாகவே இருக்கு. ட்ரெய்னேஜ் குழாயைப் பிடிச்சிட்டு கீழே இறங்கி அடுத்த பங்களாவோட சிட் அவுட்டுக்கு சுலபமா தாவ முடியும்."

மொட்டை மாடியின் பேராபட் சுவர்க்கு வந்து அதன் விளிம்பில் கைகளை வைத்து மூன்று பேர்களும் குனிந்து கீழே பார்த்தார்கள்.

இரண்டு பங்களாக்களின் சன் ஷேட்களும் முத்தமிட்டுக் கொள்ளும் பக்குவத்தில் நெருங்கித் தெரிந்தன.

"கொலையாளிக்கு ரொம்பவும் வசதியாப் போச்சு. இவ்வளவு துல்லியமா மார்க்கம் இருக்கும்போது ஒரு கொலை என்ன... ஒன்பது கொலை கூட..." சொல்லிக் கொண்டே போனவரின் பேச்சு சட்டென்று நின்றது.

"ஜோதி பாண்டியன்..."

"சார்..."

"என் ரெண்டு உள்ளங்கையிலேயும் ஏதோ பிசுபிசுப்பா ஒட்டுது. டார்ச் வெளிச்சத்தை என் கைக்குக் கொண்டு வாங்க..."

"ஜோதி பாண்டியன் தன் கையில் இருந்த பேனா டார்ச்சை உயிர்ப்பித்து உற்பத்தியான வெளிச்சக்

கற்றையை சித்தார்த்தின் உள்ளங்கைகளுக்குக் கொண்டு போனார்.

செங்கல் நிறத்தில் கொழகொழப்பாய் இரண்டு உள்ளங்கைகளிலும் எதுவோ ஈஷியிருந்தது.

"எ..என்ன சார் இது..?"

"ப்ளட் மாதிரி தெரியுது... பேராபட் சுவர்ல கையை வெச்சேன்... டார்ச்சை அங்கே அடிங்க..."

டார்ச்சின் வெளிச்சம் பேராபட் சுவர்க்குப் போக சுவரில் திட்டுத்திட்டாய் உறைந்தும் உறையாத ரத்தம்.

"எப்படி... இங்கே இவ்வளவு... ரத்தம்...?"

"கொலையாளிக்குக் காயம் ஏற்பட்டு அதன் காரணமா சிந்தின ரத்தமாகவும் இருக்கலாம் சார்... இதை கலெக்ட் பண்ணி லேப் டெஸ்ட்டுக்குக் கொண்டு போனா கொலையாளியோட ப்ளட் க்ரூப் கிடைக்கும்" ஃபாரன்ஸிக் ஆபீஸர் சொல்ல, ஜோதிபாண்டியன் பதட்டமாய் சித்தார்த்தை ஏறிட்டார்.

"சார்...! அந்த புஷ்பகுமாரோட நிலைமை இந்நேரத்துக்கு எப்படியிருக்கும்னு தெரியலை, போய்ப் பார்த்துட்டு வந்துடலாமா சார்..."

"அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேல் இந்நேரம் புஷ்பகுமாரின் வீட்டுக்குப் போயிருப்பார். அங்கே போய் விசாரணையை முடித்துக் கொண்டு இங்கே ஜெயவர்த்தனன் வீட்டுக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறார். அவர் இங்கே வரும்வரை காத்திருப்போம்... இந்த வீட்டை இன்னமும் கொஞ்சம் அலசிப் பார்த்தால் கொலையாளியைப் பத்தின க்ளு ஏதாவது கிடைக்கலாம்... மொதல்ல இந்த ப்ளட்டை வாஷ் பண்ணனும்..."

மொட்டை மாடியின் வலது பக்க ஓரத்தில் அந்தத் தண்ணீர் தொட்டி தெரிய அதை நோக்கிப் போனார் சித்தார்த்.

உயர்த்திக் கட்டப்பட்ட தண்ணீர்த் தொட்டியின் பில்லர்களுக்குக் கீழே இருட்டு மண்டிக் கிடந்தது.

இருபதடி நடந்தவர் சட்டென்று நின்றார். திரும்பிப் பார்த்து ஜோதி பாண்டியனைக் கையசைத்துக் கூப்பிட்டார். அவர் வேகமாய் வந்து பக்கத்தில் நின்றார்.

"சார்..."

"உங்க கையில் இருக்கிற பென் டார்ச்சைக் கொஞ்சம் கொடுங்க..."

கொடுத்தார். சித்தார்த் அந்த டார்ச்சை வாங்கி பட்டனைத் தட்ட வெளிச்சம் வாட்டர் டேங்கிற்குக் கீழே மண்டியிருந்த இருட்டை ஒற்றி எடுக்க.

அந்தப் பெண் அரைநிர்வாண கோலத்தில் ரத்தச் சாயங்களோடு குப்புறக் கிடந்தாள்.

சுற்றிலும் உறைந்து போன ரத்தம்.

**சா**லிக்கிராமம்.

இளங்கோ நகர் எக்ஸ்டென்ஷன். அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேல் அந்த நள்ளிரவு வேளையில் ஜீப்பை விரட்டி 347A எண்ணிட்ட வீட்டைத் தேடிக் கொண்டிருந்தார். கார்ப்பரேஷன் விளக்குகள் அணைந்து போயிருந்த அந்த இருட்டான பகுதியில் வீட்டு எண்ணைக் கண்டுபிடிப்பது சிரமமாக இருந்தது.

"கட்டிப்புடி... கட்டிப்புடிடா" என்று பாடிக் கொண்டிருந்த ஒரு பேக்கரிக்கு முன்பாய் ஜீப்பை நிறுத்திய தனவேல், பிஸ்கெட் ஜாடிகளைத் துடைத்து சுத்தம் செய்து கொண்டிருந்த லுங்கி ஆசாமி ஒருத்தனைக் கூப்பிட்டார். அவன் பாட்டை நிறுத்திவிட்டு ஓடிவந்தான்.

"சார்...?"

"347A நம்பர் வீடு எந்தப் பக்கம்?"

அவன் தன் பிடரியைத் தடவிக் கொண்டு சில விநாடிகள் யோசித்துவிட்டு இடது கைப்பக்கம் காட்டினான்.

"லெஃப்ட்லேயே நேரா போங்க சார்... ரெண்டாவது 'கட்'ல கார்னர் பங்களா வரும். அதான் 347A."

"அந்த வீட்ல யார் இருக்காங்கன்னு தெரியுமா?"

"பேரெல்லாம் தெரியாது சார்... ஆனா டிவி. படம் எடுக்கிறவங்கன்னு சொல்லியிருக்காங்க சார்..."

தனவேல் ஜீப்பை நகர்த்தி லெஃப்டில் ஒடித்துக் கொண்டு ஹெட்லைட் வெளிச்சத்தில் போனார்.

இரண்டாவது கட்டில் அந்த கார்னர் பங்களா பார்வைக்குக் கிடைத்தது.

தனவேல் கேட்டுக்கு முன்பாய் ஜீப்பை நிறுத்திவிட்டு கீழே இறங்க, பங்களாவுக்குள்ளிருந்து அல்சேஷன் குரைத்தது. அவர் கேட்டைத் தொட்டதும் நாயின் குரைப்பு பெரிதாயிற்று. வாசல் கதவைத் திறந்து கொண்டு ஒரு வேலையாள் வெளிப்பட்டான்.

"யாரு..." என்று கேட்டுக் கொண்டே காம்பௌண்ட் கேட்டுக்குப் பக்கத்தில் வந்தவன், தனவேலின் காக்கி யூனிஃபார்மைப் பார்த்துவிட்டு மிரண்டான். தோளில் போட்டிருந்த துண்டு கைக்கு வந்தது.

"அ...அய்யா...!"

தனவேல் கேட்டார்.

"புஷ்பகுமாரன் உள்ளே இருக்காரா?"

"இருக்கார்ங்கய்யா..."

"அவரைப் பார்க்கணும்... கேட்டைத் திற."

பங்களா விஸ்தாரமாய் பரவியிருக்க லான் ஒன்று பச்சை ஜமுக்காளமாய்த் தெரிந்தது.

வரவேற்பறையில் விளக்கைப் போட்டுவிட்டு நாற்காலியொன்றைக் காட்டினான் வேலையாள்.

"உட்காருங்கய்யா...! நான் போய் அய்யாகிட்ட சொல்லிட்டு வர்றேன்..."

தனவேல் நாற்காலியில் சாய வேலையாள் மாடிப்படிகளில் ஏறிப் போனான்.

பத்து நிமிஷம் கழித்து இளம் பெண் நைட் கவுனில் தூக்கம் கெட்ட கண்களோடு வந்தாள். படுக்கைக்குப் போகும் முன்பு போட்ட க்ரீம் காரணமாக முகம் மினுமினுப்பாய்த் தெரிந்தது. கலக்கம் எதையும் காட்டிக் கொள்ளாமல் தனவேலுக்கு முன்பாய் வந்து அமர்ந்து "எஸ்..." என்றாள்.

"மிஸ்டர் புஷ்பகுமாரனைப் பார்க்கணும்..."



"அவர் வெளியூர் போயிருக்கார்..."

"வீட்ல அவர் இருக்கிறதாக வேலைக்காரன் சொன்னானே...?"

"அவர் வெளியூருக்குப் புறப்பட்டுப் போனது வேலைக்காரனுக்குத் தெரியாது."

"நீங்க...?"

"அவரோட மனைவி..."

"பேர்...?"

"ராஜாத்தி...!" என்றவள் தன் இரு புருவங்களையும் உயர்த்தியபடி கேட்டாள். "எதுக்காக அவரைப் பார்க்க வந்திருக்கீங்க...?"

"ஒரு என்க்கொயரி விஷயமா?"

"அது என்னான்னு என்கிட்டயே சொல்லலாமே...?"

"உங்க கணவர் புஷ்பகுமாரனுக்கு என்ன தொழில்...?"

"அவர் ஒரு டி.வி.சீரியல் ப்ரொட்யூஸர். நீங்க டி.வி.பார்க்கிறதேயில்லை போலிருக்கு... இப்ப வந்துக்கிட்டிருக்கிற நாலு மெகா சீரியலும் அவரோடதுதான். அத்தை, சின்னம்மா, பெரியம்மா, நாத்தனார் - இந்த நாலு சீரியல்களையும் பார்க்காத பெண்களே கிடையாது..."

"ஸாரி... நான் டி.வி.யில் நியூஸ் மட்டுமே பார்க்கிற ஜாதி..."

"அதான் உங்களுக்குத் தெரியலை. நீங்க வந்த விஷயத்தைச் சொல்லலாமே...?"

"இந்த ராத்திரி நேரத்துல வந்து உங்களுக்குத் தொந்தரவு தர்றதுக்காக மன்னிக்கணும். உங்க வீட்டுக்கு போன் பண்ணிப் பார்த்தேன். என்கேஜ்ட்டோன்."

"ராத்திரி பத்து மணிக்கு மேல போனை எடுத்து வெச்சுடுவோம். சீரியல்ல நடிக்க சான்ஸ் கேட்டு நிறைய பேர் போன் பண்ணுவாங்க. எல்லார்க்கும் பதில் சொல்லிட்டிருந்தா ராத்திரி தூங்க முடியாதே... நீங்க விஷயத்தைச் சொல்லுங்க..."

தனவேல் கவரோர்மாய் கைகட்டியபடி நின்றிருந்த வேலையாளைப் பார்த்தார்.

"நீ முன்னாடி போய் இரு..."

அவன் நகர்ந்து மறைய, தனவேல் குரலைத் தாழ்த்திக் கொண்டு மெல்லிய குரலில் கேட்டார்.

"புஷ்பகுமாரன் எந்த ஊருக்குப் போயிருக்கார்?"

"ஹைதராபாத்..."

"என்ன விஷயமா...?"

"தெலுங்குல ஒரு டி.வி.சீரியல் பண்ணப் போறோம். அது சம்பந்தமா ஸ்பான்ஸரைப் பார்க்க..."

ராஜாத்தி சொல்லிக் கொண்டிருந்தபோதே,

"ச்சசல்லல்லீர்ர்ர்ர்..."

ஒரு பெரிய கண்ணாடிப் பாத்திரம் கீழே விழுந்து உடைந்த மாதிரியான சத்தம் மாடியறையிலிருந்து கேட்டது.



மாடியறையிலிருந்து சத்தம் கேட்டதும் ராஜாத்தியின் முகம் ஒரு கிரகண நிழலுக்கு உட்பட்டது. தனவேல் பார்வையை உயர்த்தி மாடியை நோட்டமிட்டபடி கேட்டார்.

"மேலே யாரும் இல்லேன்னு சொன்னீங்க...! யாரோ இருக்காங்க போலிருக்கே?"

"யா...யாரும் இல்ல..."

"ஏதோ கண்ணாடி உடைஞ்ச மாதிரி சத்தம் கேட்டது...?"

"வாட்டர் ஜக்கை பூனை தள்ளியிருக்கும்...!"

"அந்தப் பூனையை நான் பார்க்கணும். ப்ளீஸ் கம் வித் மீ..."

ஜீரோ வாட்ஸ் வெளிச்சம் நிரம்பியிருந்த மாடி வராந்தாவுக்கு வந்தார்கள்.

தனவேல் கேட்டார்.

"எது உங்க ரூம்...?"

சாத்தப்பட்டிருந்த ஒரு அறையைக் காட்டினாள் ராஜாத்தி. தன்வேல் கை வைத்துத் தள்ள, அது திறந்து கொண்டது.



உள்ளேயும் மெலிதான ஜீரோ வாட்ஸ் வெளிச்சம். தனவேல் நுழைந்தார். சுவரில் ஸ்விட்ச் போர்டைத் தேடி ஒரு ஸ்விட்ச்சில் கை வைத்தார். படுக்கையறையின் சீலிங்கில் சிரசாசனம் செய்து கொண்டிருந்த ஷஸ்டர் விளக்கொன்று தீப்பற்றிக் கொண்ட தினுசில் ஒளிர்ந்து அறையை வெளிச்சத்தில் நிரப்பியது.

தனவேல் தனக்குப் பின்னால் இருண்டு போன முகத்தோடு நின்றிருந்த ராஜாத்தியைத் திரும்பிப் பார்த்தார். "இங்கே யார் இருக்காங்க...?"

"யா...யாரும் இ...இல்லையே...!"

"நோ... உங்க முகம் சரியில்லை! குரல் சரியில்லை... நீங்க பொய் சொல்றீங்கன்னு உங்க வியர்வையே சொல்லுதே... உண்மையைச் சொல்லுங்க. உங்க கணவர் புஷ்பகுமாரன் வீட்லதானே இருக்கார்...?"

"இல்லை... அவர் ஹைதராபாத் போயிருக்கார். இந்த வீட்ல என்னையும் வேலைக்காரனையும் தவிர இப்போ வேற யாரும் கிடையாது. இதைத்தான் என்னால் சொல்ல முடியும். இதை நம்பறதும் நம்பாததும் உங்க இஷ்டம்."

தனவேல் புன்னகைத்தார். "நீங்க சொல்ற மாதிரி அது பூனைதான். ஆனா அது இரண்டு கால் பூனையா இல்லை நாலு கால் பூனையான்னு தெரியணும். அதையும் இப்ப கண்டுபிடிச்சுடலாம்."

சொன்னவர் கீழே குனிந்து பார்த்தார். அவர் பார்க்க ராஜாத்தியும் பார்க்க, அவளுடைய முதுகுத் தண்டுவடத்தில் குளிர் பரவியது.

மீன் தொட்டியின் உடைந்த கண்ணாடித் துண்டுகளுக்கு நடுவில் சிவப்பாய் ரத்தம் கலந்த தண்ணீர்.

தனவேல் சொன்னார்.

"பார்த்தீங்களா... ஃபிஷ்டப்போட கண்ணாடிச் சில்லு மயார் காலையோ குத்திக் கிழிச்சிருக்கு... அதான் ரத்தம்..." சொல்லிக் கொண்டே பார்வையை அவர் துரத்த, ரத்தம் கலந்த தண்ணீர் பாத அடிச் சுவடுகளாக மாறி கோணல் மாணலாக வளைந்து

அறையின் மூலையில் இருந்த வாட்ரோப்பின் பின்பக்கம் போயிற்று.

தனவேல் அந்தப் பாதச் சுவடுகளை அடியொற்றி நடந்து வார்ட்ரோப்புக்கு முன்பாய் வந்தார். குரலை உயர்த்திக் கேட்டார்.

"பின்னாடி இருக்கிறது யாரு...?"

மௌனம்.

"கம் அவுட்... ஐ ஸே..."

நிசப்தம்.

தனவேல் தன் இடுப்புக்கு கையைக் கொண்டு போய் ரிவால்வரை எடுக்க முயல, ராஜாத்தி அவரைத் தடுத்துவிட்டுடு பதட்டமாய் குரல் கொடுத்தாள்.

"லாரன்ஸ்...! வெளியே வந்துடுங்க."

வார்ட்ரோப்பின் பின்பக்கம் அசைவுகள் கேட்ட அடுத்த சில விநாடிகளில் அந்த இளைஞன் தள்ளாட்டமாய் வெளிப்பட்டான். குடிபோதையில் இருக்கிறான் என்பது பார்த்த மாத்திரத்திலே தெரிந்தது. அவன் விட்ட மூச்சுக்காற்றில் விஸ்கி மோசமாய் நாறியது. ராஜாத்தியைப் பார்த்துக் கொண்டே பயத்தோடு குழறினான்.

"சா... சார் டியர்...பத்திரமான இடத்துல ஒளிஞ்சுக்கிறதுக்காக கட்டிலுக்கு கீழேயிருந்து வெளியே வந்தப்ப ஃபிஷ்டப் மேல... மோ... தோதிட்டேன்... வெ...வெரி சாரி. நா...வெ...வெளியே வந்தது... ரொம்பத் தப்பு...." மேற்கொண்டு பேச முடியாமல் வார்ட்ரோப்புக்குப் பக்கத்திலேயே மடங்கி உட்கார்ந்தான். தனவேல் ராஜாத்தியை ஏறிட்டார்.

"யார்... இவன்...?",

ராஜாத்தி தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"அவர்.. அவர்... லாரன்ஸ்..."

"என்ன உறவு...?"

"ப்ரெண்ட்ஸ்...."

"ஐ...மீன் ராத்திரி நேர ஃப்ரெண்ட்ஸ். உங்க கணவர் புஷ்பகுமாரன் வெளியூர் போயிருக்கிற நேரத்துல மட்டும் டெவலப்பாகிற ஃப்ரெண்ட்ஷிப் போலிருக்கு."

ராஜாத்தி மௌனமாக இருந்தாள். தனவேல் தொடர்ந்து கேட்டார்.

"இந்தப் புனிதமான தெய்வீக உறவு பத்தி உங்க கணவருக்குத் தெரியுமா...?"

"தெ...தெரியாது..." சொன்ன ராஜாத்தி பதட்டத்தோடு கைகூப்பி கண்ணீர் மல்கினாள். "சார்...! எங்க ரெண்டு பேருக்கும் இடையேயுள்ள இந்தத் தொடர்பு உங்க போலீஸ் விசாரணை மூலமா யாருக்கும் தெரிய வேண்டாம். தெரிஞ்சா அதனால ஏற்படக்கூடிய விளைவுகள் ரொம்பவும் மோசமாக இருக்கும்..."

"ஐ நோ வெரி வெல்...பட் என்னோட விசாரணைக்கு நீங்க ஒத்துழைப்புக் கொடுத்தா இந்த லாரன்ஸ் விஷயம் வெளியே வராம பார்த்துக்குவேன்."

"உங்க விசாரணைக்கு நான் ஒத்துழைப்பு தர்றேன் சார். விஷயம் என்னன்னு சொல்லுங்க."

லாரன்ஸ் போதையிலிருந்து இன்னமும் விடுபடாமல் மயங்கிக் கிடக்க, தனவேல் அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு ராஜாத்தியை ஏறிட்டார்.

"உங்களுக்கு வசந்தராதேவியைத் தெரியுமா?"

"யார் அது...?"

"விப்ஜியார் கெமிக்கல் கம்பெனியின் மேனேஜிங் டைரக்டர்."

"தெரியாது..."

"ஜெயவர்த்தன்..."

"அப்படி யாரையும் தெரியாது."

"உங்க கணவருக்குத் தெரிஞ்சிருக்கலாமே?"

"அப்படி அவருக்குத் தெரிஞ்சிருந்தா எனக்கும் கண்டிப்பாகத் தெரிஞ்சிருக்கும். எதுக்காக இப்ப இந்த விசாரணை சார்?"

"யாரோ ஒருத்தரோட ஹிட்லிஸ்ட்ல இவங்க மூணு பேரோட பேரும் இருக்கு. அதுல வசந்தராதேவியைக் கொலை பண்ண ஒரு முயற்சி

நடந்தது. சுஜாங்கிற ஒரு ப்ரொபஷனல் கில்லரை ஏற்பாடு பண்ணியிருந்தாங்க. ஆனா அந்த சுஜா கொலை செய்ய மனம் இல்லாம வசுந்தராதேவி கிட்டயே வந்து உண்மையைச் சொல்லிவிட்டான். உண்மையைச் சொன்னதுக்காக அந்த சுஜாவை போலீஸ் யூனிஃபார்ம்ஸ் வந்து கடத்திக்கிட்டுப் போயிட்டாங்க. சுஜாவோட நிலைமை என்னான்னு இதுவரைக்கும் தெரியலை."

ராஜாத்தி மிரண்டு கொண்டிருக்கும்போதே தனவேல் தொடர்ந்தார். "வசுந்தராதேவியோட கெஸ்ட் ஹவுஸ் பாத் டப்பில் ரத்தக் காயங்களோடு கிடந்த ஒருவனின் சர்ட் கை மடிப்பில் வசுந்தராதேவி, ஜெயவர்த்தன், புஷ்பகுமாரன் இவங்க மூணு பேரோட போட்டோக்களும் கிடைச்சது. போட்டோக்களுக்குப் பின்னாடி போன் நம்பர்களும் இருந்ததால் அட்ரஸ்களைக் கண்டுபிடிக்க முடிஞ்சது. இப்போ ஜெயவர்த்தன் உயிரோடு இல்லை. அவரை யாரோ துப்பாக்கியால் சுட்டுக் கொலை பண்ணியிருக்காங்க."

ராஜாத்தியின் விழிகள் விரிந்தன. "நீங்க சொல்றதை பார்த்தா என் கணவரோட உயிருக்கும் ஆபத்து இருக்கும் போலிருக்கே...?"

"எஸ்...சர்ட்டன்லி... உங்க கணவரோட உயிர்க்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடக் கூடாதேங்கிற பதைபதைப்புலதான் இந்த ராத்திரி வேளையில் புறப்பட்டு வந்திருக்கிறேன்...! உங்க கணவர் ஹைதராபாத்தானே போயிருக்கார்?"

"ஆமா.."

"எந்த ஹோட்டல்ல தங்கியிருக்கார்ன்னு தெரியுமா?"

"தெரியும். ஹோட்டல் பாதுஷா இன்டர்நேஷனல்."

"அவர்கிட்ட செல்போன் இருக்கா?"

"இருக்கு...! எனக்கும் செல் இருக்கு. பேசி அவரை கொஞ்சம் ஜாக்கிரதையாய் இருக்கச் சொல்லிடலாம் சார். சொன்ன ராஜாத்தி தன் கட்டிலின் தலை மாட்டுக்குப் போய் செல்போனோடு வந்தாள்.



எண்களை டயல் செய்தாள். மறுமுனை 'பீப்பீப்' என்று குரல் கொடுத்துவிட்டு, ஒரு ரெக்கார்டட் குரல் ஒலித்தது:

'தற்சமயம் இந்த எண்ணை நீங்கள் தொடர்பு கொள்ள முடியாது...!

"அவர் செல்போனை ஆஃப் பண்ணி வெச்சுட்டார் போலிருக்கு..."

"பாதுஷா ஹோட்டல் டெலிபோன் நம்பர் தெரியுமா?"

"தெரியும்...!"

"அப்புறம் என்ன.. போன் பண்ணி தங்கியிருக்கிற அறைக்கு கனெக்ஷன் கொடுக்கச் சொல்லுங்க."

ராஜாத்தி ஓடிப்போய் ஷெல்பிலிருந்து ஒரு டைரியை எடுத்து வந்தாள்.

ஹோட்டல் நம்பர் பார்த்து மறுபடியும் செல்போனில் எண்களைத் தட்ட மறுமுனையில் ரிங் போயிற்று. உடனே ரிஸீவரும் எடுக்கப்பட்டது.

"ஹலோ.."

"பாதுஷா இன்ர்நேஷனல்?"

"எஸ்.."

"மிஸ்டர் புஷ்பகுமாரன், ரூம் நம்பர் ஃபைவ் ஃபோர் நைன். ப்ளீஸ் கனெக்ட் மீ..."

"நீங்கள்...?"

"அவருடைய மனைவி..."

"சாரி மேடம்...! அவர் அறையில் இல்லை. காலையில் ஆறு மணிக்கு வெளியே கிளம்பிப் போனவர் இன்னும் ஹோட்டலுக்குத் திரும்ப வில்லை..."




ராஜாத்தி நடுங்கும் குரலோடு தனவேலை ஏறிட்டாள்.

"காலையில் ஹோட்டலை விட்டு வெளியே போன என்னோட கணவர் இன்னும் திரும்பலையாம். ஹோட்டல் ரிஸப்ஷனிஸ்ட்

கொடுத்த தகவல்இது. அவர்க்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடாம நீங்கதான் ஏதாவது ஸ்டெப்ஸ் எடுக்கணும் சார்."

தனவேல் அவளை ஒரு சின்ன புன்னகையுடன் பார்த்தார். "உங்க கணவர் உயிரோடு இருக்கிறது உங்க இல்லீகல் காண்டாக்ட்ஸுக்கு இடைஞ்சலான விஷயமாச்சே..! அவர்க்காக இவ்வளவு வருத்தப் படறீங்க. என் முன்னாடி கஷ்டப்பட்டு உங்க ஃபீலிங்ஸை காட்ட வேண்டாம்."

"நோ... சார்... நான் இப்போ வெளிப்படுத்திட்டு இருக்கிற ஃபீலிங்க்ஸில் எந்த நடிப்பும் இல்லை. என் கணவரோட உயிர்க்கு எந்தவித ஆபத்தும் வந்துடக் கூடாதுன்னு மனப்பூர்வமா நான் விரும்பறேன்."

"நீங்க லாரன்ஸோடு வெச்சிருக்கிற இந்த 'ராத்திரி ஃப்ரண்ட்ஷிப்' விவகாரம் உங்க கணவர்க்கு தெரிஞ்சா என்னாகும்னு தெரியுமா...?"

"என்னாகும்...?"

"அதைச் சொல்லணுமா... நீங்களும் லாரன்ஸும் உயிரோடு இருக்க மாட்டீங்க. ஒரு மனைவியோட துரோகத்தை எந்தக் கணவனால்தான் பொறுத்துக்க முடியும். நீங்க ரெண்டு பேரும் ரொம்ப காலத்துக்கு உங்க ராத்திரி நேர ஃப்ரண்ட்ஷிப்பை கன்டினியூ பண்ண முடியாது. என்னிக்காவது ஒரு நாள் அவர்க்கு இந்த விஷயம் தெரிய வரும்போது யார் கையால யார்க்கு மரணம்னு யாராலயும் சொல்ல முடியாது. புஷ்பகுமாரன் உங்க ரெண்டு பேரையும் கொலை செய்யலாம். இல்லேன்னா நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து புஷ்பகுமாரனை கொலை செய்யலாம்."

ராஜாத்தி தலையைக் குனிந்து கொண்டாள்.

"ஸாரி இன்ஸ்பெக்டர்! நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் நடக்காது."

"நடக்காதுன்னு எப்படி அவ்வளவு உறுதியா சொல்றீங்க... கடைசி வரைக்கும் உண்மை தெரியாதுன்னு நினைக்கறீங்களா?"

"நோ..."

"பின்னே..."



"எனக்கும் லாரன்ஸுக்கும் தொடர்பு இருக்கிற விஷயம் என்னோட கணவர் புஷ்பகுமாரனுக்குத் தெரியும்..."

"எ...எ...என்னது தெரியுமா...?"

"எஸ்..."

"தெரியாதுன்னு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி சொன்னீங்க?"

"என் கணவரோட உயிர்க்கு ஆபத்து இருக்கிற விஷயத்தை இப்பத்தானே நீங்க சொன்னீங்க. இப்படியொரு விஷயம் இருக்கும்போது நானும் உண்மையைச் சொல்லியாகணும் இல்லையா.... அதான் சொல்லிட்டேன். எனக்கும் லாரன்ஸுக்கும் தொடர்பு இருக்கிற விஷயம் என் கணவர்க்கு நல்லாவே தெரியும்."

"அவர் உங்களைக் கண்டிக்கலையா?"

"எதுக்கு கண்டிக்கணும்! லாரன்ஸோடு நெருங்கிப் பழக பாஸ்போர்ட்டும் விசாவும் கொடுத்தது அவர்தானே?"

தனவேல் அதிர்ந்து போய் ராஜாத்தியையே இமைக்காமல் பார்க்க, அவள் தொடர்ந்தாள்.

"இது வெளியே சொல்ல கொஞ்சம் வெட்கக் கேடான விஷயம்தான். இருந்தாலும் சொல்ல வேண்டிய நிலைமை வரும்போது சொல்லித்தானே ஆகணும். நான் தெலுங்கு சினிமா உலகில் ஒரு முன்னாள் நடிகை. ஆனா பிரபலமாக முடியலை. புஷ்பகுமாரனோட உண்மையான பேர் பாலகிஷ்டய்யா. இவரும் தெலுங்கில் ரெண்டு படங்கள் டைரக்ட் பண்ணி ரெண்டுமே ஃப்ளாப். லட்சக்கணக்கில் பணம் நஷ்டம்.

அந்த நஷ்டத்தை ஈடுகட்ட வந்தவர்தான் லாரன்ஸ். பெரிய பணக்காரர். வட்டி லேவாதேவி பிசினஸ். என் கணவர்க்கு பண உதவி செஞ்ச உரிமையோடு லாரன்ஸ் என் பெட்ருமுக்குள்ளே நுழைந்தார். என் கணவரும் தடுக்கவில்லை. என்னாலேயும் தடுக்க முடியலை. லாரன்ஸ் எங்க வீட்டுக்கு வர்றேன்னு போன் பண்ணிச் சொன்னாலே போதும். என் கணவர் வெளியூர் கிளம்பிப் போயிடுவார்...""

ராஜாத்தியின் பேச்சில் இப்போது கூவத்த
நெடி. தனவேலின் கண்களில் ஒரு ஆருவ
தெரிந்தது. அவள் அதைப் பொருட்படுத்தா
தொடர்ந்தாள்.

"ஒரு போலீஸ் ஆபீசரான உங்களுக்கு இது ஒ
ஹைக்ளாஸ் ப்ராத்தல் விஷயமா தெரியலாம். ஆ
சினிமா உலகில் இது ரொம்பவும் சாதாரண விஷய
சினிமா அகராதியில் கற்பு என்ற வார்த்தைக்கு பண
என்று அர்த்தம். ஒன்றை இழக்காமல் ஒன்று அங்
இல்லை. என் கணவர் தெலுங்கு சினி ஃபீல்
விட்டு விலகி சென்னைக்கு வந்து இன்னிக்
புஷ்பகுமாரனா மாறி டி.வி.க்காக மெகா சீரியல்க
பண்ணி வசதியான வாழ்க்கையை நடத்தக் காரண
லாரன்ஸ்தான். லாரன்ஸ் மட்டும் சமயத்துக்கு வந்
பண உதவி பண்ணியிருக்காத பட்சத்தில் நானு
என்னோட கணவரும் விஜயவாடா ப்ளாட்பாரத்து
குடித்தனம் நடத்திக்கிட்டு இருப்போம். லாரன்ஸுக்
நான் காட்ற இந்த நன்றியை நீங்க உயர்த
விபச்சாரம்னு சொல்லலாம். ஆனா நானும் எ
கணவரும் இதை ஒரு உபச்சாரமா நினைக்கிறோம்

தோள்களைக் குலுக்கினார் தனவேல். "இட்
ஓ.கே....! உங்க பர்சனல் விவகாரத்தை நா
கமெண்ட் பண்ண விரும்பலை. பட் உங்க கணவ
புஷ்பகுமாரனின் உயிர்க்கு ஆபத்து ஏற்பட்டிருக்கி
இந்த நேரத்தில் நான் எதையும் அலட்சியம
எடுத்துட்டு போக முடியாது. லாரன்ஸ் உங்களுக்
நல்லவரா இருக்கலாம். போலீஸுக்கும்
சட்டத்துக்கும் அவர் நல்லவரான்னு தெரியணும்
போதை தெளிஞ்ச பிறகு அவர்கிட்ட ஒரு
விசாரணை நடத்த வேண்டியிருக்கும்."

தனவேல் சொல்லிக் கொண்டிருக்கும்போதே
ராஜாத்தியின் கையில் இருந்த செல்போன்
எலக்ட்ரானிக் முனகலோடு கூப்பிட்டது. பதட்டமாய்
காதுக்குக் கொடுத்தாள்.

"ஹலோ..."

மறுமுனையில் புஷ்பகுமாரன் குரல் கேட்டது.

"என்ன ராஜி... எனக்கு போன் பண்ணியா?"

"ஆ...ஆ...ஆமாங்க...."



"என்ன இந்த அகால வேளையில...?"

"காலையிலிருந்து நீங்க எங்கே போயிருந்தீங்க..."

"பாப்பி ரெட்டி ஒரு தெலுங்கு படம் தயாரிக்கப் போறாராம். அதுக்கு முந்தி அவர் தயாரிச்ச 'வெர்ரி வேடுண்ணா' ஆந்திராவுல பயங்கர ஹிட். பணம் இன்னும் கொட்டிக்கிட்டு இருக்கு. புதுசா ஹிஸ்டாரிக்கல் பண்ண ஆசை. ஸ்டோரி டிஸ்கஷனுக்கு என்னையும் கூப்பிட்டிருந்தார். அவரோட பஞ்சாரா ஹில்ஸ் பங்களாவில் டிஸ்கஷன். எனக்கு ஆறு மணிக்கே கார் அனுப்பிட்டார். டிஸ்கஷன் சாயந்தரமே முடிஞ்சுடுச்சு. அதுக்கப்புறம் ஒரு பார்ட்டி இருந்தது. அட்டெண்ட் பண்ணிட்டு இப்பத்தான் ஹோட்டலுக்கு வந்தேன். நீ போன் பண்ணியிருந்ததா ஹோட்டல் ரிசப்ஷன்ல சொன்னாங்க. அதான் உடனே உனக்கு போன் பண்ணினேன்."

"உங்க செல்போன் ஆஃப் பண்ணி வெச்சிருந்தீங்களா...?"

"ஆமா.. ஸ்டோரி டிஸ்கஷன்ல இருக்கும்போது வெளியேயிருந்து போன் வந்தா டிஸ்டர்ப் ஆயிருக்குமேன்னு நான்தான் செல்லை ஆஃப் பண்ணினேன்...!"

"போலீஸ் அஸிஸ்டெண்ட் கமிஷனர் நம்ம வீட்டுக்கு வந்திருக்கார்."

"அஸிஸ்டெண்ட் கமிஷனரா...? எதுக்கு?"

ராஜாத்தி ஒரு ஐந்து நிமிட நேரம் செலவழித்து விபரம் சொல்ல, மறுமுனையில் புஷ்பகுமாரன் அதிர்ச்சி விளிம்புக்குப் போய் படபடத்தார்.

"என்னோட உயிர்க்கு ஆபத்தா...?"

"அஸிஸ்டண்ட் கமிஷனர் அப்படித்தான் சொல்றார். இதோ அவரே உங்கக்கிட்ட பேசறார்..." ராஜாத்தி செல்போனை தனவேலிடம் நீட்ட அவர் வாங்கிப் பேசினார்.

"மிஸ்டர் புஷ்பகுமாரன்!"

"சொல்லுங்க சார்...!"

"உங்களுக்கு வசுந்தராதேவியைத் தெரியுமா?"

"தெரியாது சார்."

"அவங்க விப்ஜியார் கெமிக்கல் கம்பெனியில் எம்.டி.அந்த விபரமாவது தெரியுமா?"

"தெரியாது சார்."

"சரி, ஜெயவர்த்தன்?"

"இப்படியொரு பேரை இன்னிக்குத்தான் கேள்விப்படறேன் சார்..."

"இதோ பாருங்க புஷ்பகுமாரன்! இந்த கேஸை இப்பத்தான் டீல் பண்ண ஆரம்பிச்சிருக்கேன். நீங்க இந்த கேசுக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்காத பட்சத்தில் என்னால் எதுவும் செய்ய முடியாது. வசுந்தராதேவியின் கெஸ்ட்ஹவுஸ் பாத்டப்பில் கொலையாகிக் கிடந்தவனின் முழுக்கை சர்ட்டில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த மூணு போட்டோக்கள்ல உங்களோட போட்டோவும் ஒண்ணு. ஜெயவர்த்தன் இப்போ உயிரோடு இல்லை. வசுந்தரா தேவியையும் கொலை பண்ண முயற்சி நடந்தது. உங்க மூணு பேரையும் யாரோ ஹிட்லிஸ்ட் பண்ணித் தீர்த்துக் கட்டற முயற்சியில் இறங்கியிருக்காங்க. வசுந்தரா தேவி ஒரு கெமிக்கல் கம்பெனிக்கு எம்.டி. நீங்க ஒரு சினி - டிவி. சீரியல் டைரக்டர். கொலை செய்யப்பட்ட ஜெயவர்த்தன் ஒரு பிசினஸ்மேன். கிண்டி இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் ரெண்டு ஃபேக்டரி வெச்சு ரன் பண்ணிட்டிருந்தார். ஒருத்தர்க்கொருத்தர் யாரையுமே தெரியாதுன்னு சொல்றீங்க. இந்த இடத்துலதான் கொஞ்சம் குழப்பமாயிருக்கு. உங்க மூணு பேரையும் ஹிட்லிஸ்ட் பண்ணி கொலை செய்யக்கூடிய அளவுக்கு உங்க மேல யார்க்கு என்ன பகை இருக்க முடியும்...? கொலையாளியின் மோட்டிவ் என்னான்னு தெரிஞ்சாத்தான் இந்த கேஸை சரியான திசையில் இன்வெஸ்டிகேட் செய்ய முடியும்..."

"சார்...! எனக்கு வாழ்க்கையில் எதிரிகள் யாரும் இருக்க முடியாது. எந்தப் பிரச்சனையிலும் நான் மாட்டிக் கொண்டதும் இல்லை."

"உங்களுக்கு எதிரிகள் நண்பர்கள் வடிவிலும் இருக்கலாமே...?"

"வசுந்தராதேவி கெஸ்ட் ஹவுஸ் 'பாத்டப்'பில் கொலையான அந்த நபர் யார்ன்னு தெரிஞ்சுதா சார்?"



"தெரியலை...!"

"அந்த நபரோட போட்டோ இருந்தா அதை என்னோட மனைவிக்கிட்ட காட்டுங்க சார். ஒருவேளை அது யார்ன்னு அவளுக்குத் தெரிஞ்சு இருக்கலாம்."

"இன்னும் அந்தப் போட்டோ கைக்குக் கிடைக்கலை. நாளைக்கு கிடைச்சதும் அந்த என்கொயரி ஆரம்பமாகும்."

"சார்...! நான் இப்போ என்ன பண்ணட்டும்? ஹைதராபாத்திலேயே தங்கியிருக்கட்டுமா...? இல்லை சென்னைக்கே வந்துடட்டுமா...?"

"நீங்க உடனே புறப்பட்டு வந்துடறது பெட்டர்."

"நாளைக்குக் காலையில் ஆறு மணிக்கு சென்னைக்கு ஒரு ஃப்ளைட் இருக்கு சார்... அதுல புறப்பட்டு..."

'டொக்' என்று ஏதோ சத்தம்... அதைத் தொடர்ந்து புஷ்பகுமாரனின் பேச்சு அறுந்து போக - தனவேல் கத்தினார்.

"ஹலோ...! ஹலோ...! புஷ்பகுமாரன்...!"

எதிர்முனையில் இப்போது நிசப்தம்.




அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேல், ராஜாத்தியை உறைந்த பார்வையோடு ஏறிட்டார்.

"பேசிக்கிட்டு இருக்கும் போதே லைன் கட்டாயிடுச்சே..."

"செல்போனைக் கொடுங்க... நான் டயல் பண்ணிப் பார்க்கிறேன்..." ராஜாத்தி வாங்கி புஷ்பகுமாரனின் செல்போன் எண்களை டயலில் ஒற்றியெடுத்தாள். ரிங் போய் மறுமுனையில் உடனே புஷ்பகுமாரனின் 'ஹலோ' கேட்டது.

"என்னாச்சுங்க... திடீர்னு லைன் கட்டாயிடுச்சே..."

"பேசிக்கிட்டு இருக்கும்போதே கையில் இருந்த செல்போன் தவறி கீழே விழுந்துடுச்சு... அஸிஸ்டெண்ட் கமிஷனர் சொன்ன தகவலைக்

கேட்டதிலிருந்து ஒரே டென்ஷனாயிருக்கு.. நான் உடனே புறப்பட்டு சென்னை வந்துடறேன் காலையில் ஃப்ளைட் இருக்கு.."

"ஒரு நிமிஷம் லைன்ல இருங்க" சொன்ன ராஜாத்தி தனவேலிடம் விஷயத்தைச் சொல்ல, அவர் செல்போனை வாங்கிப் பேசினார்.

"புஷ்பகுமாரன்! நீங்க தனியா புறப்பட்டு வர்றது சரியில்லை. நான் ஹைதராபாத் போலீஸுக்குத் தகவல் கொடுத்து உங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கச் சொல்றேன். நீங்க போலீஸ் பாதுகாப்போடுதான் ஃப்ளைட்ல டிராவல் பண்ணனும்... இந்த நிமிஷத்திலிருந்து நீங்க ஹோட்டல் அறையை விட்டு வெளியே வரக்கூடாது. இன்னும் அரைமணி நேரத்துக்குள்ளே ஹைதராபாத் சிட்டி போலீஸ் கமிஷனர் உங்களைப் போன்ல காண்டாக்ட் பண்ணுவார். அவர் தர்ற இன்ஸ்ட்ரக்ஷன்களை நீங்க ஃபாலோ பண்றது மிக மிக முக்கியம்."

"எஸ்...சார்..."

"உங்களுக்கு உடனடியாக உதவி ஏதாவது தேவைப்பட்டா இப்ப நான் சொல்லப்போற டெலிபோன் நம்பரை காண்டாக்ட் பண்ணுங்க... தே..வில்.ஹெல்ப்..யூ..."

"தேங்க்யூ...சார்..."

**ம**றுநாள்

காலை பதினோரு மணி. விப்ஜியார் கெமிக்கல் கம்பெனியின் போர்டிகோவுக்குள் போலீஸ் பெட்ரோல் கார் நின்று அஸிஸ்டண்ட் கமிஷனர் தனவேலை உதிர்த்துவிட்டுப் போக, அவர் படியேறி கண்ணாடிக் கதவு அருகே வந்தார். துப்பாக்கிகளோடு சென்ட்ரி பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு போலீசார் சல்யூட் கொடுத்துத் தளர்ந்தனர்.

"பி... காஷியஸ்! ரெண்டு நாளைக்கு செக்யூரிட்டி டைட்டா இருக்கணும்... சோதனை போடாம யாரையும் உள்ளே அலவ் பண்ண வேண்டாம்..."

"எஸ்...சார்..."

தனவேல் கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனார். சென்ட்ரலைஸ்டு ஏ.ஸி.



...டு மொத்த அலுவலகத்தையும் கட்டியாய் ...ற்றியிருக்க, அவர் நடந்தார். கம்ப்யூட்டரின் ...னிட்டரைப் பார்த்து ஒரு ஃபைலில் குறிப்பு எழுதிக் ...கொண்டிருந்த சுஜாதா அவரைப் பார்த்தும் ஒரு ...ன்னகையோடு எழுந்தாள்.

"குட்மார்னிங் சார்..."

"குட்மார்னிங்."

"மேடம் உங்களை எதிர்பார்த்து வெயிட் ...பண்ணிட்டிருக்காங்க. உங்க ஆபீஸுக்குக்கூட ...ரெண்டு தடவை போன் பண்ணினேன். என்கேஜ்டா ...இருந்தது."

மாடிப்படிகளில் ஏறினார் தனவேல். அவருடைய ...முதுகு மறைந்ததும் சுஜாதா கம்ப்யூட்டரை ...அணைத்துவிட்டு வேகவேகமாய் டாய்லெட்டுக்குள் ...நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள். மார்புப் ...பகுதிக்குள் கையை விட்டு செல்போனை எடுத்து ...உயிர்ப்பித்தாள். குரலைத் தாழ்த்திக் கொண்டு ஹஸ்கி வாய்ஸில் பேசினாள்.

"சார்... நான் சுஜாதா..."

"சொல்லு..."

"ஏ.சி. தனவேல் வந்துட்டார்."

"என்ன பேசிக்கிறாங்கன்னு ஹியர் பண்ண முடிஞ்சா பரவாயில்லை..."

"அது கஷ்டம் சார்... கஷ்டம் மட்டுமில்லை. ரிஸ்க்கும்கூட ரிஸ்க் எடுத்து பண்ணட்டுமா?"

"வேண்டாம். வெண்ணெய் திரண்டு வர்ற நேரத்துல தாழி உடைஞ்ச கதையாயிடும். உன் மேல வசுந்தராவுக்கு ஒரு பர்சன்ட்கூட சந்தேகம் வந்துடக்கூடாது. செக்யூரிட்டி போட்டிருக்காங்கன்னு சொன்னே... மொத்தம் எத்தனை பேர்...?"

"ஃப்ரண்ட் டோர்ல ரெண்டு பேர். பேக் டோர்ல ரெண்டு பேர்."

"வசுந்தரா எப்படியிருக்காங்க...?"

"வழக்கமான உற்சாகம் இல்லை."

"சரி...! நிலைமையைக் கவனி. தனவேல் கிளம்பிப் போன பிறகு எனக்கு போன் பண்ணு... டாய்

லெட்டுக்கு அடிக்கடி வராதே... யார்க்காவது மூக்கு வேர்த்துடும்."

"எனக்குத் தெரியாதா என்ன...?"

"நேத்து ராத்திரி சபா கொடுத்த ஃபைல் குறிப்பைப் படிச்சுப் பார்த்தியா...?"

"ம்...படிச்சேன்..."

"வானவில்லோட எட்டாவது நிறம் என்னங்கிறதை கண்டுபிடிக்க முடியுமா...?"

"இன்னிக்கு ராத்திரி டிரை பண்ணலாம்னு இருக்கேன்..."

"எப்படி...முடியுமா...?"

"முடியும்... இன்னிக்கு கம்ப்யூட்டர் ஒர்க் நிறைய இருக்கு. ஒவ்வொரு டிபார்ட்மெண்ட்டுக்கும் மன்த்லி ஷெட்யூல் ப்ரோக்ராம் போட்டுத் தரணும். நைட் பத்து மணி வரைக்குமாவது இங்கே தங்க வேண்டியிருக்கும்."

"பி கேர்ஃபுல்..."

"ஐ...நோ சார்..." சுஜாதா சிரித்து செல்போனை அணைத்துவிட்டு வெளியே வந்தாள். அவளுடைய டேபிளில் இன்டர்காம் கைக்குழந்தையாய் வீறிட்டுக் கொண்டிருந்தது. வேகவேகமாய்ப் போய் ரிஸீவரை எடுத்தாள் சுஜாதா.

மறுமுனையில் வசந்தரா, கோபமாய்க் கேட்டாள். "சீட்ல இருக்காம எங்கே போனே....?"

"டாய்லெட் மேடம்..."

"நான் கையெழுத்து போட வேண்டிய முக்கியமான ஃபைல்ஸ் ஏதாவது இருக்கா...?"

"இருக்கு மேடம்..."

"எவ்வளவு ஃபைல் இருக்கும்?"

"ஏழெட்டு ஃபைல் இருக்கலாம் மேடம்."

"அதை எல்லாத்தையும் என்னோட டேபிளுக்குக் கொண்டு வா..."

"எஸ்... மேடம்...." ரிஸீவரை வைத்துவிட்டு ஃபைல்ஸ் ரேக்'கிற்குப் போனாள் சுஜாதா. சிவப்பு நாடாவால் கட்டி வைக்கப்பட்டிருந்த ஃபைல்களை அள்ளிக் கொண்டு மாடிப்படிகளில் மூச்சு வாங்க ஏறி,



வசந்தராவின் அறைக்கு முன்பாய் நின்று இடது கையின் ஆட்காட்டி விரலை கொக்கியாக்கி 'நாக்' செய்ய, உள்ளேயிருந்து குரல் வந்தது.

"எஸ்... கெட் இன்..."

சுஜாதா ஃபைல்களோடு உள்ளே போக கதவு தன்னிச்சையாய் பின்பக்கம் சாத்திக் கொண்டது. தனவேல் டெலிபோனில் யாருடனோ தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருக்க வசந்தரா சுஜாதாவை ஏறிட்டாள்.

"இதெல்லாம் இன்னிக்கே அனுப்ப வேண்டிய ஃபைலா...?"

"ஆமா மேடம்..."

"மடமடன்னு பிரிச்சு வைய்யி."

சுஜாதா பிரித்து வைக்க வசந்தரா கையெழுத்துப் போட்டுக் கொண்டே சொன்னாள்.

"சுஜாதா...! ரெண்டு நாளைக்கு நான் ஆபீஸில் இருக்கமாட்டேன். எனக்கு வர்ற போன்காலை எல்லாம் நீயே அட்டெண்ட் பண்ணிப் பேசிடு. ஆனா நான் வெளியூர் போயிருக்கிறதா யார்கிட்டேயும் சொல்ல வேண்டாம்."

"எஸ் மேடம்..."

"நான் யார் யார்க்கெல்லாம் சந்திக்க அப்பாய்ண்ட்மெண்ட் கொடுத்து இருக்கேனோ அவங்களுக்கெல்லாம் போன் பண்ணி அடுத்த வாரம் மீட் பண்றதா சொல்லிடு."

"எஸ்...மேடம்..." என்றவள் மெல்ல குரலை தாழ்த்தித் தயக்கமாய்க் கேட்டாள்.

"மேடம்...! உங்களுக்கு ஏதாவது நான் அவசரமா தகவல் கொடுக்கணும்ன்னா எந்த நம்பரை காண்டாக்ட் பண்றது...?"

"நீ என்னை எதுக்கும் காண்டாக்ட் பண்ண வேண்டாம். தேவைப்பட்டா நான் உன்னை காண்டாக்ட் பண்றேன். நான் வெளியூர் போறேன்னு யார்க்கும் தெரியக்கூடாது. இந்த விஷயத்தை ரகசியமா 'கீப்அப்' பண்ண வேண்டியது உன்னோட பொறுப்பு..."

"எஸ் மேடம்..."

ஃபைல்களில் கையெழுத்துப் போட்டு முடித்தாள் வசுந்தரா.

"வேற ஏதாவது ஃபைல்ஸ் இருக்கா...?"

"இல்ல மேடம்... மத்த ஃபைல்ஸ் எல்லாம் ஜி.எம்.டேபிளிலிருந்து இன்னும் வரலை."

"சரி... நீ கிளம்பு... நான் சொன்னதெல்லாம் ஞாபகத்தில் இருக்கட்டும்."

"எஸ் மேடம்..." தலையாட்டிய சுஜாதா ஃபைல்களை அள்ளிக் எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறி போக டோர்க்ளோஷரின் உதவியால் கதவு சாத்திக் கொண்டது. டெலிபோனில் பேசிக் கொண்டிருந்த தனவேல் ரிஸீவரை வைத்துவிட்டு வசுந்தராவை ஏறிட்டார்.

"பி.டி.ஐ. மேனேஜர்கிட்டே பேசிட்டேன். நேத்து ராத்திரி நடந்த மூணு மர்டர்ஸ் பத்தின நியூஸ் எந்த ஒரு பேப்பரிலும் வரலை. கொலையாளியைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் இந்த மர்டர்ஸ் வெளியே வரக்கூடாதுன்னு போலீஸ் தரப்பிலிருந்து வேண்டுகோள் விடப்பட்டதை பி.டி.ஐ. ஒத்துக்கிட்டாங்க. இந்த விஷயத்துல எல்லா பேப்பர்ஸூம் ஒத்துழைப்பு கொடுத்திருக்காங்க."

வசுந்தரா பெருமூச்சுவிட்டாள். "ஒரே ராத்திரியில் மூணு மர்டர்ஸ். நினைக்கிறபோதே ரத்தம் உறைஞ்சு போன மாதிரி இருக்கு. என்னோட கெஸ்ட்ஹவுஸ் குளியலறை பாட்டப்பில் இறந்து கிடந்தது யாருங்கிறதை கண்டுபிடிக்க முடிஞ்சுதா மிஸ்டர் தனவேல்...?"

"சித்தார்த் அந்த வேலையைத் தான் பார்த்துக்கிட்டு இருக்கார். அவன் யார்னு தெரிஞ்சாத்தான் இந்த கேஸூக்கு பிராண வாயு கிடைக்கும். இன்னிக்குக் காலையில் கமிஷனர் என்னையும் சித்தார்த்தையும் அவரோட ரூமுக்குக்கூப்பிட்டு உட்கார வெச்சு கண்டபடி பேசிட்டார். 'ரெண்டு நாளைக்குள்ளே கொலையாளி லாக்கப்புக்குள்ளே இருக்கணும்'னு சொல்லிட்டார். 'ஒரே ராத்திரியில் மூணு மர்டர்ஸ் பண்ணி ஒரு கொலைத் திருவிழாவையே நடத்தியிருக்கான். நீங்க வேடிக்கை



பார்த்துட்டு கையை வீசிட்டு வந்து இருக்கீங்க. எனக்கு உடனடியா ரிசல்ட் வேணும். வசுந்தரா, புஷ்பகுமாரன் இந்த ரெண்டு பேரைக் கொலையாளி நெருங்கக் கூடாது. அதுக்கு முன்னாடி கொலையாளி பிடிபடணும். சீக்கிரம் ரிசல்ட் வேணும்'னு கண்டபடி பேசிட்டார்."

"புஷ்பகுமாரன் ஹைதராபாத்திலிருந்து வந்தாச்சா?"

"வந்தாச்சு... வீட்டுக்கு போலீஸ் காவல் போட்டிருக்கு. ஒரு ரெண்டு நாளைக்கு நீங்களும் புஷ்பகுமாரனும் அதிகப்படியான ஜாக்கிரதையோடு இருக்கிறது நல்லது."

"நடக்கிற நிகழ்ச்சிகளையெல்லாம் பார்க்கும் போது அதிர்ச்சியாகவும் இருக்கு. அதிசயமாகவும் இருக்கு. ஜெயவர்த்தன், புஷ்பகுமாரன், நான் எங்க மூணு பேர்க்கும் ஒருத்தரையொருத்தர் பழக்கம் கிடையாது. யாரும் யாரையும் இதுவரைக்கும் பார்த்ததுகூட கிடையாது. எங்க மூணு பேரோட போட்டோக்களும் ஒருத்தனோட சட்டை கை மடிப்புக்குள்ளே. அவனும் இப்போ உயிரோடு இல்லை. ஜெயவர்த்தன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டு மொட்டைமாடி வாட்டர் டேங்க்குக்குக் கீழே ஒரு பொண்ணோட டெட்பாடி. அவ யாருங்கிற கேள்விக்கு இதுவரைக்கும் பதில் இல்லை."

வசுந்தரா கலக்கமான குரலில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே...

மேஜையின் மேல் இருந்த இன்டர்காம் சிவப்பு பட்டனை எரியவிட்டபடி கூப்பிட்டது.

"ஙீ...ஙீ...ஙீ...ஙீ..."

வசுந்தரா ரிஸீவரை எடுத்தாள். கேட் செக்யூரிட்டியிலிருந்து எஸ்.ஓ.பேசினார்.

"மேடம்..."

"என்ன...?"

"உங்களைப் பார்த்துப் பேச ஒருத்தர் வந்திருக்கார். பேரைக் கேட்டா 'கஜா'ன்னு சொல்றார்."

## 14

**வ**சந்தராவின் கையில் இருந்த ரிஸீவர் ஒரு சின்னத் துள்ளலுக்கு உட்பட்டது. எஸ்.ஓ.வைக் கேட்டார்.

"பேர் என்ன சொன்னான்... கஜாவா...?"

"ஆமா மேடம்..."

"உள்ளே அனுப்பு...! கஜாவோட வேற யாராவது வந்து இருக்காங்களா...?"

"இல்ல மேடம்... அவர் மட்டுந்தான்..."

"அனுப்பு..." வசந்தரா ரிஸீவரை வைத்துவிட்டு தனவேலை ஆர்வமாய் ஏறிட்டாள்.

"நீங்க தேடிக்கிட்டு இருந்த அந்த புரொஃபஷனல் கில்லர் கஜா வந்துட்டிருக்கான். அவனை ஹார்ஷா கன்வென்ஸ் பண்ண வேண்டாம். உங்க கேள்விகள் கொஞ்சம் இதமாவே இருக்கட்டும்..."

"ஐ...நோ...ஐ...நோ..." தனவேல் சொல்லிவிட்டு நாற்காலிக்கு சாய்ந்து கொள்ள இரண்டு நிமிஷ நேரம் கழித்து கதவு மெலிதாய் தட்டப்பட வசந்தரா, "ப்ளீஸ் கெட் இன்" என்று சொன்னதும் கஜா உள்ளே வந்தான். கலைந்த தலை, சிவந்த கண்கள், லேசாய் தள்ர்ந்த நடை, கசங்கிய சட்டை.

வசந்தரா புன்னகைத்தாள். "வா... கஜா... பயப்படாதே... ஏ.ஸி.எனக்கு வேண்டிய நபர். எல்லா விஷயமும் அவருக்குத் தெரியும். அதைப்பத்தின இன்வெஸ்டிகேஷனுக்காகத்தான் இப்பவும் வந்திருக்கார்.

கஜா அவர்களுக்கு எதிரில் இருந்த நாற்காலியொன்றில் தயக்கமாய் உட்கார, தனவேல் சொன்னார்.

"நேத்து ராத்திரியிலிருந்து உன்னைத்தான் தேடிக்கிட்டு இருக்கோம்..."

கஜா அவரை ஏறிட்டான். "சார்! ஒரு கும்பல் போலீசு யூனிஃபார்ம்ல வந்து கடத்திக்கிட்டுட போய்ட்டாங்க சார். வழியில் வெச்சு என்னைக் கொல்லவும் பார்த்தாங்க."

"யார் அவங்க...?"



"தெரியலை சார். வசந்தரா அம்மாவை நான் கொலை செய்யமாட்டேன்னு சொன்னதுக்காக என் மேல அவங்களுக்கு ஆத்திரம்."

"உன்னை எங்கே கடத்திக்கிட்டு போனாங்க?"

"ஜீப்ல போய்க்கிட்டு இருக்கும்போதே எனக்கும் அவங்களுக்கும் கைகலப்பு நடந்தது. நான் உயிர் பிழைக்கிறதுக்காக ஜீப்லயிருந்து தப்பிச்சு கீழே குதிச்சு ஓடினேன். என்னைத் துரத்திக்கிட்டு வந்தாங்க. இருட்டுல ரொம்ப நேரம் என்னால ஓட முடியலை. அப்படியே மயங்கி விழுந்துட்டேன். மறுபடியும் எனக்கு ஞாபகம் வந்தபோது மங்கலான வெளிச்சம் மண்டிக் கிடந்த ஒரு ரூமுக்குள்ளே இருந்தேன். அது எந்த ஏரியான்னு தெரியலை. பக்கத்து ரூம்ல பேச்சுக்குரல் கேட்டுக்கிட்டு இருந்தது. நான் மெல்ல தவழ்ந்து போய் சுவர்ல சாய்ஞ்சுக்கிட்டு பக்கத்து ரூம்ல என்ன பேசிக்கிறாங்கன்னு ஒட்டுக் கேட்டேன்."

"கேட்க முடிந்ததா...?"

"ம்..."

"என்ன பேசிக்கிட்டாங்க?"

"அவங்க வசந்தரா அம்மாவைத் தவிர வேற ரெண்டு பேரையும் கொலை பண்ணத் திட்டம் போட்டிருக்காங்க. ஒருத்தர் பேர் ஜெயவர்த்தன். இன்னொருத்தன் புஷ்பகுமாரன்."

தனவேலுவும் வசந்தராவும் திகைத்துப் போன விழிகளோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

தனவேல் கேட்டார்.

"இந்த மூணு பேர்களையும் கொலை செய்யக் கூடிய அளவுக்கு அவர்களுக்கு என்ன கோபம்...?"

"அதையும் பேசிக்கிட்டாங்க..."

"என்ன சொல்லு...?"

"வசந்தரா அம்மா ஆந்திரா பார்டர்ல புதுசா ஒரு கெமிக்கல் ஃபேக்டரி கட்டப் போறாங்களாம். அங்கே கெமிக்கல் ஃபேக்டரி கட்டினா சுற்றுப்புறச் சூழல் மாசுபட்டு மக்களோட உடல்நலமும் விவசாயமும் பாதிக்கப்படுமாம். ஃபேக்டரி கட்ட வேண்டாம்னு போராட்டம் நடத்தியும் எந்திவிதமான

பிரயோஜனமும் இல்லையாம். அதனால் அம்மா மேல கோபம்."

வசுந்தரா திகைத்தாள். "ஓ..! இப்படி ஒரு கோபம் வேற இருக்கா..? அவங்க கோபம் கொலை செய்யற அளவுக்குப் போகுமென்று நான் நினைக்கலை. இப்ப இருக்கிற இந்த ஃபேக்டரியைக் கட்டும்போதுகூட எதிர்ப்பு வந்தது. ரோடு பூராவும் தட்டி எழுதி வெச்சு மறியல் செஞ்சாங்க. பந்தல் போட்டுக்கிட்டு உண்ணாவிரதம் இருந்தாங்க. என் வீட்டுக்கு முன்னாடி வந்து சத்தம் போட்டாங்க. இந்தப் போராட்டமெல்லாம் கொஞ்ச நாள் தான். அப்புறம் சத்தத்தையே காணோம். நான் ஃபேக்டரியைக் கட்டினேன். இதுவரைக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. அதே மாதிரிதான் இப்போ ஆந்திரா பார்டரில் புதுசா கட்டப் போகிற கெமிக்கல் ஃபேக்டரிக்கும் எதிர்ப்பு வந்தது. நான் அதை ஒரு பொருட்டாவே எடுத்துக்கலை."

சுஜா குறுக்கிட்டு சொன்னாள். "இது ஏதோ ஒரு இயக்கம் மாதிரி தெரியுது?"

"எத்தனை பேர்..?" தனவேல் கேட்டார்.

"ஏழெட்டு பேர் இருக்கலாம்."

"இளைஞர்கள்...?"

"ஆமா..."

"பெண்கள்..?"

"நான் பார்க்கலை..."

"சரி...! புதுசா கெமிக்கல் ஃபேக்டரி கட்டப் போறதால வசுந்தராதேவி மேல அவங்களுக்குக் கோபம். மத்த ரெண்டு பேர்களான ஜெயவர்த்தன், புஷ்பகுமாரன் மேல அவங்களுக்கு என்ன கோபம்?"

"ஜெயவர்த்தன் கள்ளநோட்டு பிரிண்ட் பண்ணி புழக்கத்துல விட்டுக்கிட்டு இருக்காராம். பினாமிகள் பேர்ல இரண்டு ஃபைனான்ஸ் கம்பெனிகளை நடத்தி இருபது கோடி ரூபாயை முடக்கி வெச்சிருக்காராம். பணத்தைப் பறிகொடுத்த ஏழைகளின் வயிற்றில் பற்றியெறிகிற நெருப்பில் ஜெயவர்த்தன் போன்றவர்கள் தகனம் செய்யப்படணும்ன்னு கோபமாக பேசிக்கிட்டாங்க."



"சரி..! புஷ்பகுமாரன்..?"

"ஒரு பக்கம் டீவி. சீரியல் பண்ணிக்கிட்டே இன்னொரு பக்கம் கல்லூரி மாணவிகளை உபயோகப்படுத்தி ப்ளூ ஃபிலிம் கேசட்டுகளைத் தயார் பண்ணி கல்ஃப் கன்ட்ரிங்களுக்கு சப்ளை பண்ணிட்டிருக்காராம். இந்த பிசினஸ்ல அவரோட ஒய்ஃப் ராஜாத்தியும் பார்ட்னராம். ராஜாத்தியோட உண்மையான பேர் அனிஷாவாம். மார்வாடி பொண்ணு. மும்பை விபசார விடுதியில் இருந்தவளாம். பெண்மையை வியாபாரமாக்கி லட்ச லட்சமாய் பணம் சேர்க்கும் புஷ்பகுமாரனைக் கொலை செய்யறதும் அவங்க இயக்கத்தோட நோக்கம்."

தனவேல் சில விநாடி யோசனைக்குப் பின் கேட்டார். "இவங்க போட்டிருக்கிற ஹிட் லிஸ்ட்ல இந்த மூணு பேர் மட்டும்தானா... இல்லை வேற யாராவது இருக்காங்களா?"

"அது எனக்குத் தெரியாது. அந்த மூணு பேரை மட்டும்தான் குறிப்பிட்டு பேசிட்டிருந்தாங்க."

"உன்னை அடைச்சு வெச்சிருந்த இடம் எந்த ஏரியா...?"

"ஏதோ ஒரு சவுக்குத் தோப்பு பகுதி. பக்கத்துல கடல் அலையோட சத்தம் கேட்டது."

"நீ எப்படி அவங்ககிட்டயிருந்து தப்பிச்சே."

"அன்னிக்கு விடியற்காலையில் என்னை வந்து எழுப்பினாங்க. அப்பவும் நான் மயக்கத்துல இருக்கிற மாதிரி நடிச்சேன். ரெண்டு பேர் என்னைத் தூக்கி ஒரு வேன்ல போட்டுக்கிட்டு எங்கேயோ கிளம்பினாங்க. ரெண்டு பேரும் முன் சீட்டுல. நான் மட்டும் பின் சீட்ல. வேன் போய்க்கிட்டிருந்தது அரை மணி கழிச்சு ஏதோ ஒரு இடத்துல நின்னுது. நான் மெல்ல கண் முழிச்சு கண்ணாடி ஜன்னல் வழியா பார்த்தேன்.

வேன் ஒரு லெவல் க்ராஸிங்கில் நின்னுட்டு இருந்தது. வேன் டிரைவர் ஹூரின்பாஸ் பண்ணப் போறதா சொல்ல தூக்கக் கலக்கத்துல இருந்தவன் தலையாட்டி மறுபடியும் தூங்க ஆரம்பிச்சட்டான்.

நான் அந்த ஐந்து நிமிஷ அவகாசத்தை உபயோகப்படுத்திக்கிட்டு வேனோட டோர் லாக்கை சத்தம் இல்லாமே திறந்துக்கிட்டு இருட்டுல இறங்கிட்டேன். பத்து நிமிஷம் ஹைவேஸ்ல ஓடி பைபாஸ் ரோடு பக்கமா வந்து லாரியை நிறுத்தி ஏறிக்கிட்டேன். அது ஜி.எஸ்.டி.ரோடுன்னு அதுக்கப்புறம தெரிஞ்சுகிட்டேன்.

சென்னை வந்து தெரிஞ்ச ஃப்ரெண்ட் வீட்ல தங்கி ரெஸ்ட் எடுத்துக்கிட்டு நேரா அம்மாவைப் பார்த்து விஷயத்தைச் சொல்லிட்டுப் போலாம்ன்னு வந்தேன்."

தனவேல் தான் கையோடு கொண்டு வந்திருந்த ப்ரீஃப்கேஸைத் திறந்து அந்த போட்டோவை எடுத்துக் காட்டினார். கெஸ்ட் ஹவுஸ் பாத் டப்பில் விழுந்து கிடந்தவனின் போட்டோ.

"இவனை உனக்குத் தெரியுமா?"

சுஜா பார்த்துவிட்டு திகைப்பாய் தனவேலை ...ிட்டான்.

"சார்..! இவன் ஆந்திராவில் பெரிய ரவுடி. சிராலா சித்தைய்யான்னு பேரு. ஏதாவது அரசியல் தகராறுன்னா இவன்தான் முன்னாடி நிப்பான். ஆள் செத்துட்டானா சார்...?"

"ம்... போஸ்ட் மார்டமும் முடிந்தது. இவன் மேடத்தோட கெஸ்ட்ஹவுஸ் பாத் டப்பில் விழுந்து கிடந்தான். அப்ப உடம்புல உயிர் இருந்தது. ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போனோம். கொஞ்ச நேரத்துல செத்துட்டான். இவனோட சர்ட்டு கை மடிப்பில் மூணு பாஸ்போர்ட் சைஸ் போட்டோக்கள் இருந்தது. அது நீ இப்ப சொன்ன ஜெயவர்த்தன், புஷ்பகுமாரன், வசுந்தரா மேடம் ஆகியோரின் போட்டோக்கள்."

"அப்படின்னா சிராலா சித்தைய்யாவும் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவனாகத்தான் இருக்கணும். வசுந்தரா அம்மாவைக் கொல்றதுக்காக வந்து இருக்கலாம்."

"சரி அப்படி வந்தவனை யார் கொலை பண்ணினதுன்னு தெரியலையே... எல்லாத்துக்கும் மேல ஹிட் லிஸ்ட்டில் இருக்கிற மூன்று பேரில்



ஜெயவர்த்தன் ராத்திரி கொலை செய்யப்பட்டிருக்கிறார்."

சுஜா திகைத்து திணறிக் கொண்டிருக்கும்போதே இன்னொரு போட்டோவையும் எடுத்துக்காட்டினார் தனவேல். மொட்டை மாடி வாட்டர் டேங்கிற்குக் கீழே கொலையாகிக் கிடந்த பெண்ணின் போட்டோ அது.

"இந்தப் பொண்ணு... யார்னு தெரியுதா பாரு?"

சுஜா பார்த்துவிட்டு தலையாட்டினான்.

"தெரியலை... சார்.. இது எந்த இடத்துல நடந்த சம்பவம் சார்...?"

"கொலை செய்யப்பட்ட ஜெயவர்த்தன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டு மொட்டைமாடியில் அந்தப் பெண் கொலை செய்யப்பட்டு கிடந்தா. கொலையாளி அதே வீட்ல தங்கியிருந்து ரெண்டு கொலைகளையும் பண்ணியிருக்கான். இந்தப் பொண்ணு யார்னு தெரிஞ்சா இந்த இருட்டான கேஸுக்குள்ளே கொஞ்சம் வெளிச்சம் கிடைக்கும்."

தனவேல் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வசுந்தரா ஒரு துண்டு பேப்பரில் வேகவேகமாய் ஏதோ எழுதி அவரிடம் நீட்டினாள். வாங்கிப் படித்தார்.

"பேச்சை நிறுத்த வேண்டாம். பேசிக் கொண்டே இருங்கள். அறைக் கதவுக்கு வெளியே நின்று யாரோ ஒட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் எழுந்து போய் மடக்குகிறேன்."

காகிதத்தில் இருந்த விஷயத்தை மனதில் வாங்கிக் கொண்டு தனவேல் பேச்சை அதே தொனியில் தொடர்ந்தார்.

"நேத்து ராத்திரி முழுவதும் ஏதோ திருவிழா மாதிரி மூணு மர்டர்ஸ். கொலையாளி ப்ரீ ப்ளானோடு மர்டர்களை பண்ணியிருந்தாலும் போலீஸைக் குழப்ப சில காரியங்களும் நடந்திருக்கு. சுஜாவோட ஸ்டேட்மெண்ட் படி அது ஒரு இயக்கம்னு தெரியுது. சோ..."

தனவேல் பேசிக் கொண்டிருக்கும்போதே, வசுந்தரா தன் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு சத்தம் இல்லாமல் எழுந்தாள்.

அறைக் கதவின் கீழ் இடைவெளியில் யாரோ நின்றிருப்பது அசையும் ஒரு கறுப்புக் கோடாய்த் தெரிந்தது.

நிச்சயமாய் யாரோ ஒட்டுக் கேட்கிறார்கள்.

வசந்தரா பூனை நடை நடந்து கதவை நோக்கிப் போனாள். நெருங்கி கைப்பிடியில் இடது கையை வைத்தாள்.

தனவேல் பேசிக் கொண்டிருந்தார்.

"ப்ளக்..."

கைப்பிடி கீழே சட்டென்று தாழ்ந்து கதவு பளிச்சென்று திறந்தது.

## 15

கதவின் கைப்பிடி சட்டென்று தாழ்ந்து கதவு 'பளிச்'சென்று திறந்து கொள்ள -

வெளியே -

யாரும் இல்லை.

வசந்தரா திகைத்தாள்.

'அதற்குள் யாரும் இந்த இடத்தை விட்டு ஓடியிருக்க முடியாதே...!'

தனவேல் எழுந்து வந்தார்.

"என்ன?"

"யாரையும் காணோம்..."

"நீங்க கதவைத் திறக்க வர்றதை தெரிஞ்சுக்கிட்டு ஓடிப்போயிருக்கலாம்..."

"அவ்வளவு சீக்கிரத்துல ஓடிவிட முடியாது மிஸ்டர் தனவேல்! இது நீளமான வராந்தா. எவ்வளவு வேகமா ஓடினாலும் பார்வைக்குக் கிடைச்சுடுவாங்க."

"வாங்க...! லிஃப்ட்டுக்குப் போய்ப் பார்க்கலாம்."

லிஃப்ட்டின் இயக்கம் அதே மாடியோடு நின்று போயிருந்தது.

"லிஃப்ட்டையும் யாரும் உபயோகப்படுத்தலை..."

"ஆச்சர்யமாயிருக்கு!"

"யாரோ நின்று ஒட்டு கேட்கிற மாதிரி பிரமை ஏற்பட்டிருக்கலாம்..."



"இல்லை... மிஸ்டர் தனவேல்...! கதவுக்கு வெளியே நிச்சயமா யாரோ நின்னு ஒட்டு கேட்டாங்க..." தீர்மான குரலில் சொன்ன வசந்தரா, மாடி வராந்தாவின் கைப்பிடியைப் பற்றிக் கொண்டு கீழே ஹாலைக் குனிந்து பார்த்தாள். கம்ப்யூட்டர்க்கு முன்பாய் உட்கார்ந்து கீ போர்டைத் தட்டிக் கொண்டிருந்த சுஜாதா பார்வைக்கு கிடைத்தாள். குரல் கொடுத்தாள்.

"சுஜா..."

சுஜாதா நிமிர்ந்தாள்.

"மேடம்..."

"ஒரு நிமிஷம் மேலே வா..."

கம்ப்யூட்டரைத் தற்காலிகமாய் ஊமை யாக்கிவிட்டு மாடிப்படிகளில் உயர்ந்து வந்தாள்.

"எஸ்...மேடம்..."

"மேலே என் ரூமுக்கு யாரையாவது அனுப்பி வெச்சியா...?"

"சுஜான்னு ஒருத்தர் வந்தாரே மேடம்."

"அவரை விட்டுடு! அவர்க்கப்புறம் யாராவது வந்தாங்களா...?"

"இல்லையே மேடம்..."

"உனக்கும் தெரியாம யாரோ வந்திருக்காங்க."

"நிச்சயமா யாரும் அப்படி வந்து இருக்க முடியாது மேடம். என்ன விஷயம் மேடம்...?"

"யாரோ என்னோட அறைக்கு வெளியே நின்னு பேச்சை ஒட்டு கேட்டிருக்காங்க. நான் கதவு திறக்க வர்றதை தெரிஞ்சுக்கிட்டு உடனே தப்பிச்சுட்டாங்க..."

சுஜாதா புன்னகைத்தாள். "ஸாரி மேடம்...! எனக்குத் தெரியாம ஒரு 'ஈ' எறும்பு கூட உங்க ரூம் பக்கம் வர முடியாது."

"அது எனக்கும் தெரியும் சுஜா... இருந்தாலும் நீ டாய்லெட் ஏதாவது போயிருக்கும்போது..."

"அரைமணி நேரமா நான் டாய்லெட் பக்கம் போகவே இல்லை மேடம்..."

"சரி... போய் உன்னோட வேலையைக் கவனி..."

வசுந்தரா சொல்லிவிட்டு தனவேலோடு தன்னுடைய அறையை நோக்கி நடந்தாள். தனவேல் மெல்லிய குரலில் கேட்டார்.

"சுஜாதா மேல சந்தேகப்படறீங்களா?"

"நோ... நோ... ஷி ஈஸ் ஜெம். இந்த கம்பெனியிலேயே என்னோட நம்பிக்கைக்கு உரியவள் இந்த சுஜாதா தான் அவளை சந்தேகப்படறது என்னை நானே சந்தேகப்பட்டுக் கொள்கிற மாதிரி..."

அறைக்குள் நுழைந்தார்கள். நாற்காலியில் உட்கார்ந்து காத்திருந்த கஜா புன்னகைத்தான்.

"யாராவது கிடைச்சாங்களா?"

"இல்லை..."

"நீங்க எப்படி தேடினாலும் யாரும் கிடைக்க மாட்டாங்க. ஏன்னா யாராவது வந்திருந்தாதானே...?"

"யாரும் வரலைன்னு உனக்குத் தெரியுமா?"

"தெரியும்..."

"கதவுக்குக் கீழே நிழல் தெரிஞ்சுதே...! இங்கே யாராவது நிக்காமே எப்படி நிழல் விழும்...?"

கஜா சிரித்தான்.

"இப்பக்கூட கதவைச் சாத்திப் பாருங்க. நிழல் தெரியும். யாரோ நின்னுட்டு இருக்கிறமாதிரி அசையும்.

தனவேல் எழுந்து போய் கதவைச் சாத்த வெளியே கதவுக்குக் கீழே நிழல் கோடு விழுந்தது. நான்கைந்து விநாடிகளுக்கு ஒரு முறை அசைந்தது.

"பார்த்தீங்களா...?"

"அது இது எ...எப்படி...?"

"வாங்க! காட்றேன்." சொன்ன கஜா எழுந்து போய்க் கதவைத் திறந்து வராந்தாவின் ஜன்னலில் அத்து மீறி நுழைந்திருந்த அந்த சின்ன மரக்கிளையைக் காட்டினான்.

"நம்ம பேச்சை ஒட்டுக் கேட்டது அந்த மரக் கிளைதான். இன்னும் ஒரு பதினைஞ்சு நிமிஷத்துக்கு இதனோட நிழல் கதவை விட்டு போகாது..."

தனவேல் புன்னகைத்தார். "கஜா சொல்றதுதான் சரி... அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்



பேய்னு சொல்லுங்க... இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி யார் வந்து ஒட்டு கேட்க முடியும்...? மிஸஸ் வசுந்தரா! நீங்க கொஞ்சம் டென்ஷனை குறைச்சுக்கிட்டு ரிலாக்ஸ்டா இருக்கிறது பெட்டர்..."

"எஸ்..." தன் தோள்களை சின்னதாய் 'ஜெர்க்' செய்து புன்னகைத்தாள் வசுந்தரா.

அதே விநாடிகளில்.

கீழே டாய்லெட் அறையை தாழிட்டுக்கொண்டு செல்போனில் சுஜாதா பேசிக் கொண்டிருந்தாள்.

"எதையும் கேட்க முடியலை பாஸ்..."

"ஏன்...?"

"நான் ஒட்டு கேட்கிறதை வசுந்தரா ஸ்மெல் பண்ணிட்டா..."

"எப்படி...?"

"வசுந்தரா ஜன்னல் மரக்கிளையோட நிழல் கதவுக்குப் பக்கமா விழுறதால அந்த நிழலை பயன்படுத்திக்கிட்டு நானும் போய் கதவுக்குப் பக்கத்துல நின்னேன். எப்படியோ ஸ்மெல் பண்ணிட்டா. சாவி துவாரத்துல கண்ணை வெச்சு பார்த்துக்கிட்டு இருந்ததால அவளோட முகபாவம் சட்டென்று பிடிபட்டது. கதவைப் பார்த்துக்கிட்டே துண்டுக் காகிதத்துல வேகமாக ஏதோ எழுத ஆரம்பிச்சா. நான் உடனே உஷாராகி பின்வாங்கி சத்தம் இல்லாம என்னோட சீட்டுக்கு வந்துட்டேன். நான் என் சீட்டுக்கு வந்து உட்கார்ந்த அடுத்த விநாடியே வசுந்தராவும் அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேலும் ரூமை விட்டு வெளியே வந்து யார் ஒட்டு கேட்டதுன்னு மாடி வராந்தா முழுக்க தேடிக்கிட்டு இருந்தாங்க..."

"உன்மேல அவங்களுக்கு சந்தேகம் வரலையே?"

"வரலை...! யாரையாவது மேலே அனுப்பி வெச்சியான்னு வசுந்தரா என்கிட்ட கேட்டா. நான் இல்லேன்னு சொல்லிட்டு கமுக்கமா இருந்துட்டேன்."

"சோ... ஒட்டு கேட்க முடியலை..."

"முடியலை... பாஸ்...! இனியும் முடியாது. அந்த வசுந்தரா பயங்கர சென்சிட்டிவ் டைப். எச்சச்சக்க

காஷியஸ். இல்லேன்னா இவ்வளவு பெரிய நிறுவனத்தை ஒரு பெண்ணாலே எப்படி நிர்வாகம் பண்ண முடியும்...?"

"சரி...! இன்னிக்கு ராத்திரிக்குள்ளே வான வில்லோட எட்டாவது நிறத்தை கண்டுபிடிக்கு வியா...?"

"கண்டிப்பா முடியும்னு நினைக்கிறேன். நேத்து ராத்திரி சபா கொண்டு வந்து கொடுத்த ஃபைல் குறிப்பு ரொம்பவும் உபயோகமா இருக்கும்னு நினைக்கிறேன் பாஸ்.. ராத்திரி பத்து மணி வரைக்கும் இங்கே ட்யூட்டி பார்க்க வேண்டியிருக்கு. யாரும் இருக்கமாட்டாங்க. எல்லாத்தையும் கிளறிப் பார்த்துடறேன். நாளைக்குக் காலையில் உங்களுக்கு போன் பண்றேன்..."

"விஷ் யூ ஆல் த பெஸ்ட்...!"

"தேங்க்யூ பாஸ்..." சுஜாதா செல்போனை ஊமையாக்கி ப்ளவுஸ் பிளவுக்குள் பதுக்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

அவள் மேஜையின் மேல் இருந்த டெலிபோன் அலறிக் கொண்டிருந்தது.

"ஹலோ..."

"யாரு சுஜாதாவா...?" ஒரு ஆண் குரல்.

"ஆமா..."

"நான் மனோ..."

மனோ என்னும் மனோகரன் வசுந்தராவின் ஒரே மகன். ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நிரந்தரமாய்த் தங்கிவிட்டவன்.

"ச...சார்...! நீங்களா...? சிட்னியிலிருந்தா பேசறீங்க...?"

"இல்லை. சென்னை வந்துட்டேன்... அம்மாவோட ரூமுக்கு கனெக்ட் பண்ணு."

"இதோ... சார்..." சுஜாதா பட்டனை அழுத்தி வசுந்தராவின் டெலிபோனுக்கு இணைப்பு கொடுத்தாள்.

"மேடம்...! உங்க சன் லைன்ல இருக்கார்" சொல்லிவிட்டு ரிஸீவரை வைத்தவள் பக்கத்து



அறைக்கு நுழைந்து சுற்றிலும் ஒரு பூனை பார்வை பார்த்துவிட்டு அந்த எக்ஸ்டன்ஷன் ரிஸீவரை சத்தம் இல்லாமல் எடுத்து காதுக்குப் பொருத்திக் கொண்டாள். வசுந்தரா - மனோவின் குரல்கள் தெளிவாய் கேட்டன.

"அம்மா...! நான் சென்னை ஏர்போர்ட்டிலிருந்து பேசறேன்..."

"என்ன மனோ! திடீர்னு சென்னை வந்திருக்கே.. ஒரு ப்ரீயர் இன்டிமேஷன்கூட கொடுக்கலை..."

"வரவேண்டிய கட்டாயம்."

"விஷயம் என்னான்னு சொல்லு..."

"நேர்ல வந்து சொல்றேன்" ரிஸீவர் வைக்கப் பட்டுவிட சுஜாதாவும் ரிஸீவரை குழப்ப முகத்தோடு வைத்தாள்.

'மனோ எதுக்காக சிட்னியிலிருந்து திடீர்னு புறப்பட்டு வந்திருக்கான்...?'

தன் அழகான நெற்றியை இடது கையின் இரண்டு விரல்களால் தேய்த்துக் கொண்டு யோசிக்க ஆரம்பித்தாள் சுஜாதா.

'அம்மாவுக்கும் மகனுக்கும் என்னைக்குமே டேர்ம்ஸ் சரியாய் இருந்தது இல்லை...!'

'போன வருடம் ஒரு நாள் எதற்காகவோ அவசர அவசரமாய் வந்து போனவன் இப்போது திடீரென்ற வருகிறான்!'

'எதற்காக இருக்கும்...?'




மனோகரன் வியர்த்த முகமாய் டாக்ஸியில் வந்து இறங்கி விப்ஜியார் அலுவலகக் கட்டடத்துக்குள் நுழைந்தான். சென்ட்ரலைஸ்ட் ஏ.ஸி. அவனுடைய முகத்துக்கு ஐஸ் ஒத்தடம் கொடுத்தது. சுஜாதா எதிர்கொண்டு ஒரு இன்ஸ்டன்ட் புன்னகையைக் கொடுத்தாள்.

"குட்மார்னிங் சார்..."

லிஃப்ட்டை நோக்கி போய்க் கொண்டே கேட்டான் மனோ.

"சுஜா...! எப்படியிருக்கே...?"

"ஃபைன் சார்..."

"ஏதாவது ப்யூட்டி பார்லர்க்கு போறியா...? கொஞ்சம் அழகாயிருக்கிறே...!"

"நீங்க கூட முன்னைக்கு இப்போ ஸ்மார்ட் சார்..."

"தேங்க்யூ..." லிப்ட்டுக்குள் நுழைந்து பட்டனைத் தட்ட அது உயர்ந்தது. வசந்தராவின் மாடிக்குக் கொண்டு போய் உமிழ்ந்தது.

வராந்தாவில் வேகநடை போட்டவன், வசந்தராவின் அறைக்கு முன்பாய் வந்து நின்று அழைப்பு மணிக்கு வேலை கொடுத்தான்.

"கெட் இன் ப்ளீஸ்..."

மனோ டோர் க்ளோசரைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைய, வசந்தரா சிக்கனமாய் சிரித்து -

"வா... மனோ...!" என்றாள். மனோ அறையில் இருந்த அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேலையும், சுஜாவையும் பார்த்துவிட்டு லேசாய்த் தயங்கி நிற்க, வசந்தரா தொடர்ந்தாள்.

"மனோ! இவரை உனக்குத் தெரியும்ன்னு நினைக்கிறேன். அஸிஸ்டெண்ட் போலீஸ் கமிஷனர் தனவேல்."

"தெரியும்...! அப்பா இருக்கும்போது அடிக்கடி இதே ரூம்ல பார்த்திருக்கேன்..." சொன்னவன் அவரோடு கை குலுக்கிக் கொண்டே பார்வையில் ஒரு கேள்விக்குறியோடு சுஜாவைப் பார்த்தான்.

வசந்தரா சொன்னாள். "ஹி ஈஸ் சுஜா. இன்னிக்கு உன்னோட அம்மாவை நீ உயிரோடு பார்க்கிறதுக்கு காரணமே இந்த சுஜாதான்..."

மனோவின் முகம் மாறியது.

"நீ என்னம்மா சொல்றே?"

"உனக்கு எல்லாத்தையும் விளக்கமா அப்புறம் சொல்றேன். நீ இவ்வளவு அவசரமா சிட்னியிலிருந்து சென்னை வர்றதுக்கு என்ன காரணம்? அதை மொதல்ல சொல்லு..."



"அங்கே நான் பண்ணிட்டிருந்த பிசினஸில் கொஞ்சம் ப்ராப்ளம். அது செட்டிரைட் ஆகிற வரைக்கும் சென்னைல இருக்கலாம்னு வந்தேன்."

"பிசினஸ்ல என்ன ப்ராளம்?"

"ஆஸ்திரேலியாவில் இருந்த ஒட்டு மொத்த மல்ட்டி நேஷனல் பேங்க்ஸும் சில அதிரடி மாற்றங்களைக் கொண்டு வந்ததால பிசினஸை ஸ்மூத்தா ரன் பண்ண முடியலை."

"இப்படியெல்லாம் பிரச்னை வரும்ன்னு நான் அன்னிக்கே சொன்னேன். நீ கேட்கலை."

"நான் ஒரு ஆறு மாசம் சென்னைலதான் இருக்கப் போறேன். பேங்க் பாலிஸியெல்லாம் மாறின பின்னாடிதான் ஆஸ்திரேலியா போவேன்."

தனவேல் குறுக்கிட்டு சொன்னார். "மனோ! நீங்க இப்போ சென்னை வந்தது ரொம்பவும் நல்ல காரியம். உங்க அம்மாவோட உயிர்க்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்துல நீங்க அவங்க பக்கத்திலேயே இருக்க வேண்டியது அவசியம்."

"அம்மாவுக்கு என்ன ஆபத்து...?"

"ஏதோ ஒரு இயக்கம் ஹிட் லிஸ்ட் ஒண்ணை தயார் பண்ணியிருக்கு. அந்த ஹிட் லிஸ்ட்ல மூணு பேர் இருக்காங்க. ஜெயவர்த்தன், புஷ்பகுமாரன், வசந்தரா. இந்த லிஸ்ட்ல ஜெயவர்த்தன் உயிரோடு இப்போ இல்லை."

மனோவின் முகம் கலக்கத்தில் நிறம் மாறியிருந்தது.

"எதுக்காக அந்த ஹிட் லிஸ்ட்...?"

"தெரியலை..." என்று பெருமூச்சுடன் தலையாட்டினார் தனவேல். கடந்த இரண்டு நாட்களாய் நடந்த சம்பவங்களைச் சொல்லி முடித்தார்.

மனோ தன் நெற்றியை இரண்டு கைகளாலும் நடுக்கமாய் பிடித்துக் கொண்டான்.

"மைகுட்னஸ்...! எனக்குத்தான் சிட்னியில் பிரச்னைன்னா அம்மாவுக்கு இங்கே இப்படியொரு பிரச்னையா...? ஹிட் லிஸ்ட்ல சேர்க்கக்கூடிய அளவுக்கு அம்மா என்ன தப்பு பண்ணினாங்க...?"

தனவேல் புன்னகைத்தார். "தப்பு பண்ணினவங்க தான் ஹிட் லிஸ்ட்ல வரணும்ங்கிறது இல்லை. நல்லவங்களும் அதுல இருப்பாங்க. உங்க மதர் இன்னிக்கு பிசினஸ் ஃபீல்ட்ல வெகு வேகமாக நம்பர் ஒன் இடத்தை நோக்கி போய்க்கிட்டு இருக்காங்க. அவங்க வளர்ச்சியை விரும்பாத யாரோ கூட அந்த ஹிட் லிஸ்ட்டை பிரிப்பேர் பண்ணியிருக்கலாம்."

வசந்தரா கஜாவை கை காட்டினாள். "கஜா மட்டும் மனசு மாறி என்கிட்ட வந்து உண்மையைச் சொல்லாமே இருந்தா என்னோட கதை நேத்தே முடிஞ்சு போயிருக்கும்..."

கஜா தோள்களைக் குலுக்கி பெருமையாய்ச் சிரித்தான். "நான் ஒரு புரொபஷனல் கில்லர்தான். சட்டத்தோட கைகளுக்கு மாட்டாம சில கொலைகளைப் பண்ணியிருக்கேன். ரெண்டு தடவை ஜெயிலுக்குப் போயிருக்கேன். கோர்ட்ல ஏழெட்டு கேஸ் இருக்கு. ஆனா ஒருத்தரை தண்டிக்கிறதுக்கு முந்தி அந்த ஆள் உண்மையிலேயே தப்பு பண்ணியிருந்தாரா இல்லையான்னு விசாரிச்சுப் பாரத்துட்டுதான் கை வெப்பேன். இதுவரைக்கும் நான் மோசமான அரசியல்வாதிகளையும், மோசடி பைனான்ஸ் பேர்வழிகளையும்தான் தண்டிச்சிருக்கேன். பெண்களைத் தண்டிக்கிறதுல எனக்கு உடன்பாடு கிடையாது. அதிலும் வசந்தரா அம்மாவைப்பத்தி வெளியே விசாரிச்சபோது எல்லாரும் நல்லவிதமா சொன்னங்க. அதான் வந்து உண்மையைச் சொல்லிட்டேன். அதனால் எனக்கு அந்த ஆபத்து வந்தாலும் பரவாயில்லை."

கஜா சொல்லிக் கொண்டிருக்கும்போதே தனவேலின் பாக்கெட்டில் இருந்த செல்போன் சிணுங்கிக் கூப்பிட்டது. அவர் எடுத்தார்.

"எஸ்..."

மறுமுனையில் குரல் பதட்டமாய் வெளிப்பட்டது.

"சார்...! நான் இன்ஸ்பெக்டர் ஜோதிபாண்டியன்."

"சொல்லுங்க..."

"ஜெயவர்த்தன் மர்டர் விஷயமா இன்வெஸ்ட்டிகேஷனை ஸ்டார்ட் பண்ணி முதல் கட்டமா



ஜெயவர்த்தனின் ஃபேக்டரியை சோதனைக்கு உட்படுத்திப் பார்த்தோம். லேட்டஸ்ட் பிரிண்டிங் டெக்னாலஜியை உபயோகப்படுத்தி வெளிநாட்டு கரன்ஸிகளை ப்ரிண்ட் பண்ணி கட்டுக்கட்டா அடுக்கி வெச்சிருக்கார். அது தவிர நிறைய ஃபோர்னோகிராஃபி புக்ஸ். அந்த வேலைகளுக்காகவே ஒரு பாதாள கிடங்கு உபயோகப்பட்டு வந்திருக்கு. நீங்க ஸ்பாட்டுக்கு வந்து ஒரு க்ளான்ஸ் பார்த்துட்டா ஃபேக்டரி, ஆபீஸ் மொத்தத்தையும் சீல் வெச்சடலாம்..."

தனவேல் எழுந்தார். "அ'யம் கம்மிங்...! ப்ரஸ்ஸுக்கு இப்போ இந்த விஷயம் தெரிய வேண்டாம்..."

"எஸ்...சார்..."

"வந்துக்கிட்டேயிருக்கேன்..." செல்போனை அணைத்துப் பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்ட தனவேல் வசந்தராவை ஏறிட்டார்.

"ஜெயவர்த்தன் ஒரு கள்ளநோட்டு பேர்வழின்னு அந்த இயக்க ஆட்கள் பேசிக்கிட்டதாக கஜா சொன்னது உண்மைன்னு இப்போ தெரிய வந்திருக்கு. அவரோட பிரிண்டிங் ப்ளேஸில் வெளிநாட்டு கரன்ஸிகளைக் கட்டுக்கட்டா பிடிச்சிருக்காங்க... போய் எல்லாத்தையும் சீல் பண்ணணும்."

வசந்தரா குறுக்கிட்டுக் கேட்டாள்.

"வாட் அபௌட் கஜா...?"

"கஜாவை நான் கூட்டிட்டுப் போறேன்...! குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கிறவரைக்கும் கஜா போலீஸ் கஸ்டடியில் இருக்கிறதுதான் பெட்டர். கஜா நீ என்கூட புறப்படு."

கஜா எழுந்து கொண்டான். தனவேல் மனோவிடம் திரும்பினார்.

"மனோ...! ஆந்திரா பார்டரில் ஒரு கெமிக்கல் ஃபேக்டரி கட்டறது சம்பந்தமா அந்த இயக்கத்துக்கு உங்க மதர் மேல கோபம். இந்த இயக்கத்தைப் பிடிக்கிற வரைக்கும் அவங்க பாதுகாப்பா இருக்கணும். அதேமாதிரி நீங்களும் பாதுகாப்பா

இருக்கணும். மூணாறில் உங்களுக்கு ஒரு எஸ்டேட் இருக்கிறதாகவும், அங்கே போய் சில நாட்கள் தங்கிக்கவும் உங்க மதர் முடிவு பண்ணியிருக்காங்க. நீங்களும் அவங்க கூடவே கிளம்பிப் போகறது பெட்டர். ஷேடோ செக்யூரிட்டியும் உங்களை ஃபோலோ பண்ணிட்டிருக்கும்..."

"எப்ப கிளம்பணும்...?"

"இன்னிக்கு ராத்திரி..."

"அந்த இயக்கம் எங்களைக் கண்காணிக்காதா?"

"அவங்களை ஏமாத்த கைவசம் ஒரு வழியிருக்கு. அதைச் சாயந்தரம் வந்து பேசிக்குவோம்..."

தனவேல் கிளம்பிப் போக - சுஜாவும் அவரைப் பின்தொடர்ந்தாள். அவர்கள் போய் கதவு சாத்திக் கொண்டதும், மனோ கலக்கமாக வசுந்தராவை ஏறிட்டான்.

"என்னம்மா...இதெல்லாம்...?"

"ஒண்ணுமே புரியலை. ஆந்திரா பார்டரில் நாம கெமிக்கல் ஃபேக்டரி கட்டறதை நிறுத்திடலாம்னு பார்க்கறேன். ஹிட் லிஸ்டல என்னோட பேர் இருக்கிறதுக்கு அதுதான் காரணம்..."

"நான் அப்படி நினைக்கலை..."

"பின்னே...?"

"அதுக்கெல்லாம் காரணம்... வந்து..."

"சொல்லு..."

மனோ குரலைத் தாழ்த்திக் கொண்டு மெல்லிய குரலில் சொன்னான்:

"வானவில்லோட எட்டாவது நிறம்."




வசுந்தரா கொஞ்சம் கலக்கமாய் நிமிர்ந்து மனோகரனை ஏறிட்டாள்.

"மனோ...! நீ என்ன சொல்றே...? வானவில்லோட எட்டாவது நிறத்தைப் பற்றி வெளியே தெரிஞ்சிருக்கும்னு நீ நினைக்கிறியா..."



"என் மனசுக்குள்ளே லேசா அந்த சந்தேகம் இருக்குமா. என்னா உன்னோட உயிர்க்கு ஒரு இயக்கம் குறிவெச்சிருக்குன்னா அதுக்குக் காரணம் அதுவாகத்தான் இருக்க முடியும்..."

"நோ...மனோ...! வானவில்லின் எட்டாவது நிறம் நம்ம ரெண்டு பேர் மனசுக்குள்ளேயும் புதைக்கப்பட்ட ரகசியம். இந்த ரகசியம் வெளியே வர வாய்ப்பே கிடையாது... ஆந்திரா பார்டர்ல நாம கெமிக்கல் ஃபேக்டரி கட்றதை நிறுத்திட்டா இந்தப் பிரச்சனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வெச்சுடலாம்..."

"இப்படி சொல்லி உன்னையே நீ ஏமாத்திக்காதேயம்மா. ஆந்திரா பார்டர்ல நாம ஃபேக்டரி கட்ட முடிவு பண்ணி ரெண்டு வருஷமாச்சு. சைட்டுக்குப் போய் பூமி பூஜை போட்டபோது ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த ஐம்பது பேர் கூட்டமா வந்து கோஷம் போட்டாங்க. போலீஸைப் பார்த்ததும் ஓடிப்போய்ட்டாங்க. அதுக்கப்புறம் எந்தப் பிரச்சனையும் வரலை. ஃபென்ஸிங் போடோம். சின்னதா ஷெட் கட்டினோம். எந்த எதிர்ப்பும் வரலை. ஃபைனான்ஸ் பிரச்சனையால் ஃபேக்டரி கன்ஸ்ட்ரக்ஷனைத் தள்ளிப் போட்டிருக்கோம். இந்த நிலைமையில் நாம இருக்கும்போது ஆந்திராவைச் சேர்ந்த ரௌடி சிராலா சித்தையாவுக்கு உன்னைக் கொலை செய்யணும்ங்கிற எண்ணம் வரவாய்ப்பே இல்லையே...!"

"மனோ..." மகனின் கைகளை நடுக்கமாய்ப் பற்றினாள் வசுந்தரா. "வானவில்லோட எட்டாவது நிறம் வெளியே தெரியக் கூடாது. உனக்கும் எனக்கும் மட்டும் தெரிஞ்ச அந்த நிறம் வேறு யாரோட பார்வையிலேயும் பட்டுடாம பார்த்துக்கணும்..."

"இதைப்பற்றி இனிமே நீ கவலைப்படாதேம்மா... நான் பார்த்துக்கிறேன். அந்த ஃபைல்ஸ் எல்லாம் எங்கே இருக்கு...?"

'என்னோட ஸேஃப் வால்ட்ல..."

"பார்த்துடலாமா...?"

"வா..."

இருவரும் லிஃப்ட்டில் பயணித்து கீழே வந்தார்கள். கம்ப்யூட்டர்க்கு முன்பாய் உட்கார்ந்து கீ போர்டைத் தட்டிக் கொண்டிருந்த சுஜாதா ஒரு மரியாதைக்காக எழுந்து நிற்க, அதை இருவரும் பொருட்படுத்தாமல் சிஸ்டம்ஸ் அண்ட் அக்கவுண்ட்ஸ் செக்ஷனுக்குள் சாவியை உபயோகித்து நுழைந்தார்கள். உயிரில்லாத கம்ப்யூட்டர்கள் ப்ளாஸ்டிக் உறைகளில் உண்மைகளை கர்ப்பம் தாங்கி தூங்கிக் கொண்டிருக்க, மனோகரன் அந்த பெண்டியம் ஃபோர் கம்ப்யூட்டர்க்கு முன்பாய் போய் உட்கார்ந்தான். மின்சாரம் கொடுத்தான்.

"இந்த கம்ப்யூட்டர்க்கு என்ன பாஸ்வேர்ட்?"

"எய்த் கலர் ஆஃப் ரெயின்போ."

கீ போர்டைத்தட்டிவிட்டு மௌஸை இயக்கினான் மனோகரன். கம்ப்யூட்டரின் மானிட்டர் திரை ரத்தச் சிவப்பாக மாறி 'அலர்ட்' என்ற கறுப்பு நிற வார்த்தைகளை உற்பத்தி செய்து காட்டியது. கீழே கேள்வி ஒன்று பிறந்தது. கிவ் மீ செகண்ட் பாஸ்வேர்ட்."

மனோ வசந்தராவைப் பார்க்க, அவள் "ஸ்கை ஈஸ் த லிமிட்..." என்றாள்.

கீ போர்டு தட்டப்பட்டதும் கம்ப்யூட்டர் வழிவிட்டது. மானிட்டர் திரையின் வலது பக்க மூலையிலிருந்து ஒவ்வொரு எழுத்தாய் புறப்பட்டு வந்தது.

முதல் எழுத்து V. இரண்டாவது I மூன்றாவது B. நான்காவது G. ஐந்தாவது Y. ஆறாவது O. ஏழாவது R.

'VIBGYOR.'

மௌஸை இயக்கினான் மனோகரன்.

"ஹோ மீ எய்த் கலர் அஃப் ரெயின்போ?"

ஒவ்வொரு எழுத்தும் அந்தந்த நிறத்துக்கு மாறிக் கொண்டிருக்க கம்ப்யூட்டரின் இடது பக்க மூலையில் இருந்து ஆங்கில இஸட் (Z) எழுத்து புறப்பட்டு வந்து விப்ஜியாரோடு ஒட்டிக் கொண்டது.

VIBGYOR-Z



"ப்ரஸைல் ப்ளீஸ்..." மனோகரன் கேட்க, கம்ப்யூட்டர் மௌனம் சாதித்தது.

"ப்ராஸஸ் ப்ளீஸ்..."

"ஸாரி..." என்றது கம்ப்யூட்டர்.

"என்னம்மா இது...?"

"என்னான்னு தெரியலையே... ரீஸன் கேளு" கேட்டான் மனோ.

இரண்டு நிமிஷத்திற்குப் பிறகு பதில் வந்தது.

'எச்சரிக்கை. எட்டாவது நிறத்தைக் கண்டுபிடிக்க யாரோ முயற்சி செய்கிறார்கள். தேவை கவனம்.

மனோகரன் தலைய நிமிர்ந்து அதிர்ச்சியாய் பார்த்தான். "என்னம்மா இது... இவ்வளவு அலட்சியமா இருந்திருக்கே. யாரோ நீயில்லாத நேரத்துல கம்ப்யூட்டரை சீண்டிப் பார்த்து இருக்காங்க."

வசந்தராவின் கண்களிலும் கலக்கம்.

"சாவி என்கிட்ட இருக்கும்போது இந்த சிஸ்டம்ஸ் அறைக்குள்ளே யாரும் நுழைய முடியாதே...?"

"சுஜாதா...?"

"அவ ஃப்ரண்டல இருக்கிற ரூமோடு சரி."

"வேற யார்...?"

"அந்தக் கம்ப்யூட்டர்ல ஏதாவது குளறுபடி இருக்கலாம்னு நினைக்கிறேன்..."

"குளறுபடியா... நோ சான்ஸ். இது பெண்டியம் ஃபோர். சரியான அறிவு ஜீவி. நிச்சயமா யாரோ ட்ரை பண்ணியிருக்காங்க."

வசந்தராவுக்கு வியர்த்தது.

"இப்ப என்ன பண்றது மனோ...?"

"வலை விரிக்கணும்..."

"வலையா..."

"ம்... இந்த கம்ப்யூட்டரை சீண்டிப் பார்த்த குள்ள நரியைப் பிடிக்க வேண்டாமா...!"

"எப்படிப் பிடிகக முடியும்...! இருபத்திநாலு மணி நேரமும் இதே சிஸ்டம்ஸ் அறைக்கு முன்னாடி நின்னுட்டிருக்க முடியுமா...?"

"அம்மா...! நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி வானவில்லோட எட்டாவது நிறம் பற்றின தகவல் எப்படியோ வெளியே போயிருக்கு. அதனாலதான் உன்னோட உயிர்க்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கு."

"சரி... ஜெயவர்த்தனுக்கும் புஷ்பகுமாரனுக்கும் அதுல என்ன தொடர்பு இருக்க முடியும்?"

"ஏதோ தொடர்பு இருக்கப் போய்த்தான் இத்தனைப் பிரச்சனைகளும்...! அம்மா...! நான் இப்போ சொல்லப் போகிற விஷயம் நமக்குள்ளே இருக்கட்டும்."

"என்ன சொல்லப் போறே...?"

"மூணாறு எஸ்டேட் பங்களாவுக்கு நீ மட்டும்தான் போகப்போறே...?"

"நீ...?"

"யார்க்கும் தெரியாம நம்ம கம்பெனிக்குள்ளேயே இருக்கப் போறேன். அந்த குள்ள நரியை மடக்கப் போறேன்..."

"இது கொஞ்சம் ரிஸ்க்கா தெரியுதே."

"எடுக்க வேண்டிய ரிஸ்க். இல்லேன்னா நீ உயிரோடு இருக்க முடியாது" சொன்ன மனோகரன் கம்ப்யூட்டரை இயக்கி அரைமணி நேரம் பார்த்துவிட்டு சிஸ்டம்ஸ் அறையிலிருந்து வெளியே வந்தான்.

இருவரும் முன்னறைக்கு வந்தார்கள். கம்ப்யூட்டர்க்கு முன்பாய் உட்கார்ந்திருந்த சுஜாதா எழுந்து நின்றாள்.

"மேடம்..."

"என்ன...?"

"இன்னிக்கு ராத்திரி வெளியூர் போகப் போறதா சொன்னீங்க...?"

"ஆமா..."

"எல்லா ஸ்டாஃப்புக்கும், ஷெட்யூல் ப்ரோக்ராம் போடணும்."

"போட்டுடு..."

"நீங்க சைன் பண்ண வேண்டியிருக்கும் மேடம்." மனோகரன் குறுக்கிட்டான்.



"இதோ பார் சுஜாதா... ஒரு ரெண்டு மூணு நாளைக்கு அம்மாவையும் என்னையும் எதுக்கும் தொந்தரவு படுத்தாதே... நாங்க ரெண்டு பேரும் வெளியூர் போகப் போறோம். ஷெட்யூல் ப்ரோக்ராமை ப்ரிப்பேர் பண்ணி ஒர்க்ஸ் மேனேஜர் சந்தானத்துக்கிட்டே காட்டி சைன் வாங்கிக்க..."

"எஸ்... சார்..."

கதவைச் சாத்தி தாழிட்டுக் கொண்டு செல்போனை உயிர்ப்பித்து பேச ஆரம்பித்தான்.

"பாஸ்..."

"என்ன... சிட்னியிலிருந்து வந்திருக்கிற கன்னுக்குட்டி என்ன சொல்லுது...?"

"ஒண்ணும் புரியலை பாஸ். ரெண்டு பேரும் இன்னிக்கு ராத்திரி வெளியூர் போகப் போறாங்க..."

"எந்த ஊர்...?"

"தெரியலை..."

"அவங்க எந்த ஊருக்கோ போகட்டும். நீ ராத்திரி சிஸ்டம்ஸ் அறைக்குள்ளே புகுந்து பார்த்துடு. இதுவே உன்னோட கடைசி முயற்சியாகவும் இருக்கணும். ஜெயிச்சுக்காட்டணும்..."

"இந்த தடவை எனக்கு தோல்வி கிடையாது பாஸ்..."

"எனக்குத் தெரியும்... யூ ஆர் வெரிகுட் கோயிங்... இனி சாயந்தரம் பேசுவோம்."

"ஓ.கே.பாஸ்..." சுஜாதா சொல்லி செல்போனை அணைத்த விநாடி.அது மறுபடியும் மெலிதாய் முனகி முனகி கூப்பிட்டது.

ஆன் செய்து காதுக்குக் கொடுத்தாள்.

"எஸ்..."

"சுஜாதா...?" ஒரு ஆணின் குரல் கேட்டது.

"எஸ்... ஹோல்டிங்..."

"என்னையும் உன் திருட்டு பிசினஸுக்கு பார்ட்னரா சேர்த்துக்கக் கூடாதா...?"

சுஜாதாவின் இதயத்துடிப்பு இடறியது.

## 18

சுஜாதாவின் இதயத் துடிப்பு இடறிக் கொண்டிருக்க செல்போனில் மறுபடியும் அந்த ஆண் குரல் கேட்டது.

"என்ன பதிலையே காணோம்... என்னையும் உன் திருட்டு பிசினஸுக்கு பார்ட்னரா சேர்த்துக்கக் கூடாதா?"

"யார்... நீ?" சுஜாதா கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக்கொண்டு கேட்டாள்.

"நான் யார்ன்னு கேட்டு இன்டர்வ்யூ பண்ணித்தான் உன்னோட திருட்டுத்தனத்துக்கு என்னை பார்ட்னரா சேர்த்துக்குவியா...? நீ சகலகலாவல்லியின்னா நான் வில்லாதி வில்லன். இந்த ஒரு க்வாலிஃபிகேஷனே போதும்ன்னு நினைக்கிறேன்."

"டெலிபோனுக்கு பின்னாடி ஒளிஞ்சுகிட்டு வீரம் பேசற கோழைகளை எனக்குப் பிடிக்காது."

"அப்படின்னா சந்திக்கலாம்னு சொல்றியா?"

"ம்... சந்திக்கலாம்..."

"எங்கே..?"

"நீ எங்கே சொன்னாலும் அங்கே வந்து உன்னைச் சந்திக்க பேச நான் தயாராயிருக்கேன்."

"சரி...! பட்... நீ தனியாத்தான் வரணும். யாரையும் கூட்டிட்டு வரக்கூடாது..."

"இது என்ன தேர்தல் கூட்டணியா - யாரையாவது கூட்டுச் சேர்த்துக்கிட்டு வர்றதுக்கு... எனக்கு யார்கிட்டேயும் பயம் கிடையாது. இந்த மாதிரி பிரச்சனைகளை தனியா ஃபேஸ் பண்ணித்தான் எனக்குப் பழக்கம். நான் தனியாத்தான் வருவேன்..."

"எங்கே மீட் பண்ணலாம்...?"

"நீயே சொல்லு..."

"கோல்டு வேவ்ஸ் ரெஸ்டாரெண்ட் தெரியுமா?"

"நுங்கம்பாக்கம் லேக் ஏரியாவில் இருக்கே?"

"அதேதான்...! போயிருக்கியா...?"



"இல்லை..."

"கொஞ்சம் நிழல்தனமான காரியங்களுக்கு ஏற்ற ரெஸ்டாரெண்ட்."

"எத்தனை மணிக்கு வரட்டும்...?"

"லேடீஸ் ஃபர்ஸ்ட். உன்னோட சௌகரியப்படி நீயே டைம் ஃபிக்ஸ் பண்ணு..."

"ராத்திரி எட்டு மணி..."

"வர்றேன்..."

"உன்னை எப்படி அடையாளம் கண்டுக்கிறது?"

"எனக்குத்தான் உன்னைத் தெரியுமே! சரியா எட்டு மணிக்கு கோல்டுவேவ்ஸ் ரெஸ்டாரன்ட்ல நான் இருப்பேன். டின்னர் சாப்பிட்டுக்கிட்டே பார்ட்னர்ஷிப் போட்டுக்கலாம்."

"நோ...! அங்கே நான் சாப்பிட வரலை. பேச மட்டுமே... அதுவும் பத்து நிமிஷம்..."

"இட்ஸ்... ஓ.கே. ஃபர்ஸ்ட் வி வில் மீட்." மறுமுனையில் செல்போன் அணைந்தது.

சுஜாதா லேசாய் நெற்றி வியர்த்தாள். 'எப்படியோ விஷயம் கசிந்து யார் காதுக்கோ போய்விட்டது.'

'யாரவன்...?'

'யோசனை செய்து கொண்டிருப்பதில் ஒரு பைசா பிரயோசனம் கிடையாது...!'

'உடனடியாய் பாஸுக்கு இந்த விஷயத்தை கன்வே செய்து ஆலோசனை பெறுவது அதி முக்கியம்...!'

செல்போனில் பாஸைப் பிடித்தாள். சொன்னாள். அவர் செவி மடுத்துவிட்டுக் கேட்டார்.

"குரலை நோட் பண்ணினியா...?"

"பண்ணினேன் பாஸ்... அது யார்ன்னு ஐடெண்டிஃபை பண்ண முடியலை."

"எட்டு மணிக்குத்தானே உங்க சந்திப்பு...?"

"ஆமா பாஸ்..."

"நீ தைரியமா அவனை மீட் பண்ணப் போ. நான் சபாவை அனுப்பி வைக்கிறேன். சபா அதே ரெஸ்டாரெண்ட்ல ஏதாவது ஒரு டேபிள்ல உட்கார்ந்துக்கிட்டு உன்னையும் வரப்போகிற அந்த

எக்ஸையும் வாட்ச் பண்ணிட்டிருப்பான். உனக்கு ஆபத்து வர்ற மாதிரி இருந்தா சபா உதவிக்கு வருவான். மற்றபடி அவனும் உன்னைக் கண்டுக்க மாட்டான். நீயும் அவனைக் கண்டுக்க வேண்டாம்."

"எஸ்...பாஸ்..."

"எட்டு மணிக்கு அவனைப் பார்த்துட்டு ...ப்படியும் நீ கம்பெனிக்கு வரணும். கம்ப்யூட்டர் சிஸ்டத்தைப் பார்க்கணும். இல்லையா...?"

"ஆமா பாஸ்... இன்னிக்கு ராத்திரி எப்படியும் கம்ப்யூட்டர் சிஸ்டத்துக்குள்ளே புகுந்து வானவில்லின் எட்டாவது நிறத்தைக் கண்டுபிடிச்சேயாகணும்..."

**ச**ரியாய் மணி 7.55க்கு தன் கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டர் மூலம் கோல்டு வேல்ஸ் ரெஸ்டாரெண்ட் போய்ச் சேர்ந்தாள் சுஜாதா.

ரெஸ்டாரெண்ட் கொஞ்சம் வெளிநாட்டுத் தனமாய் இருக்க முயற்சி செய்து பாதி வெற்றியடைந்திருந்தது? 'ஸ்பெஷலிஸ்ட்ஸ் இன் சைனீஸ் டிஷ்சஸ்' என்று பெரிதாய் போர்டு எழுதி வைத்து தம்பட்டம் அடித்துக் கொண்டார்கள். ரெஸ்டாரெண்ட்டின் பின்பக்கம் கார் பாரக்கிங் விஸ்தாரமாய்த் தெரிய மாருதிகளும் ஸாண்ட்ரோக்களும் நெருக்கியடித்துக் கொண்டு நின்றிருந்தன. அண்டர்க்ரவுண்ட் பாரிலிருந்து குடித்துவிட்டு தள்ளாட்டமாய் நடந்து கார் எடுக்க வருபவர்களுக்கு உதவி செய்ய யூ்ஃபார்ம் பேரர்கள் காத்திருந்தார்ள். ரெஸ்டாரெண்ட்டின் உள்ளே கிரானைட் வட்ட மேஜைகளில் கும்பல் கும்பலாய் உட்கார்ந்து தந்தூரி சிக்கனையும் நூடுல்ஸ்சையும் ஃபோர்க்கில் குத்தி உள்ளே தள்ளிக் கொண்டிருந்தார்கள். சிகரெட் புகைக்கு நடுவே சில கல்லூரி மாணவிகள் பாய் ஃப்ரண்டுகளோடு ஈறுகள் தெரிய சிரித்தார்கள்.

சுஜாதா ரெஸ்டாரெண்ட்டுக்குள் நுழையும்போதே தூரத்து மேஜையொன்றில் சபா சிகரெட் பிடித்தபடி தெரிந்தான். ஒரே ஒரு விநாடி இருவரும் கண்களால் 'ஹலோ' சொல்லிக் கொண்டார்கள்.

சுஜாதா காலியான மேஜையொன்றைத் தேடினாள். அநேகமாக எல்லா மேஜைகளிலும்



...ட்களின் ஆக்ரமிப்பு தெரிய, எங்கே போய் ...ட்கார்வது என்று லேசாய் குழம்பிக் ...கொண்டிருக்கும்போது -

முதுகில் அந்தக் குரல் கேட்டது.

"எக்ஸ்க்யூஸ் மீ மேடம்..."

சுஜாதா திரும்ப, வெள்ளுடுப்பும் தொப்பியும் அணிந்த அந்த பேரர் தெரிந்தார். கேட்டார்.

"மேடம்...! உங்க பேர் சுஜாதாவா?"

"எஸ்...!"

"ஏழாம் நம்பர் டேபிள் உங்களுக்காக ரிசர்வ் செய்யப்பட்டிருக்கு... அதோ அந்த டேபிள்தான்..."

"ரிசர்வ் செஞ்சது யாரு...?"

"எனக்குத் தெரியாது மேடம்... ரெஸ்டாரெண்ட் மேனேஜர்க்கு போன்ல தகவல் வந்தது."

"ரெஸ்டாரெண்ட் மேனேஜர் எங்கே?"

"அதோ... அவர்தான்..." 'போ' கட்டிக் கொண்டு கரு நீல சூட்டில் தெரிந்த அந்த இளைஞனை பேரர் காட்ட, அவனை நோக்கிப் போனாள் சுஜாதா. தன்னிடம் ஏதோ பேச வருகிறாள் என்பதைப் புரிந்து கொண்ட 'போ' இளைஞன் புன்னகைத்து "எஸ்..." என்றான்.

"எனக்காக ஏழாம் நம்பர் டேபிளை ரிசர்வ் பண்ணச் சொன்னது யாரு...?"

"அது யார்ன்னு எனக்குத் தெரியாது மேடம். அரைமணி நேரத்துக்கு முன் ஒரு போன் கால் வந்தது. சரியா எட்டு மணிக்கு சுஜாதான்னு ஒரு லேடி வருவாங்க. அவங்களை ஏழாம் நம்பர் டேபிள்ல உட்கார வையுங்க. அந்த டேபிளை அவங்க பேர்க்கே ரிசர்வ் பண்ணுங்கன்னு சொன்னாங்க..."

"போன் பண்ணியது யாரு...?"

"பேர் கேட்டேன். மாயக்கண்ணன்னு பதில் வந்தது."

"மாயக்கண்ணனா...?"

"அந்தப் பேரைத்தான் சொன்னாங்க. பட் அவர் யார்ன்னு எனக்குத் தெரியாது. எங்க கஸ்டமர் மாதிரியும் தெரியலை. எட்டு மணிக்கெல்லாம்

வந்துடறேன்னு சொன்னார். நீங்க வெயிட் பண்ணிப் பாருங்க... உங்களுக்கு வேண்டியவங்க யாராவது 'ப்ளே' பண்ணிப் பார்க்கலாம்..."

சுஜாதா மையமாய் தலையசைத்துவிட்டு ஏழாம் நம்பர் மேஜைக்குப் போய் உட்கார்ந்தாள். காத்திருக்க ஆரம்பித்தாள். ஒரு விநாடி சபாவைப் பார்த்துவிட்டு பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

நேரம் வெயிலில் வைத்த பனிக்கட்டியாயிற்று.

8.10...

லேசாய் சந்தேகம் முளைத்தது.

'வருவானோ... மாட்டானோ...'

நேரம் 8.15ஐத் தொட்டபோது சுஜாதாவின் கைப்பையில் இருந்த செல்போன் சிணுங்கியது.

எடுத்தாள்.

"ஹலோ..."

"நான் மாயக்கண்ணன்..."

கோபத்தில் படபடத்தாள் சுஜாதா. "உனக்காக நான் இங்கே வெயிட் பண்ணிட்டிருக்கேன்."

அவன் சிரித்தான்.

"தெரியுது... உன்னைப் பார்த்துக்கிட்டேதான் நான் செல்போன்ல பேசிட்டிருக்கேன். ரொம்பவும் டென்ஷனாயிருக்கே போலிருக்கே..."

"இதோ பார்... இந்த விளையாட்டெல்லாம் என்கிட்ட வேண்டாம். தைரியம் இருந்தா என் முன்னாடி வந்து உட்கார். பொட்டச்சி மாதிரி ஒளிஞ்சு நின்னுகிட்டு பேசறதே உனக்கு வேலையா போச்சு..."

"உனக்கு என்னைவிட தைரியம் அதிகம்னு சொல்லவர்றியா...?"

"ஆமா..."

"உனக்கு இடது பக்கமாயிருக்கிற ஜன்னல் பக்கமா திரும்பிப்பாரு..."

திரும்பிப் பார்த்தாள் சுஜாதா. அவன் கேட்டான்.

"என்ன தெரியுது...?"

"கார் பார்க்கிங்..."

"எவ்வளவு கார் இருக்கும்?"



"மே.பி...ட்வெண்டி!"

"சரி! செல்போன்ல பேசிகிட்டே கார் ...ர்க்கிங்குக்கு வா. நான் எந்த கார்ல இருக்கேன்னு ...ால்றேன்."

"என்ன விளையாட்றியா?"

"இந்த விளையாட்டு எனக்குப் பிடிக்கும். கார் ...ர்க்கிங்குக்கு வா..."

வெளியே வந்தாள். கார் பார்க்கிங் இப்போது ...ர்வைக்குக் கிடைத்தது. செல்போனில் குரல் ...கட்டது.

"சுஜாதா...! உனக்கு வலது கை பக்கமா பத்தாவது ...ரா ஒரு ப்ளு கலர் சாண்ட்ரோ நிக்குது தெரியுதா...?"

"ம்...தெரியுது..."

"அந்தக் கார்லதான் நான் இருக்கேன். வா!"

## 19

சுஜாதா காதில் செல்போனை வைத்துக் கொண்டே கார் பார்க்கிங்கில் நின்றிருந்த அந்த நீலநிற ஸாண்ட்ரோ காரை நோக்கிப் போனாள். செல்லின் மறுமுனையில் அவன் சிரித்தான்.

"உன்னோட நடையும் நல்லாயிருக்கு. இடையும் நல்லாயிருக்கு...!"

"பொறுக்கி..."

"இந்தக் கோபம்கூட நல்லாயிருக்கு..."

"யூ...ராஸ்கல்...!"

"சுடிதார் துப்பாட்டாவை கொஞ்சம் சரியா போட்டுக்கோ... பார்க்கப் பார்க்க என் உடம்பு பூராவும் இலவச மின்சாரம் பாயுது..."

சுஜாதாவுக்கு வெப்ப ரத்தம் பாய்ந்தது. வேகவேகமாய் நடைபோட்டவள் ஸாண்ட்ரோவை நெருங்கினாள். ஸாண்ட்ரோவின் கண்ணாடிக் கதவுகள் நாலாபக்கமும் ஏற்றப்பட்டு இருக்க, கதவின் கைப்பிடியை இழுத்துப் பார்த்தாள். அது அசைய மறுத்தது.

சுஜாதா செல்போனுக்கு உதட்டைக் கொடுத்தாள்.

"காரோட டோரை ஓப்பன் பண்ணு..."

"அது முடியாது சுஜாதா."

"ஏன்...?"

"அது என்னோட சாண்ட்ரோ கார் கிடையாது...."

"என்ன விளையாட்றியா...?"

"ஏன் விளையாடக்கூடாதா...?"

"இதோ பார்.... இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டெல்லாம் என்கிட்ட வேணாம். என்னைச் சந்திக்க உனக்குத் துணிச்சல் இல்லைன்னா சொல்லிடு. நான் பாட்டுக்கு போய்ட்டே இருக்கேன். ஏன்னா உன்னை மாதிரியான சின்னப் பசங்ககிட்ட விளையாட எனக்கு நேரம் இல்லை..."

"கோபிச்சுக்காதே... சுஜாதா...! இந்த ரெஸ்டாரெண்ட்டுக்கு கீழே ஒரு க்ரவுண்ட் ஃப்ளோர் இருக்கு. அங்கே வா. உனக்காக வெயிட் பண்ணிட்டிருக்கேன்..."

"அங்கேயும் நீ இல்லைன்னா...?"

"நீ ஜூட் விட்டுடலாம். இந்தப் பொறுக்கிக்கிட்ட செல்போன்லகூட பேச வேண்டாம்...வர்றியா...?"

"இதோ... வந்துட்டிருக்கேன்..." சுஜாதா செல்போனை அணைத்து உள்ளங்கைக்குள் அடக்கிக் கொண்டு ரெஸ்ட்டாரெண்டின் க்ரெள்ண்ட் ஃப்ளோரை நோக்கிப் போனாள். பக்கத்து 'பார்'லிருந்து விஸ்கியும் பிராந்தியும் போட்டி போட்டுக் கொண்டு காற்றில் நாறியது. இடையிடையே வறுபட்ட தந்தூரி சிக்கன் மணத்தது.

க்ரெளண்ட் ஃப்ளோர் ரெஸ்டாரெண்ட் என்று அம்புக்குறியோடு போர்டு ஒன்று வழிகாட்ட படிகளில். சுஜாதா இறங்கினாள்.

உள்ளே மெல்லிய வெளிச்சம் பரவியிருந்தது. கும்பல் அதிகம் இல்லை. மியூஸிக் சானலில் வயலின் கசிந்தது. சுஜாதா மேஜைகளுக்கு நடுவில் மெல்ல நடந்து பார்வையை ஸ்லோமோஷனில் நகர்த்தி அவனைத் தேடினாள்.

'இந்த கும்பலில் யாரவன்...?'



'எதையோ முள் கரண்டியால் குத்திக் கொண்டிருக்கும் இந்த பரட்டைத் தலையனாக இருக்குமோ...

'இல்லை... ட்ரிம் செய்யப்பட்ட அந்தத் தாடிக்காரனா?'

சுஜாதா யோசித்துக் கொண்டிருக்கும்போதே அவளுடைய இடது பக்கத்து தோளில் வெப்பமாய் ஒரு கை விழுந்தது.

சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

ராகவ் நின்றிருந்தான். உதட்டில் பாதி சிரிப்பும் கண்களில் பாதி சிரிப்பும் தெரிந்தது.

"ராகவ்... நீயா...?"

"நானே...!"

"செல்போனில் பேசியது...?"

"நானே...! பாட்டும் நானே பாவமும் நானே..."

"எப்படிடா... குரலைக் கண்டுபிடிக்கவே முடியலையே...?"

"அதுதான் அய்யாவோட திறமை. காலேஜ் டேஸ்ல ப்ராக்ஸி கொடுத்துக் கொடுத்து கஷ்டப்பட்டு கத்துகிட்ட கலை... இன்னிக்கு கை கொடுத்தது..."

"கொல்கத்தாவிலிருந்து எப்ப வந்தே...?"

"சரியா பன்னிரெண்டு மணி நேரமாச்சு..."

"என்னை ஏன் கான்டாக்ட் பண்ணலை?"

"என் கூடவே கம்பெனி டி.ஜி.எம். இருந்தார். செல்போனுக்கு வேற தொண்டை சரியில்லை..."

"இப்படித்தான் என்னை பயமுறுத்தறதா...?"

"நீ பயப்பட்ட மாதிரி எனக்குத் தெரியலையே?"

"இட்ஸ்... ஓ.கே... வா...ஏதாவது சாப்பிடலாம்..."

"நான் சாப்பிட வர்றேன். பட்... ஒன் கண்டிஷன்..."

"என்ன...?"

"எனக்கு உண்மை தெரியணும்..."

"உண்மையா... என்ன உண்மை...?"

ராகவ்வின் முகம் இப்போது சீரியஸாய் மாறியிருக்க குரலும் ஒரு கனத்துக்கு உட்பட்டிருந்தது. குரலை ஏற்றி இறக்கி கேட்டான்.

"நீ விப்ஜியார் கெமிக்கல் கம்பெனியில் எம்.டி. வசந்தராவுக்கு பி.ஏ.வாகத்தானே ஒர்க் பண்ணிட்டிருக்கே?"

"ஆமா..."

"அவள்தானே உனக்கு பாஸ்...?"

"ஆமா..."

"பின்னே வேற யாரோ ஜெண்ட்லை பாஸ்ன்னு கூப்பிடறியே... யார் அந்த பாஸ்...?"

சுஜாதாவின் விழிகளில் திகைப்புக்கு உட்பட்டு விரிந்தது. ராகவ்...ராகவ்..."

"இந்த விஷயம் எனக்கு எப்படி தெரியும்னு நீ கேட்கலாம். இன்னிக்கு மத்தியானம் உன்னை செல்லில் காண்டாக்ட் பண்ண முயற்சி செஞ்ச போது உன்னோட பேச்சுக் குரல் என்னோட செல்போன் லைன்ல க்ராஸ் ஆச்சு. நான் அந்த லைனை அப்படியே அப்ஸர்வ் பண்ணினேன். நீயும் அந்த ஆளும் ஏதோ கோட் வேர்ட்லை உபயோகப்படுத்தி பேசிக்கிட்டீங்க... அதுல ஒரு வாக்கியம் வானவில்லின் எட்டாவது நிறம்."

"ராகவ்...!"

ராகவ் தொடர்ந்தான். "வானவில்லோட எட்டாவது நிறத்தை இன்னிக்கு ராத்திரிக்குள்ளே நீ கண்டுபிடிச்சுடுவியான்னு அந்த ஆண் குரல் கேட்க நீ அதுக்கு 'எஸ் எஸ்'ன்னு சொல்றே...! யார் அந்த பாஸ்...?"

"ராகவ்...! அது...வந்து..."

"இதோ பார் சுஜா...! உன்னை எந்த அளவுக்கு காதலிக்கறேன்னு உனக்கே தெரியும். அந்தக் காதலுக்கு மதிப்பு கொடுத்தாவது நீ உண்மையைப் பேசணும். நீ 'பாஸ்'ன்னு கூப்பிட்ட அந்த ஆள் யார்...? வானவில்லின் எட்டாவது நிறம்னு சொன்னியே... அதுக்கு அர்த்தம் என்ன...?"

சுஜாதா அதிர்ச்சியில் திணறிக் கொண்டிருக்கும் போதே பின்பக்கம் அந்தக் குரல் கேட்டது.

"இந்த கேள்விக்கு நான் பதில் சொல்லட்டுமா."

சுஜாதா திரும்பிப் பார்க்க,

சபா.



கண்களில் கோபம் பதட்டமாய் சுஜாதா.

"சபா...! நீங்க போங்க... நான் பேசிக்கிறேன். ஹி...ஸ்...மை லவ்வர்..."

"பார்த்து ஹேண்டில் பண்ணு. வெண்ணெய் திரண்டு வருகிற நேரம். பானையை உடைச்சுடாதே...!" சொல்லிவிட்டு சபா ஒருமுறைப்போடு நகர்ந்து போக ராகவ் சுஜாதாவை ஏறிட்டான்.

"இவன் யாரு...?"

சுஜாதா தன் வியர்த்த முகத்தை ஒற்றிக் கொண்டாள். "ராகவ்...! அந்த டேபிளுக்கு போயிடலாமா...?"

"நீ உண்மையைச் சொல்றதாயிருந்தா போலாம்... இல்லேன்னா ஒரு டாட்டா, பைபை சொல்லிட்டு எதிர்எதிர் திசையில் போயிடலாம். ஏன்னா, உன்னோட பர்சனல் விவகாரங்களில் தலையிட எனக்கு எந்த உரிமையும் கிடையாது."

"உனக்கு உண்மைதானே வேணும் ராகவ்?"

"ஆமா..."

"சொல்றேன்...வா..." ரெஸ்டாரெண்ட்டின் வலது பக்க டேபிளை நோக்கிப் போனாள் சுஜாதா. ராகவ் பின்தொடர்ந்தான். டேபிளை ஆக்ரமித்து எதிர் எதிரே உட்கார்ந்தார்கள். சில விநாடிகள் மௌனத்தில் கரைய சுஜாதா மெல்ல பேச்சை ஆரம்பித்தாள்.

"ராகவ்...?"

"ம்..."

"இப்ப நான் சொல்லப் போகிற சில விஷயங்கள் உன்னை அதிர்ச்சுக்கும் கொண்டு போகலாம்..."

"எனக்கு வேண்டியது உண்மை. எதுவாயிருந்தாலும் பரவாயில்லை... சொல்லு..."

சுஜாதா பேச்சைத் தொடங்குவதற்கு முன்பாக தன் கையோடு கொண்ட போயிருந்த வானிடி பேக்கைப் பிரித்து லேமினேஷன் செய்யப்பட்ட ஒரு சிறிய அட்டையை எடுத்தாள்.

"இதை ஒரு பத்து செகண்ட் பாரு ராகவ்."

ராகவ் வாங்கிப் பார்த்தான். பிடரியில் மின்சாரம் தாக்கியது போன்ற உணர்ச்சி பரவியது.

**ரா**த்திரி எட்டரை மணி.

போலீஸ் கமிஷனர் அலுவலக வளாகத்துக்குள் மெட்டாலிக் ப்ளூ காண்டஸா... ஒரு மரத்துக்குக் கீழே போய் ஒதுங்கி நிற்க, வசந்தராவும் மனோகரும் இறங்கி உள்ளே போனார்கள்.

அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேல் இரண்டு பேரையும் வரவேற்று தன்னுடைய அறைக்கு கூட்டிப்போய் நாற்காலிகளில் உட்கார வைத்துவிட்டு கதவைச் சாத்தினார். மனோ கேட்டான்.

"நாங்க மூணாறு எஸ்டேட் போறதுக்கு எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிட்டீங்களா சார்...?"

"எல்லா ஏற்பாடும் ரெடி. இந்த ஆபீஸுக்கு பின் பக்கத்துல ஒரு போலீஸ் ஹர்மடா வேன் உங்களுக்காகத் தயார் நிலையில் நிறுத்தப் பட்டிருக்கு. சௌகரியமாய் ராத்திரி முழுக்க பயணம் பண்ணி நீங்க ரெண்டு பேரும் மூணாறு போய்ச் சேர்ந்துடலாம். இந்த ஹிட்லிஸ்ட் இயக்கம் உங்க காரை இப்போ ஃபாலோ பண்ணி வந்து இருக்கலாம்.

நீங்க ரெண்டு பேரும் வெளியே வருவீங்கன்னு எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும்போதே நீங்க வேன்ல புறப்பட்டு மூணாறு போயிடலாம். நீங்க மூணாறிலிருந்து திரும்பி வர்ற வரைக்கும் உங்க காண்டஸா கார் கமிஷனர் ஆபீஸிலேயே இருக்கட்டும்..."

மனோ குறுக்கிட்டான். "சார்! அம்மாவோட உயிரைக் காப்பாத்தறதுக்காக நீங்க எடுத்துட்டு வர்ற முயற்சிகளுக்கு நன்றி. நானும் அம்மாவோடு மூணாறு எஸ்டேட் பங்களாவுக்குப் போய்ட்டா கம்பெனியை நிர்வாகம் பண்ண இங்கே யாரும் கிடையாது. ஸோ, இப்ப அம்மா மட்டும் மூணாறு போகட்டும். நான் போகிற வழியிலேயே இறங்கி கம்பெனிக்கு போயிடறேன். இன்னிக்கு ராத்திரி கம்பெனியில் எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. கம்பெனிக்குள்ளேயே யாரோ ஒருத்தர் இருந்துகிட்டு வெளியே இருக்கிற இயக்கத்துக்கு உதவி பண்ணிக்கிட்டு இருக்காங்க... அவங்க யார்ங்கிறதைக்



கண்டுபிடிக்கணும்ன்னா நான் கம்பெனிக்குள்ளே ஒரு மூணு நாளைக்கு அஞ்ஞாத வாசம் பண்ணணும்..."

"அப்படின்னா அம்மா மட்டும் மூணாறு எஸ்டேட் பங்களாவுக்குப் போகட்டும்னு சொல்றீங்களா...?"

"ஆமா..."

தனவேல் யோசித்த விநாடி - அவர் செல்போன் கூப்பிட்டது. எடுத்தார். காதுக்குப் பொருத்தியதும் குரல் மறுமுனையில் சிரித்தது. ஆண் குரல்.

"வணக்கம்! ஏ.சி.சார்... எங்க ஹிட் லிஸ்ட்டில் இருக்கிற வசந்தராவைக் காப்பாத்தறதுக்காக ரொம்பவும் மெனக்கெடறீங்க போலிருக்கு. வசந்தரா மூணாறுக்குப் போனாலும் சரி, அந்த மூணுக்கே போனாலும் சரி எங்கக்கிட்டயிருந்து தப்பிக்க முடியாது..."

தனவேல் ஸ்தம்பித்து செல்போனைப் பார்த்தார்.




**அ**றையில் அசாத்திய நிசப்தம் நிலவிக் கொண்டிருக்க, அஸிஸ்டண்ட் கமிஷனர் தனவேல் தனக்கு எதிரே உட்கார்ந்திருந்த வசந்தராவையும் மனோகரனையும் பார்த்தார்.

"மூணாறு போனாலும் சரி. அந்த மூணுக்கே போனாலும் சரி - வசந்தரா உயிரோடு இருக்கப் போறதில்லைன்னு செல்போன்ல எவனோ மிரட்டறான். இப்ப என்ன பண்ணலாம் மனோ..."

"அந்த மிரட்டலை நாம அலட்சியம் செய்ய முடியாது ஏ.ஸி.சார். நாம காய்களை நகர்த்தறதை எப்படியோ யாரோ ஸ்மெல் பண்ணிடறாங்க. குற்றவாளிகள் கைக்குக் கிடைக்கிற வரை அம்மா டைட் போலீஸ் செக்யூரிட்டியில் இருக்கிறது ரொம்பவும் நல்லது. மூணாறு எஸ்டேட்டுக்கு போறது இப்ப வேண்டாம் சார்..."

"போலீஸ் உயர் அதிகாரிகள் தங்கறதுக்காக இதே வளாகத்துல ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருக்கு. அம்மா ரெண்டு நாளைக்கு இங்கேயே தங்கட்டும்.

இங்கேயிருக்கிற டைட் போலீஸ் செக்யூரிட்டியை மீறிக் கொண்டு யாரும் உள்ளே வந்துவிட முடியாது..."

மனோ வசந்தராவிடம் திரும்பினான். "நீ என்னம்மா சொல்றே...?"

"ஏ.ஸி. சொல்றதுதான் சரின்னு என மனசுக்குப்படுது... ரெண்டு நாளைக்கு இங்கேயே ஸ்டே பண்ணிக்கிறேன். நீ கம்பெனி வேலைகளைப் பார்த்துக்க."

மனோ தலையாட்டிக் கொண்டிருக்கும்போதே கமிஷனர் வளாகத்துக்குள் ஹெட்லைட் வெளிச்சத்தோடு ஜீப் ஒன்று வேகமாய் பிரவேசித்து ஓரமாய் நின்று விளக்குகளை அணைத்துக் கொண்டது.

இன்ஸ்பெக்டர் ஜோதி பாண்டியன் ஜீப்பினின்றும் இறங்கி வேகவேகமாய் உள்ளே வந்தார். சல்யூட் வைத்து தளர்ந்தவரை தனவேல் ஏறிட்டார்.

"சொல்லுங்க ஜோதிபாண்டியன்! டிட் யூ கெட் எனி இன்பார்ட்டன்ட்... நியூஸ்...?"

"எஸ்... சார்..."

"என்ன...?"

"ஜெயவர்த்தன் வீட்டுக்கு பக்கத்து வீட்டு மொட்டை மாடியில் வாட்டர் டேங்குக்குக் கீழே கொலை செய்யப்பட்ட ஒரு பெண்ணின் உடல் கிடந்தது இல்லையா... அந்தப் பெண் யார்ங்கிற விபரம் இப்ப கிடைச்சிருக்கு சார்..."

தனவேலின் கண்களில் ஆர்வம் மின்னியது.

"யார் அந்தப் பெண்?"

"அவ பேர் பிரபா சார். தெலுங்கு சினி ஃபீல்டில் ஒரு துணை நடிகை. சிராலா சித்தைய்யாவும் இந்த பிரபாவும் தாலி கட்டாத கணவன் - மனைவியா குடும்பம் நடத்திக்கிட்டு இருந்திருக்காங்க..."

"சரி... அவ ஏன் கொலை செய்யப்படணும்?"

"என்னோட அஸெம்ஷனை சொல்லட்டுமா சார்?"

"சொல்லுங்க..."

"ஜெயவர்த்தன், புஷ்பகுமாரன், மேடம் வசந்தரா இவங்க மூணு பேரையும் ஹிட்லிஸ்ட் பண்ணிக்



கொலை செய்ய யாரோ சிராலா சித்தையாவை ப்ரொஃபஷனல் கில்லரா அமர்த்தியிருக்காங்க. அதன்படி சிராலா சித்தையா செயல்பட்டிருக்கான். மொதல்ல ஹிட்லிஸ்ட்படி ஜெயவர்த்தனை தீர்த்துக் கட்டறதுக்காக அவனுடைய வீட்டுக்குப் பக்கத்துல இருக்கிற காலியான வீட்டை செலக்ட் பண்ணி அங்கே தங்கியிருக்கான். அந்த வீடு இருந்த நிலைமையைப் பார்க்கும்போது சிராலா சித்தையா ரெண்டு மூணு நாளாவது அந்த வீட்ல தங்கி ஜெயவர்த்தனைக் கொல்ல வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்து இருந்திருக்கணும். தனியா ரெண்டு மூணு நாள் அந்த வீட்ல இருந்த சித்தையாவுக்கு ராத்திரி வேளைகளில் பிரபா தேவைப்பட்டிருக்கலாம். பிரபா அந்த வீட்டுக்கு வந்து தங்கியிருந்தபோது அவளுக்கும் சித்தையாவுக்கும் ஏதாவது ஒரு விஷயத்தில் சண்டை ஏற்பட்டு, அந்த ஆத்திரம் காரணமாய் சித்தையா அவளைக் கொலை பண்ணியிருக்கலாம். அவளைத் தீர்த்துக் கட்டிய சித்தையா அதுக்குப் பிறகு ஜெயவர்த்தனை துப்பாக்கியால பக்கத்து வீட்டு ஜன்னல் வழியா சுட்டுக் கொன்னுட்டு அதே ராத்திரியில் வசந்தரா மேடத்தைக் கொல்றதுக்காக மேடத்தோட கெஸ்ட் ஹவுஸுக்கு வந்து இருக்கலாம்..."

வசந்தரா குறுக்கிட்டுக் கேட்டாள். "நான் அந்த கெஸ்ட்ஹவுஸ்ல இல்லாதபோது சித்தையா அங்கே எதுக்காகப் போகணும்? என்னைக் கொலை செய்யறது அவனோட நோக்கமாயிருந்தா நான் வழக்கமா தங்கற பங்களாவுக்குத்தானே சித்தையா வரணும்... எதுக்காக கெஸ்ட் ஹவுஸ் போனான்...? வாட்ச்மேனை ஏமாத்திட்டு யாருக்கும் தெரியாம உள்ளே போன சித்தையாவை யார் ரத்தக்களரியாக்கி பாத்டப்புக்குள்ளே போட்டது...?"

"இந்த இடத்துல நிறைய குழப்பம் மேடம். எப்படி யோசனை பண்ணினாலும் ஒரு க்ளியர் பிக்சர் கிடைக்கலை. பிரபாவோட போஸ்ட்மார்ட்டம் சொல்ற ஒரே ஒரு உருப்படியான விஷயம்... அவ மூணு மாசம் கர்ப்பம்ங்கிறதுதான்... அந்த கர்ப்பத்துக்குக் காரணம் சித்தையாதான்னு டி.என்.ஏ.ரிப்போர்ட் கன்ஃபர்ம் பண்ணியிருக்கு."

"இட்ஸ் ஓ.கே. ஜோதிபாண்டியன்! கொலை செய்யப்பட்ட ஜெயவர்த்தன் வீட்டை தரோவா செக் பண்ணீங்களா...?" தனவேல் கேட்டார்.

"பண்ணினேன் சார்..."

"எனி யூஸ்ஃபுல் க்ளு...?"

அவருடைய டைரி ஒண்ணு கிடைச்சது சார். படிச்சுப் பார்த்ததுல... உபயோகமா எதுவும் கிடைக்கலை. பட், போன மாசம் பதினெட்டாம் தேதி புதன்கிழமை அவரோட டைரியின் பக்கத்தில் ஒரு புரியாத வார்த்தை எழுதியிருந்தது சார்."

"என்ன வார்த்தை...?"

"எய்த் கலர் ஆஃப் ரெயின்போ" ஜோதி பாண்டியன் இப்படிச் சொன்னதும் வசுந்தராவும் மனோகரனும் ஒரு மைக்ரோ விநாடியில் பார்வையாலேயே அதிர்ச்சி அலைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

தனவேல் நெற்றியைச் சுருக்கினார். "எய்த் கலர் ஆஃப் ரெயின்போ?"

"ஆமா...சார்..."

"இந்த வார்த்தையைத் தமிழ்ப்படுத்திப் பார்த்தா... வானவில்லின் எட்டாவது நிறம்...! வானவில்லுக்கு ஏழு நிறம்தானே! இது என்ன எட்டாவது நிறம்...?"

"புரியலை சார்... அவரோட பிசினஸ் சம்பந்தப் பட்ட கோட்வேர்டா இருக்கலாம்..."

தனவேல் வசுந்தராவிடம் திரும்பினார். "மேடம்! இந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம் இருக்க முடியும்னு உங்களால கெஸ் பண்ண முடியுதா...?"

"அவரோட பிசினஸ் சம்பந்தப்பட்ட ஒரு கோட் வேர்டுக்கு என்னால எப்படி அர்த்தம் சொல்ல முடியும் ஏ.ஸி.சார்... கள்ளத்தனமாய் கரன்ஸிகளையும் வெளிநாட்டு டாலர்களையும் பிரிண்ட் பண்ணின ஒரு க்ரிமினல் இந்த ஜெயவர்த்தன்."

"எஸ்...யூ ஆர் கரெக்ட் அந்த ஜெயவர்த்தன் ஒரு க்ரிமினல்தான். பட், அவர் தன்னோட டைரியில் எழுதி வெச்சிருக்கிற அந்த ரெயின்போ எய்த் கலர் வார்த்தைக்கும் உங்க கெமிக்கல் கம்பெனியோட பெயருக்கும் ஒரு சின்ன ஒற்றுமை இருக்கு மேடம்."



"ஒற்றுமையா... என்ன ஒற்றுமை?"

"உங்கக் கெமிக்கல் கம்பெனியின் பேர் என்ன மேடம்?"

"விப்ஜியார் கெமிக்கல்ஸ்...!"

"விப்ஜியார் என்கிற வார்த்தை ரெயின்போவின் கலர்ஸ் சம்பந்தப்பட்டதுதானே...?"

"ஆமா..."

"VIBGYOR என்ற வார்த்தையில் V எழுத்துக்கு வயலட், I எழுத்துக்கு இண்டிகோ, B எழுத்துக்கு ப்ளு, G எழுத்துக்கு க்ரீன், Y எழுத்துக்கு யெல்லோ, O எழுத்துக்கு ஆரஞ்சு, R எழுத்துக்கு ரெட் சரியா மேடம்?"

"எஸ்... ரெண்டுமே வானவில்லோட கலர்ஸ் சம்பந்தப்பட்டது. பட்... அதென்ன எய்த் கலர்? புரியலையே...!"

"அது என்னன்னு பின்னாடி இன்வெஸ்டிகேட் பண்ணி கண்டுபிடிச்சுடலாம் மேடம். ஆனா, இப்போ ஒரு லிங்க் கிடைச்சிருக்கு. அந்த கொலை கும்பல் இயக்கம் உங்களையும் ஜெயவர்த்தனையும் ஹிட்லிஸ்ட்டில் சேர்க்கக் காரணம் இந்த 'எய்த் கலர் ஆஃப் ரெயின்போ'வாகவும் இருக்கலாம் இல்லையா?"

"இருக்கலாம். பட், ஜெயவர்த்தனை இதுக்கு முன்னே நான் பார்த்ததுகூட கிடையாது. அவரோட பேரைக்கூட நான் கேள்விப்பட்டது இல்லை. இப்படி இருக்கும்போது அவர் எங்களோடு எப்படி சம்பந்தப்படுகிறார் என்று தெரியவில்லை. இது ஒரு கோ-இன்சிடென்ட்டாக இருக்கலம்."

ஜோதிபாண்டியன் குறுக்கிட்டார். "மேடம்! 'எய்த் கலர் ஆஃப் ரெயின்போ' என்ற அந்த வார்த்தைக்கு அர்த்தம் என்னன்னு ஜெயவர்த்தனின் ஒய்ஃப்கிட்ட கேட்டேன். அவங்களுக்குத் தெரியலை. ஆனா அவங்க சொன்ன வேற ஒரு தகவல் யோசிக்க வெச்சது!"

"என்ன தகவல்...?"

"ஜெயவர்த்தன் போன மாசம் பதிமூணாம் தேதி தன்னோட பிசினஸ் விஷயமா சிங்கப்பூர் புறப்பட்டுப்

போயிருக்கார். அங்க நாள் அங்கே தங்கி பிசினஸ் வேலைகளைப் பார்த்துட்டு பதினெட்டாம் தேதி ஃப்ளைட்ல திரும்பியிருக்கார்."

"பதினெட்டாம் தேதி எந்த ஃப்ளைட்ல ஜெயவர்த்தன் புறப்பட்டார்னு அவரோட மிஸஸ்கிட்ட கேட்டீங்களா...?"

"கேட்டேன்... காலை ஒன்பது மணி ஃப்ளைட் பன்னிரண்டு மணிக்கெல்லாம் சென்னைல இருந்தாராம்..."

"மைகுட்னஸ்...!"

"என்ன மேடம்...?"

"அதே பதினெட்டாம் தேதி தான் நானும் சிங்கப்பூர்லயிருந்து காலை ஒன்பது மணி ஃப்ளைட்ல சென்னைக்குப் புறப்பட்டேன்!"

"நீங்க சிங்கப்பூர் போனீங்களா... எதுக்கு?"

"கெமிக்கல் ப்ராடக்ட்ஸ் சம்பந்தப்பட்ட ஒரு செமினாரை அட்டெண்ட் பண்றதுக்காகப் போனேன்."

"ஸோ... நீங்களும் ஜெயவர்த்தனும் ஒரே ஃப்ளைட்லதான் ஜர்னி பண்ணி சென்னை வந்து இருக்கீங்க?"

"எஸ்..."

"பட் ஒருத்தருக்கொருத்தர் நீங்க பார்த்துக்கலை?"

"அறிமுகம் இல்லாம எப்படி பார்த்துக்கவோ பேசிக்கவோ முடியும்...?"

"மேடம்... கொஞ்சம் முயற்சி பண்ணுங்க... உங்க ரெண்டு பேருக்கும் பொதுவான எதிரி ஒருத்தன் இந்த ஃப்ளைட்ல ஜர்னி பண்ணியிருக்கணும்... அவன் யாராக இருக்க முடியும்னு உங்களாலதான் சொல்ல முடியும்."

மனோகரன் குறுக்கிட்டான்.

"ஃப்ளைட்ல 'வந்த அந்த எதிரி யார்ன்னு கண்டுபிடிக்க ஒரு வழி இருக்கு..."

எல்லோருடைய பார்வையும் மனோகரன் மேல் நிலைத்தது.



21

மனோகரனை எல்லோரும் வியப்பு பார்வையில் நனைக்க, அவன் தொடர்ந்தான்.

"போன மாதம் பதினெட்டாம் தேதி ஜெயவர்த்தன் சிங்கப்பூரிலிருந்து எந்த ஃப்ளைட்டில் சென்னை திரும்பினாரோ அந்த ஃப்ளைட்டில் அந்தக் குறிப்பிட்ட தேதியில் யார் யார் டிராவல் பண்ணியிருக்காங்கிறதை ஃப்ளைட்டோட ட்ரிப் ஷீட்டைப் பார்த்தாத் தெரிய வரும். அப்படிப் பயணம் பண்ணினவங்கள்ல யாராவது ஜெயவர்த்தனுக்கு வேண்டாதவங்களா இருக்கலாம்."

தனவேல் குறுக்கிட்டு கேட்டார். "ஜெயவர்த்தனுக்கு வேண்டாதவங்க யார்னு எப்படி கண்டுபிடிக்கிறது?"

"ஃப்ளைட்டோட ட்ரிப் ஷீட்டை ஜெயவர்த்தன் மனைவிகிட்டே காட்டிக் கேட்கலாம். தன்னோட கணவனுக்கு எதிரிகள் யார், நண்பர்கள் யார்னு ஒரு மனைவிக்குத் தெரியும். அந்த வகையில் ஜெயவர்த்தனின் மனைவி மூலமா உங்களுக்கு ஏதாவது ஓர் உபயோகமான தகவல் கிடைக்கலாம்."

இன்ஸ்பெக்டர் ஜோதிபாண்டியன் தனவேலிடம் நிமிர்ந்தார். "சார்...மிஸ்டர் மனோகரன் சொன்னது எனக்கு ஒரு நல்ல யோசனையாவே படுது. ட்ரை பண்ணிப் பார்க்கலாம் சார். ஒரு சின்ன க்ளு கிடைச்சாக்கூட அதை வெச்சு கேசை மூவ் பண்ணலாம்."

"டூ... இட்... மிஸ்டர் ஜோதிபாண்டியன்...!" என்று சொன்ன தனவேல் கேட்டார்.

"உங்களுக்கு மீனம்பாக்கம் ஏர்போர்ட் ஆபீசர் ஹரிராமனைத் தெரியுமா?"

"தெரியும் சார்..."

இந்த ட்ரீப் ஷீட் என்கொயரி விஷயமாக அவரைப் போய் பாருங்க... ஹி வில் ஹெல்ப்...யூ..."

"எஸ்... சார்..." ஜோதிபாண்டியன் ஒரு சல்யூட் அடித்துவிட்டு அறையை விட்டு வெளியேற, தனவேல் வசந்தராவிடம் திரும்பினார்.

"கேஸ்ல இப்பத்தான் ஒரு ஹோல்டிங் ரொம்பவும் ஸ்ட்ராங்கா கிடைச்சிருக்கு. 'எய்த் கலர் ஆஃப் ரெயின்போ' என்கிற இந்த சந்தேக வார்த்தைக்கும் உங்கள் கெமிக்கல் கம்பெனியின் பெயரான விப்ஜியார்க்கும் ஏதோ ஒரு வகையில் லிங்க் இருக்கு. இல்லேன்னா உங்க பெயர் ஹிட் லிஸ்ட்ல இடம் பெற்று இருக்காது."

மனோகரன் குறுக்கிட்டுக் கேட்டான்.

"அப்படின்னா ஹிட் லிஸ்டில் இடம் பெற்று இருந்த புஷ்பகுமாரனுக்கும் இந்த 'எய்த் கலர் ஆஃப் ரெயின்போ' சங்கேத வார்த்தை தெரிஞ்சிருக்கும்னு சொல்ல வர்றீங்களா...?"

"கண்டிப்பாகத் தெரிஞ்சிருக்கும். வேணும்னா இப்பவே போன் பண்ணிக் கேட்டுடலாம்" சொன்ன தனவேல், தன் பாக்கெட்டில் இருந்த செல்போனை உயிர்ப்பித்து புஷ்பகுமாரனின் வீட்டு டெலிபோன் எண்ணைத் தொடர்பு கொண்டார். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

"ஹலோ...!"

"மிஸ்டர் புஷ்பகுமாரன்...?"

"எஸ்...ஹோல்டிங்..."

"நான் ஏ.ஸி. தனவேல்..."

"வணக்கம் சார்... நானே உங்களை போன்ல காண்டாக்ட் பண்ணலாம்னு இருந்தேன்."

"என்ன விஷயம்...?"

"சார்... என்னோட உயிருக்கு ஆபத்து வரக் கூடாதுங்கிறதுக்காக எனக்கு செக்யூரிட்டி கொடுத்து இருக்கீங்க. அது ரொம்பவும் டைட்டா இருக்கு. நான் வீட்டை விட்டு தோட்டத்து பக்கம்கூட வாக் பண்ணக் கூடாதுன்னு சொல்றாங்க... உங்க செக்யூரிட்டி பீப்புள். கொஞ்சம் ரிலாக்ஸ பண்ணக் கூடாதா...?"

"சாரி... மிஸ்டர் புஷ்பகுமாரன்! கொலையாளி யார்னு நாங்க ஸ்மெல் பண்ற வரைக்கும் உங்களுக்கு



இந்த டைட் செக்யூரிட்டி அவசியம். எல்லாம் உங்க நன்மைக்காகத்தான்... கொஞ்சம் கோ-ஆப்ரேட் பண்ணுங்க... நீங்க ஒரு டிவிப்ரொட்யூசர்தானே..."

"ஆமா..."

"வீட்ல உட்கார்ந்துகிட்டு ஏதாவது ஒரு மெகா தொடருக்கு ஸ்க்ரீன் ப்ளே பண்ணிட்டிருங்க."

"முடியலை சார்... ஒரே டென்ஷனா இருக்கு."

"ஒரு ரெண்டு நாளைக்கு எல்லா சிரமங்களையும் நீங்க டாலரேட் பண்ணித்தான் ஆகணும்... பை...த...பை... நான் இப்போ போன் பண்ணினது உங்ககிட்டயிருந்து ஒரு தகவலைப் பெறத்தான்..."

"என்ன தகவல் சார்...?"

"எய்த் கலர் ஆஃப் ரெயின்போ' என்கிற ஒரு சங்கேத வார்த்தையை நீங்க கேள்விப்பட்டிருக் கீங்களா...?"

"என்ன சொன்னீங்க சார்... எய்த் கலர் ஆஃப்...?"

"ரெயின்போ..."

"அதாவது வானவில்...?"

"எஸ்..."

"இல்லையே...! இந்த வார்த்தையை இன்னிக்குத்தான் நான் கேள்விப்படறேன். எய்த் கலர் ஆஃப் ரெயின்போ. தமிழ்படுத்திப் பார்த்தா வானவில்லின் எட்டாவது நிறம்."

"புஷ்பகுமாரன்! கொஞ்சம் டைம் எடுத்துக்கிட்டு யோசனை பண்ணுங்க. ஏன்னா இந்த சங்கேத வார்த்தை கொலை செய்யப்பட்ட ஜெயவர்த்தனின் டைரியில் போன மாதம் பதினெட்டாம் தேதி எழுதப்பட்டு இருந்தது. வானவில்லோட நிற மாலைக்கு ஆங்கிலத்தில் 'விப்ஜியார்'னு சொல்வாங்க. அது தெரியுமா உங்களுக்கு...?"

"தெரியும் சார்..."

"கொலை செய்யப்பட வேண்டிய ஹிட்லிஸ்டில் இடம் பெற்றிருக்கிற வசந்தராவின் கம்பெனியின் பெயர் விப்ஜியார் கெமிக்கல் கம்பெனி. ஜெயவர்த்தனின் டைரியில் இருந்த எய்த் கலர் ஆஃப் ரெயின்போ என்கிற வார்த்தைக்கும் இந்த

விப்ஜியார் என்கிற வார்த்தைக்கும் தொடர்பு இருக்கலாம்கிறது போலீஸோட எண்ணம். கொலை செய்யப்பட வேண்டிய ஹிட்லிஸ்டில் உங்க பெயரும் இருக்கிறதால உங்களுக்கு அந்த வார்த்தை தெரிந்து இருக்கலாம்ங்கிற எண்ணத்துலதான் உங்களுக்கு போன் பண்ணினேன்..."

"அந்த வார்த்தை எனக்குப் புதுசாயிருக்கு சார். இன்னிக்கு நீங்க சொல்லித்தான் கேள்விப்படறேன்...!"

"புஷ்பகுமாரன்! நீங்க எதுவும் பொய் சொல்லலையே...?"

"நான் எதுக்காக சார்... பொய் சொல்லணும்...? இந்த விஷயத்துல பொய் சொன்னா நஷ்டம் எனக்குத்தான்னு எனக்கு நல்லாவே தெரியும். எனக்குத் தெரிஞ்ச எல்லா உண்மைகளையும் நான் அன்னிக்கே சொல்லிட்டேன் சார்..."

"உங்களுக்கு ஜெயவர்த்தனையும் வசுந்தராவையும் கொஞ்சம்கூட அறிமுகம் இல்லை. முன்னே பின்னே பார்த்ததுகூட கிடையாது...?"

"கிடையாது சார்..."

"ஓ.கே...! கொலையாளி யார்னு கண்டுபிடிக்கிற வரைக்கும் செக்யூரிட்டிஸ் சொல்படி கேட்டு நடந்துக்கறது ரொம்பவும் நல்லது. கொலையாளி எந்த ரூபத்துல எப்படி வருவான்னு சொல்ல முடியாது. கொலையாளி ஒரு பத்து நிமிஷத்துக்கு முந்தி கூட எனக்கு போன் பண்ணி ஹிட்லிஸ்டில் இருக்கிற மத்த ரெண்டு பேரையும் தீர்த்துக்கட்டாம விடமாட்டேன்னு மிரட்டினான். ஸோ... விஷ்ஷிட் பி காஷியஸ்."

தனவேல் செல்போனை அணைத்துவிட்டு வசுந்தராவையும் மனோகரனையும் ஏறிட்டார்.

"எய்த் கலர் ஆப் ரெயின்போ என்கிற சங்கேத வார்த்தை புஷ்பகுமாரனுக்குத் தெரியலை..."

"அப்படீன்னா அந்த வார்த்தைக்கும் நடந்து கொண்டிருகக்கிற சம்பவங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லைன்னு தெரியுது ஏ.ஸி.சார்..." வசுந்தரா சொல்ல, தீர்க்கமாய்த் தலையாட்டினார் தனவேல்.



"நோ...! நான் அப்படி நினைக்கலை. இன்ஸ்பெக்டர் ஜோதிபாண்டியனை ஏர்போர்ட்டுக்குப் போய் ட்ரிப் ஷீட்டைக் கொண்டு வந்தா ஏதாவது ஒரு பக்கத்திலிருந்து உண்மை கசியலாம்..."

மனோகரன் குறுக்கிட்டான். "சார்! அம்மா அதே கமிஷனர் ஆபீஸ் கெஸ்ட் ஹவுஸின் உங்க கஸ்டடியில் இருக்கட்டும். நான் கம்பெனிக்குப் போய் சில வேலைகளைப் பார்க்க வேண்டியிருக்கு..."

"கார் இங்கேயே இருக்கட்டும். நீங்க இந்த ஆபீஸின் பின்பக்க வழியாக் ஜீப்புல போயிடுங்க மனோகரன்..."

தலையாட்டினான் மனோகரன்.

**வா**னிடி பேக்கிலிருந்து லேமினேஷன் செய்யப்பட்ட அந்த அட்டையை எடுத்து சுஜாதா, ராகவ் கையில் கொடுத்து "இதை ஒரு பத்து செகண்ட் பாரு ராகவ்..." என்று சொல்ல, ராகவ் வாங்கிப் பார்த்துவிட்டுப் பிடரியில் மின்சாரம் தாக்கியது போன்ற உணர்வோடு நிமிர்ந்தான்.

"சுஜா... என்ன... இது...?"

"என்னுடைய உத்தியோக அட்டை"

"சி.பி.ஐ.ஷேடோ ஸ்க்வாட்னு போட்டிருக்கு...?"

"போட்டிருந்தா... அது உண்மைதானே...?"

"சுஜா... அப்படின்னா... நீ?"

"சி.பி.ஐ.ஷேடோ ஸ்க்வாட்டில் ஸ்பெஷல் கிரேட் இன்ஃபார்மரா ஒர்க் பண்ணிட்டிருக்கேன். அதை நான் வெளியே யார்கிட்டேயும் சொல்லக் கூடாதுங்கிறது எழுதப்படாத சட்டம். பெத்தவங்ககிட்டேயும், கணவர்கிட்டேயும் மட்டும் சொல்லலாம்கிறது இந்த உத்தியோக மரபு கொடுத்த ஒரு சலுகை. அந்த வகையில் என் 'வுட்பி'யா வரப்போகிற உன்கிட்ட இன்னைக்கு ரகசியத்தை உடைச்சிருக்கேன்."

"அப்போ... அந்த விப்ஜியார் கெமிக்கல் கம்பெனியில் பார்த்துட்டிருக்கிற வேலை...?"

"அந்த விப்ஜியார் கம்பெனியை 'வேவு' பார்க்கிறதுக்காக சி.பி.ஐ.யின் ஆசிர்வாதத்தோடு

நானாகப் போய்ச் சேர்ந்துகிட்ட வேலை அது. பர்சனல் செக்ரட்ரி டு மேடம் வசந்தராதேவி!"

"இது வசந்தராதேவிக்கு தெரியாது...?"

"எப்படித் தெரியும்..? சி.பி.ஐ. ஷேடோ ஸ்க்வாடில் இருக்கிற நபர்களை டிபார்ட்மெண்டில் இருப்பவர்களுக்கே தெரியாது. எனக்கு மேலே ஒரு பாஸ் இருப்பார். தென், எனக்கு எந்த ஆபத்தும் நேராமல் இருக்கிறதுக்காக ஒரு கவிக் என்னை க்ளோஸ் ஃபாலோ அப் பண்ணுவார்..."

"விப்ஜியார் கெமிக்கல் கம்பெனியை நீ எதுக்காக வேவு பார்க்கணும்... அங்கே தப்பான காரியம் ஏதாவது நடந்துகிட்டு இருக்கா...?"

"ஏதோ ஒண்ணு அங்கே நடக்குது...பட், அது தப்பா சரியான்னு தெரியலை... சிங்கப்பூர் போலீஸிலிருந்து டெல்லி சி.பி.ஐக்கு ஆறு மாசத்துக்கு முன்னாடி ஒரு தகவல் வந்தது. சென்னையில் இருக்கிற ஒரு கெமிக்கல் கம்பெனிக்கு அடிக்கடி ஒரு ரகசிய வார்த்தை சமிக்ஞை செய்யப் படுகிறது. எங்கள் வயர்லஸ் ஃப்ரிக்வென்ஸியில் அடிக்கடி அந்த ரகசிய சங்கேத வார்த்தை இடறுகிறது. பிறகு அந்த சங்கேத வார்த்தையைக் கொஞ்சம் கிளறிப் பார்த்தோம். விப்ஜியார் கெமிக்கல கம்பெனிக்கு பொருத்தமா அந்த வார்த்தை இருந்தது."

"அது என்ன சங்கேத வார்த்தை...?"

"எய்த் கலர் ஆஃப் ரெயின்போ!"

## 22

**ரா**கவ் நெற்றியில் வியப்பு வரிகள் உற்பத்தியாகி அப்படியே சில விநாடிகளுக்கு நிலை கொண்டது.

"சுஜா! நீ என்ன சொல்றேன்னு எனக்குப் புரியலை. வானவில்லுக்கு ஏது எட்டாவது நிறம்...?"

சுஜாதா புன்னகைத்தாள். "இது ஒரு கோட்வேர்ட் ராகவ்... இந்த 'கோட்வேர்ட்'டுக்குள் ஏதோ ஒரு விபரீதம் தூங்கிககிட்டிருக்கலாம்கிறது இந்திய



...வுத் துறை கொடுத்த செய்தி. அந்த விபரீதம் ...ன்னவாயிருக்கும்னு கண்டுபிடிக்கத்தான் ...ப்ஜியார் கெமிக்கல் கம்பெனியில் வேலைக்குச் ...ர்ந்திருக்கேன்."

"சரி... ஏதாவது கண்டுபிடிக்க முடிஞ்சதா?"

"முடியலை... அதுக்காகத்தான் பிரம்மப் ...ரயத்தனம் பண்ணிட்டிருக்கேன். இன்னிக்கு ராத்திரி ...ம்பெனியில் நான் மட்டும் தனியா கம்ப்யூட்டர் ...சக்ஷனில் இருந்து ப்ரோக்ராம் ஷெட்யூல் போடப் ...போறேன். ஏற்கெனவே போன மாசத்துல ஒரு ...டவை ப்ரோக்ராம் ஷெட்யூல் போடற சாக்கில் ...ம்ப்யூட்டர் செல்லுக்குள் நுழைந்து அங்கே இருக்கிற பெண்டியம் கம்ப்யூட்டர்களை சீண்டிப் பார்த்தேன். பாஸ்வேர்ட் எதுவும் சரியா கிடைக்காததால் கம்ப்யூட்டர்க்குள்ளே என்ட்டராக முடியலை."

"இன்னிக்கு முடியுமா...?"

"முடியும்..."

"எப்படி...?"

"கம்ப்யூட்டர்களை ஓப்பன் பண்றதுக்கான ரெண்டு பாஸ்வேர்ட்களை கண்டுபிடிச்சுட்டேன்."

"இன் வாட் வே...?"

"சீக்ரெட் ஏஜெண்ட் என்கிற ஒரு வைரஸை கம்ப்யூட்டர்ல ஃபீட் பண்ணிவேன். அது கண்டு பிடிச்சுக் கொடுத்துடுச்சு... இன்னிக்கு ராத்திரி அந்த பெண்டியம் கம்ப்யூட்டர்களை ஓப்பன் பண்ணி வானவில்லோட எட்டாவது நிறத்தைக் கண்டு பிடிக்கப் போறேன்."

"வசந்தரா ஊர்ல இல்லையா...?"

"இல்லை... வெளியூர் போயிருக்காங்க. அந்த அம்மாவோட மகனும் கூட போயிருக்கான்."

"நல்லா என்கொயர் பண்ணிட்டியா?"

"பண்ணிட்டேன்."

"பி... கேர்ஃபுல் சுஜா. நீ டீல் பண்ற விஷயம் ஹைலி கான்ஃபிடென்ஷியல் அண்ட் காம்ப்ளி கேட்டட்."

"ஐ...நோ ராகவ்... இது தடாலடி ஆப்ரேஷன் கிடையாது. 'மில்லி மீட்டர் மில்லி மீட்டரா' மூவ் பண்ணி இப்போ ஃபைனல் டச்சுக்கு வந்திருக்கேன். நாளைக்குக் காலையில் வானவில்லோட எட்டாவது நிறம் உள்பட எல்லா உண்மைகளும் வெளியே வரும்..."

"விஷ்-யூ-ஆல்-த-பெஸ்ட்" ராகவ் கையை நீட்ட சுஜாதா தலையாட்டினாள்.

"என்ன தலையாட்றே...?"

"வேண்டாம்."

"என்ன வேண்டாம்...?"

"உன் கை வேண்டாம்?"

"பின்னே...?"

"உன்னோட கன்னத்தைக் குடு..."

"ஆஹா...தேவி...! தன்யனானேன்..." கண்களில் போலி மயக்கம் காட்டி சுஜாதாவின் மேல் சாய்ந்தான் ராகவ்.

அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேல் கொட்டாவி விட வாயைத் திறந்த விநாடி மேஜை மேல் இருந்த டெலிபோன் அலறவே, கொட்டாவியைப் பாதியிலேயே விழுங்கிவிட்டு ரிஸீவரை எடுத்தார்.

"எஸ்..."

மறுமுனையில் இன்ஸ்பெக்டர் ஜோதிபாண்டியன் குரல் கொடுத்தார்... "சார்...! நான் ஏர்போர்ட்டிலிருந்து பேசிட்டிருக்கேன்."

"சொல்லுங்க, ஏதாவது தகவல் கிடைச்சுதா?"

"கிடைச்சிருக்கு சார்... இப்ப உங்க பக்கத்துல யாராவது இருக்காங்களா?"

"இல்லை..."

"மேடம் வசந்தரா..."

"அவங்க போலீஸ் கெஸ்ட் ஹவுசுக்கு போய்ட்டாங்க. என்ன விஷயம் சொல்லுங்க..."

"சார்... போன மாசம் பதினெட்டாம் தேதி ஜெயவர்த்தன சிங்கப்பூரிலிருந்து சென்னை திரும்பியிருக்கார்... இல்லையா?"



"ஆமாம்..."

"அந்த பதினெட்டாம் தேதிதான் ஜெயவர்த்தன் தன்னோட டைரியில் 'எய்த் கலர் ஆஃப் ரெயின்போ'ன்னு ஒரு கோட்வேர்ட் எழுதி வச்சிருந்தார் இல்லையா சார்...?"

"ஆமாம்..."

"சார்...! மேடம் வசந்தரா நம்மகிட்ட சில உண்மைகளை மறைக்கிறாங்கன்னு நினைக்கிறேன்."

"எதை வெச்சு அப்படிச் சொல்றீங்க...?"

"போன மாசம் பதினெட்டாம் தேதி மேடம் வசந்தரா யாரையோ ரிஸீவ் பண்றதுக்காக மீனம்பாக்கம் ஏர்போர்ட் போயிருக்காங்க."

தனவேல் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"என்ன சொல்றீங்க... ஜோதிபாண்டியன்?"

"ஆமா... சார்... ஷி ஹேஸ் கம் டு ரிஸீவ் சம்படி."

"இதை உங்களுக்கு யார் சொன்னது...?"

"ஏர்போர்ட் ஆபீஸர் ஹரிஹரன்."

"அவருக்கு எப்படித் தெரியும்...?"

"போன மாசம் 14, 15, 16, 17, 18, 19 தேதிகளில் சிங்கப்பூர் ஃப்ளைட்டில் வந்த அத்தனை பயணிகளையும் ஏர்போர்ட் நிர்வாகம் ரகசியமான முறையில் வீடியோ எடுத்திருக்காங்க. தீவிரவாதிகளோட நடமாட்டத்தை கண்காணிக்கிறதுக்காக செய்யப்பட்ட ஏற்பாடு இது. நான் ஏர்போர்ட் ஆபீஸர் ஹரிஹரனைப் பார்த்து நம் கேஸ் விபரத்தைச் சொன்னதுமே, பதினெட்டாம் தேதி எடுக்கப்பட்ட அந்த வீடியோ கேசட்டைப் போட்டுக் காட்டினார். ஜெயவர்த்தன் வந்த ஃப்ளைட்டைக் காட்டியபோது ஏர்போர்ட் லௌஞ்சில் வரவேற்க வந்தவர்களுக்கு நடுவில் வசந்தரா மேடம் நின்னுக்கிட்டு இருக்காங்க..."

"அது பதினெட்டாம் தேதி எடுக்கப்பட்ட வீடியோ கேசட் தானே...?"

"ஆமா சார்... கேசட்டிலே ஷூட் பண்ணப்பட்ட தேதி வேண்டான ஃப்ளைட் விபரம் பதிவாகியிருக்கு."

"சரி... வசுந்தரா யாரை வரவேற்கப் போயிருந்தாங்கங்கிறதைக் கண்டுபிடிக்க முடிஞ்சுதா...?"

"அது முடியலை சார்.. வீடியோ கேமரா அதிகமா அவங்களை ஃபோகஸ் பண்ணலை. ஃப்ளைட்டில் இருந்து இறங்கி வந்துகிட்டிருந்த பயணிகளையே ஃபோகஸ் பண்ணியிருந்தது..."

"ஜெயவர்த்தனை பார்த்தீங்களா?"

"பார்த்தேன். கையில் ஒரு சின்ன ஃப்ரீஃப் கேஸோடு இறங்கி வந்தார்..."

"கூட யாராவது...?"

"யாருமில்லை... அவர் மட்டும் தனியா வந்தார்..."

"ஜெயவர்த்தனை யாராவது வரவேற்க வந்திருந்தாங்களா...?"

"கேசட்ல அது தெரியலை சார்..."

"ஒருவேளை, வசுந்தரா ஜெயவர்த்தனை வரவேற்கப் போயிருக்கலாமோ...?"

"இருக்கலாம் சார்..."

"ஜெயவர்த்தன் யார்ன்னே தெரியாதுன்னு வசுந்தரா சொல்லியிருக்காங்களே?"

"அது பொய்யாக இருக்கலாம் சார்."

"இப்ப என்ன பண்ணலாம் ஜோதி பாண்டியன்?"

"மேடம் வசுந்தராகிட்டே என்கொயர் பண்ணுங்க சார். ஜெயவர்த்தனை தெரிஞ்சு வெச்சுக்கிட்டே தெரியாதுன்னு சொல்லியிருக்காங்க..."

"ஓ.கே...இனி நான் பார்த்துக்கறேன்" தனவேல் ரிஸீவரை வைத்துவிட்டு எழுந்தார். மூளைக்குள் கேள்வி லேசாய் பிறாண்டியது.

'ஜெயவர்த்தனை தெரியாது என்று வசுந்தரா ஏன் பொய் சொல்ல வேண்டும்.'

யோசித்துக் கொண்டே வளாகத்தின் கோடியில் இருந்த கெஸ்ட் ஹவுஸை நோக்கிப் போனார் தனவேல்.

இரண்டு நிமிஷ நடையில் கெஸ்ட் ஹவுஸ் வந்தது. பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த சென்ட்ரிகள் சல்யூட் வைத்து தளர்ந்தார்கள். படியேறிப் போய் காலிங் பெல்லைத் தொட்டார்.



அது கிணுகிணுத்தது? அரை நிமிஷ இடைவெளிக்குப் பின் பக்கவாட்டு ஜன்னல் திறந்தது வசுந்தராவின் முகம் தெரிந்தது.

"என்ன ஏ.ஸி... சார்...?"

"சாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ். உங்ககிட்ட கொஞ்சம் பேச வேண்டியிருக்கு..."

"ப்ளீஸ் கெட் இன்..." வசுந்தரா கதவைத் திறந்து விட, தனவேல் உள்ளே போனார். கதவு உடனே சாத்தப்பட்டது.

சுஜாதா தன் சந்தன நிற மணிக்கட்டில் கட்டியிருந்த வாட்சைப் பார்த்தாள். இரவு மணி 10.55.

தன்னுடைய கம்ப்யூட்டரில் ஷெட்யூல்ட் ப்ரோக்ராம்களை முடித்துவிட்டு மெல்ல எழுந்தாள். அலுவலகம் நிசப்தமாக இருந்தது. டாய்லெட்டுக்குப் போய செல்போனுக்கு உயிர் கொடுத்து தன்னுடைய மேலதிகாரியிடம் பேசினாள்.

"சார்... வேலையை ஆரம்பிக்கப் போகிறேன்."

"கவனம். யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்."

"இங்கே இப்போது நான் மட்டுமே..."

"இரவுக்கு ஆயிரம் கண்கள்."

"அந்தக் கண்களை ஏமாற்றவும் எனக்குத் தெரியும். அதுவும் நீங்கள் கற்றுக் கொடுத்த கலைதான்..."

"கம்ப்யூட்டர்களைக் கையாளும் போது அதிகப்படியான ஜாக்கிரதை வேண்டும். ஏதாவது லாக்கில் மாட்டிக் கொள்ள வேண்டாம்..."

"எல்லாம் கம்ப்யூட்டர்களுமே இப்போது எனக்குப் பழகிய நாய்க்குட்டிகள்!"

"தென்... வாட் ஈஸ் தேர்... கோ ஹெட்..."

குறுகிய நடைபாதையில நடந்து அரை இருட்டாய் இருந்த கம்ப்யூட்டர் அறைக்கு முன்பாய் வந்து நின்றாள். கையிலிருந்த சாவியை மேக்னடிக் லாக் சிஸ்டத்துக்கு கொடுக்க, அந்த சிஸ்டம் தளர்ந்து கதவு நெகிழ்ந்தது.

சுஜாதா ஜில்லிப்பான அந்த ஏ.ஸி. அறைக்குள் நுழைந்தாள்.




ஏ.ஸி. காற்றை சுவாசித்துக் கொண்டிருந்த கம்ப்யூட்டர் அறைக்குள் நுழைந்த சுஜாதா, கதவைச் சாத்திக் கொண்டு பெண்டியம் ஃபோர் கம்ப்யூட்டரை நெருங்கினாள். ஆர்ம்லஸ் குஷன் நாற்காலியில் தன்னைக் கிடத்திக் கொண்டவள் கம்ப்யூட்டர்க்கு மின்சார உயிர் கொடுத்து விட்டு பூட் ரிக்கார்டை செக் செய்தாள். பாஸ்வேர்டைக் கொடுத்து கம்ப்யூட்டரின் அந்தரங்கத்துக்குள் நுழைய முயன்றாள்.

அது அடம் பிடித்தது.

லேசாக திகைத்துப் போன சுஜாதா மேலும் கம்ப்யூட்டரை ஊடுருவ முயன்றபோது மானிட்டர் திடீரென்று உயிர் பெற்று ஆங்கில வார்த்தைகளைப் போட்டுக் காட்டியது.

"பணி செய்யும் இடம் கோயில்... இப்படித் திருட்டுத் தனம் செய்வது சரியா...?"

சுஜாதா துணுக்குற்றுப் போய் அரக்கப்பரக்க எழுந்தாள்.

'விஷயம் யார்க்கோ தெரிந்துவிட்டது. இனி இங்கே இருப்பது சரியில்லை. உடனடியாய் வெளியேறி பாஸுக்கு விஷயத்தைத் தெரியப்படுத்த வேண்டும்!'

கம்ப்யூட்டரை அணைத்து இருட்டாக்கிவிட்டு வேகவேகமாய் அறைக் கதவை நோக்கி நடந்தாள்.

கதவை நெருங்கி தாழ்ப்பாளைப் பிடித்து இழுத்தாள்.

கதவு திறந்தது.

வெளியே –

மார்புக்கு குறுக்காய் கைகளைக் கட்டிக் கொண்டு மனோகரன் நின்றிருந்தான். முகம் ஓர் இறுக்கத்துக்கு உட்பட்டிருந்தாலும் உதட்டில் புன்னகையொன்று வேண்டா வெறுப்பாய்த் தொற்றியிருந்தது.



"என்ன சுஜாதா...! கம்ப்யூட்டர் ரூமுக்குள்ளே போனே... போன வேகத்திலேயே திரும்பி வந்துட்டே. வெளியே எதையாவது மறந்து வெச்சுட்டுப் போய்ட்டியா...?"

"ச...சார்...அது...வந்து..."

மனோகரன் கையமர்த்தினான். "பரவாயில்லை சுஜாதா! நிதானமா அவசரப்படாமே யோசிச்சு நான் ஒப்புக் கொள்கிற மாதிரி ஒரு பொய்யைச் சொல்..."

தன் நுரையீரல்களுக்கு காற்று கிடைக்காமல் சுஜாதா சுவாசிக்கத் திணறினாள். "ச...சார்...நான்... வந்து..."

"கம்ப்யூட்டர் ரூமுக்குள்ள வாக்கிங் போனியா..."

" "

"நான் வேணும்ன்னா யோசிக்க பொருத்தமா ஒரு பொய் சொல்லட்டுமா...?"

"ச...சார்..."

"நீ அம்மாவை ஏமாத்தலாம். பட் என்னை ஏமாத்த முடியாது. கள்ளச்சாவி போட்டு கம்ப்யூட்டர் ரூமுக்குள்ள எதுக்காகப் போன...?"

உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமாய் நின்றாள் சுஜாதா.

"நீ இப்படியெல்லாம் கேட்டா சொல்ல மாட்டே...! உன்னை விசாரிக்க வேண்டிய விதத்துல விசாரிச்சா எல்லா உண்மைகளும் வெளியே வந்துடும். மறுபடியும் கம்ப்யூட்டர் ரூமுக்குள்ளே போ..."

மனோகரனின் இடது கை, இரும்புத்தனமாய் அவளுடைய புஜத்தைப் பற்றியது.

"சொன்னது காதுல விழலை...? போடி உள்ள..." சுஜாதாவை மூர்க்கத்தனமாய் கம்ப்யூட்டர் அறைக்குள் தள்ளிவிட்டு தானும் உள்ளே நுழைந்தான்.

**வ**சந்தரா திகைப்பாய் தனவேலைப் பார்த்தாள்.

"என்ன மிஸ்டர் தனவேல்... என்கிட்ட என்ன பேசணும்...?"

"உட்கார்ந்து பேசலாமா...?"

"வாங்க.."

உள்ளே போய் உட்கார்ந்தார்கள்.

"சொல்லுங்க... என்ன விஷயம்?"

"நீங்க போலீஸ்கிட்ட சில விஷயங்களை மறைக்கிறீங்கன்னு நினைக்கிறேன்.."

"நோ...நெவர்... அப்படியொரு எண்ணமே எனக்குக் கிடையாது!"

"கொலை செய்யப்பட்ட ஜெயவர்த்தனை உங்களுக்குத் தெரியுமா... தெரியாதா...?"

"தெரியாது..."

"நிஜமா..?"

"இது என்ன கேள்வி மிஸ்டர் தனவேல். அவரைத் தெரிஞ்சிருந்தா தெரியும்னு சொல்லிட்டுப் போறேன். இதுல என்ன இருக்கு?"

"போன மாசம் பதினெட்டாம் தேதி நீங்க சிங்கப்பூரிலிருந்து ஃப்ளைட்ல புறப்பட்டு சென்னை வந்தீங்க இல்லையா...?"

"ஆமா..."

"சிங்கப்பூருக்கு எதுக்காகப் போனீங்கன்னு சொல்ல முடியுமா?"

"என்னோட கெமிக்கல் கம்பெனி விஷயமா போனேன்.."

"அதே ஃப்ளைட்லதான் ஜெயவர்த்தனும் வந்திருக்கார். பட் நீங்க பார்க்கலைன்னு சொன்னீங்க?"

"ஆமா..."

"மேடம்...! நான் ஒரு உண்மையைச் சொன்னா உங்களுக்கு அதிர்ச்சியா இருக்கும். சொல்லட்டுமா...?"

"என்ன உண்மை...?"

"நீங்க போன மாசம் பதினெட்டாம் தேதி சிங்கப்பூர்ல இல்லை. இதே சென்னையில்தான் இருந்து இருக்கீங்க..."

வசுந்தரா முதல் தடவையாய் முகம் மாறினாள்.

"யார் சொன்னது..?"

தனவேல் மெல்ல புன்னகைத்தார். "இதோ பாருங்க மேடம்... அந்த விஷயத்தை யார்



சொன்னாங்க என்பது முக்கியம் இல்லை. விஷயம் உண்மையா... பொய்யா...?"

"பொய்..."

"அதாவது அன்னிக்கு நீங்க சென்னையில் இல்லை. சிங்கப்பூர்லதான் இருந்தீங்க?"

"ஆமா... சிங்கப்பூர் - சென்னை ஃப்ளைட்டோ ட்ரிப் ஷீட்டில் என்னோட பேர் இருக்கும். வேணும்னா நீங்க செக் பண்ணிப் பார்த்துக்கலாம்."

"உங்க பேர்ல வேற யாராவது பயணம் பண்ணியிருக்கலாமே...?"

எரிச்சலானாள் வசுந்தரா. "இப்ப நீங்க என்ன சொல்ல வர்றீங்க மிஸ்டர் தனவேல்...?"

"போன மாசம் பதினெட்டாம் தேதி நீங்க இதே சென்னையில்தான் இருந்தீங்க. சிங்கப்பூர் ஃப்ளைட்ல வந்த யாரையோ ரிஸீவ் பண்ண ஏர்போர்ட் போயிருக்கீங்க..."

"ஆதாரம் இருக்கா..."

"இருக்கு..."

"என்ன ஆதாரம்..."

"போன மாசம் பதினாலாம் தேதியிருந்து பத்தொன்பதாம் தேதி வரைக்கும் சிங்கப்பூர் ஃப்ளைட்டில் வந்த பயணிகளையும் அந்தப் பயணிகளை வரவேற்க வருகிற அத்தனை பார்வையாளர்களையும் ஏர்போர்ட் நிர்வாகம் ரகசியமான முறையில் வீடியோ எடுத்திருக்காங்க. தீவிரவாதிகளோட நடமாட்டத்தைக் கண்காணிக்கிறதுக்காக செய்யப்பட்ட ஏற்பாடு அது. இன்ஸ்பெக்டர் ஜோதி பாண்டியன் ஃப்ளைட் ட்ரிப் ஷீட்டுக்காக ஏர்போர்ட் ஆபீசர் ஹரிஹரனைப் பார்க்கப் போயிருந்தபோது அவர் போனமாசம் பதினெட்டாம் தேதி ஏர்போர்ட்டில் எடுக்கப்பட்ட வீடியோ கேசட்டைப் போட்டுக் காட்டியிருக்கார். அந்த கேசட்ல நீங்க ஏர்போர்ட் லௌஞ்சில் பார்வையாளர்களுக்காக ஒதுக்கபட்ட இடத்தில் யாரையோ எதிர்பார்த்து நின்னுகிட்டு இருந்திருக்கீங்க..."

வசுந்தரா உதட்டைக் கடித்து அதிர்ச்சியை விழுங்கிக் கொண்டே கோணலாய்ப் புன்னகைத்தாள்.

"அது நானாக இருக்க முடியாது மிஸ்டர் தனவேல். உங்க இன்ஸ்பெக்டர் ஜோதிபாண்டியன் வீடியோவில் என்னைப் போலவே இருக்கிற யாரையோ பார்த்து ஏமாந்து போயிருக்கார்."

"நோ மிஸஸ் வசுந்தரா... யூ... ஆர் ராங். சிங்கப்பூர் ஃப்ளைட் லேண்ட் ஆனதும் அதிலிருந்து இறங்கிய பயணிகளை வீடியோ, படம் பிடிச்சிருக்கு. அந்த கேசட்ல ஜெயவர்த்தன் இருக்கார். நீங்க இல்லை. நீங்க இந்த ஃப்ளைட்ல பயணம் பண்ணியிருந்தா ஸ்டெப்ஸ்ல இறங்கி வந்திருக்கணுமே...?"

வசுந்தரா இரண்டாவது தடவையாய் முகம் மாற தனவேல் புன்னகைத்தார்.

"இதோ பாருங்க மிஸஸ் வசுந்தரா. நீங்க பொய்க்கு மேல பொய் பேசிட்டு வர்றது, சீட்டுக்கட்டால வீடு கட்டற மாதிரி... அந்த வீடு ரொம்ப நேரத்துக்கு நிக்காது. உண்மைங்கிற காத்து அடிக்கும்போது அந்த பொய் வீடு மடமடன்னு சரிஞ்சிடும்..." தனவேல் சொல்லிக் கொண்டிருக்கும் போதே டீபாயின் மேல் வைக்கப்பட்டிருந்த வசுந்தராவின் செல்போன் கனைத்துக் கூப்பிட்டது.

வசுந்தரா அதையே பார்த்துக் கொண்டிருக்க தனவேல் சொன்னார்.

"ம்... எடுத்துப் பேசுங்க."

வசுந்தரா தயக்கமாய் எடுத்து காதுக்குக் கொடுத்தாள்.

மறுமுனையில் மனோகரன் குரல் கொடுத்தான்.

"அம்மா..."

"என்ன மனோ..."

வசுந்தரா கேட்ட அதே விநாடி- மறுமுனையில் மனோகரன் பதட்டமாயப் பேசிக் கொண்டிருந்தான்.

"அம்மா... வானவில்லோட எட்டாவது நிற ரகசியம் வெளியே போனதுக்குக் காரணம் யார் தெரியுமா? உன்னோட பர்சனல் செக்ரட்ரி சுஜாதா - அவள் போலீஸ் டிபார்ட்மெண்ட்டில் ஷேடோ ஸ்க்வாடைச் சேர்ந்த ஒரு ஸ்பைவுமன். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கம்ப்யூட்டர் ரூமுக்குள் புகுந்து கம்ப்யூட்டர் பென்டா ஃபோரை இயக்க முயற்சி



பண்ணின போது என்கிட்ட மாட்டிக்கிட்டா அவளை என்ன பண்ணலாம்...? கம்ப்யூட்டர் ரூமுக்குள்ளே சுஜாதாவை கட்டிப்போட்டு வெச்சிருக்கேன். அவளை உயிரோடு வெளியேவிட்டா நாம் ரெண்டு பேரும் உள்ளே போக வேண்டியிருக்கும்."

"..."

"என்னம்மா... பேச்சையே காணோம்... பக்கத்துல யாராவது இருக்காங்களா... சரி. புரிஞ்சுக்கிட்டேன்... நிலைமை சரியாகி நீ தனியா இருக்கும்போது என்னோட செல்லுக்கு போன் பண்ணு..."

செல்போன்கள் உயிரிழந்தன.

தனவேல் ஒரு சின்னப் புன்னகையோடு வசுந்தராவை ஏறிட்டார்.

"அம்மா - மகன் ரெண்டு பேர்கிட்டேயும் ஏதோ தப்பு இருக்கு. அந்தத் தப்பு என்னான்னு சொன்னா பரவாயில்லை... மேல மேல தப்பு பண்ணிட்டுப் போறதைவிட அதுக்கு ஒரு விலை கொடுத்து ஒரு முற்றுப்புள்ளி வெச்சுடறது பெட்டர் இல்லையா...?"

"விலையா...?"

"எஸ்... இன்னிக்கு உங்களை மாதிரி இருக்கிற பிசினஸ் மேக்னட்ஸ், தப்பு பண்ணினாத்தான் தொழிலை மேலே கொண்டு வந்து பண மழையில் நனைய முடியும்.... நான் இறந்து போன உங்க கணவரோட உயிர் நண்பன். நீங்களும் மனோகரனும் சட்டத்துக்குப் புறம்பா என்ன காரியங்கள் பண்ணியிருந்தாலும் சரி. அதை யெல்லாம் டிஸ்போஸ் பண்ண என்னால முடியும். சுஜாதா போலீஸ் டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்த ஷேடோ ஸ்க்வாட் வுமன். அவ இப்போ மனோகரன்கிட்ட மாட்டிக்கிட்டா. அவளை என்ன பண்றதுன்னு கேட்கத்தான் மனோ உங்களுக்கு போன் பண்ணியிருந்தான்..."

வசுந்தரா தனவேலை அதிர்ச்சியோடு பார்க்க அவர் கையமர்த்திச் சிரித்தார்.

"டோண்ட் கெட் டென்ஷன்...! சுஜாதாவை சத்தம் இல்லாமே முடிக்கிற வழி எனக்குத் தெரியும். இன்ஸ்பெக்டர் ஜோதிபாண்டியன் பணம் வாங்கக்

கூடிய ஆள். என்னையும் அவரையும் நல்லா கவனிங்க. சட்டத்தோட எல்லா ஓட்டைகளையும் அடைக்க நாங்க தயார்..."

"ப..ப..பணம் உங்களுக்கு எவ்வளவு வேணும்...?"

"ஒரு கோடி..."

"ரொம்ப அதிகம்..."

"இதே அதிகம்னா, நீங்க வானவில்லோட எட்டாவது நிறத்துக்கு ஒரு வெளிநாட்டிலிருந்து பத்துக்கோடி ரூபா வாங்கியிருக்கீங்களே... அது அதிகம் இல்லையா...?"

## 24

வசந்தரா அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேலை வியப்பும் அதிர்ச்சியுமாகப் பார்த்தாள்.

"இதெல்லாம் உங்களுக்கு எப்படி...?"

தனவேல் புன்னகைத்தார். "எப்படித் தெரியும்னு கேட்கறீங்களா...? கொலை செய்யப்பட்ட ஜெயவர்த்தனின் டைரியில் இந்த விபரமும் எழுதப்பட்டு இருந்தது. இன்ஸ்பெக்டர் ஜோதிபாண்டியன், இந்த விபரத்தைத் தனிப்பட்ட முறையில் என்கிட்ட சொன்னார்."

"மிஸ்டர் தனவேல், நீங்க என்னுடைய ஃபேமிலி ஃப்ரெண்ட். உங்ககிட்ட எல்லா உண்மைகளையும் சொல்லிடறேன். நீங்க கேட்ட ஒரு கோடி ரூபாயையும் கொடுத்துடறேன். விஷயம் போலீஸுக்கும், சட்டத்தோட பார்வைக்கும் போகாதபடி பார்த்துக்கணும்."

தனவேல் சிரித்தார்.

"போலீஸும் நானே...சட்டமும் நானே...! நானும் இன்ஸ்பெக்டர் ஜோதி பாண்டியனும ஏற்கெனவே இதைப்பத்தி பேசிட்டோம். எங்க கைக்கு ஒரு கோடி வந்துட்டா எல்லா உண்மைகளும் ஊமையாயிடும்."

"நீங்க கேட்ட பணம் தர்றேன்."

"பணம் எப்ப கைக்கு வரும்?"

"இன்னிக்கு ராத்திரியே."



"பதுக்கி வெச்ச கறுப்புப் பணமா?"

"எந்தப் பணமா இருந்தா உங்களுக்கு என்ன?"

"இட்ஸ்... ஓ.கே... பண விஷயம் ஓவர். இனி இரண்டாவது கட்டத்துக்குப் போகலாமா...?"

"இரண்டாவது கட்டமா...?!"

"ம்... அந்த கோட் வேர்டுக்கு அர்த்தம் என்ன?"

"எந்த கோர்ட் வேர்ட்?"

"வானவில்லின் எட்டாவது நிறம்."

"அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம். நீங்க கேட்ட பணத்தைத்தான் தர்றேனே... அப்புறமும் எதுக்காக அந்த விஷயத்தைக் கிளறணும்?"

"வானவில்லோட எட்டாவது நிறத்துக்காக பத்துக்கோடி ரூபாய் பேரம் நடந்து இருக்கு. அப்படிப்பட்ட மெகா பிசினஸ் எதுன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா?"

வசந்தரா மௌனம் சாதிக்க, தனவேல் தொடர்ந்தார். "நீங்க சொல்ற விஷயங்கள் எதுவாக இருந்தாலும் சரி... அது எல்லாமே இந்த அறையோடு சரி. வெளியே கசியாது. நீங்க கொடுக்கப் போகிற பணத்துக்காக அந்த உண்மைகள் எல்லாமே இதே அறைக்குள் குழிதோண்டி புதைக்கப்படும்."

"அது...அது...வந்து..."

"இதோபாருங்க மிஸஸ் வசந்தரா... நீங்க முழுக்க முழுக்க நனைஞ்சுட்டீங்க. இனி முக்காடு எதற்கு? இந்தத் தேசத்தில் இருக்கிற எல்லா தொழிலதிபர்களும் ஏதாவது ஒரு வகையில் ஃப்ராட் பண்ணித்தான் கோடி கோடியா பணத்தைச் சம்பாதிச்சுக்கிட்டு இருக்காங்க. ஸோ, நீங்களும் உண்மையைச் சொல்லலாம்..."

"சொ... சொல்றேன். பட், விஷயம் வெளியே தெரியக்கூடாது."

"தெரியவே தெரியாது மேடம்... யூ கன் ட்ரஸ்ட் மீ!"

"இட்ஸ் ஆல் ரைட்...! சொல்றேன். வானவில்லின் எட்டாவது நிறம் என்கிற வார்த்தை கெமிக்கல் வெப்பன்ஸ்னு சொல்லப்படுகிற ரசாயன ஆயுதங்கள்

தயாரிப்பு சம்பந்தப்பட்டது. கிழக்காசியாவில் உள்ள இரண்டு தீவிரவாத கும்பல்களுக்குத் தயாரித்துக் கொடுக்க ஒப்புக் கொண்டு அதுக்கான முயற்சிகளில் நானும் என்னுடைய மகன் மனோகரனும் ஈடுபட்டோம். சில ரசாயன ஃபார்முலாக்கள் புரியாததனால் மனோ ஆஸ்திரேலியாவுல சிட்னிக்குப்போய் ட்ரெய்னிங் எடுத்துக்க முயற்சி பண்ணினான். அவனோட ஆஸ்திரேலியப் பயணத்தில் யாருக்கும் சந்தேகம் வந்துடக் கூடாதேங்கிறதுக்காக அவன் என்கூட சண்டை போட்டுக்கிட்டு சிட்னியில் போய்ப் பிஸினஸ் பண்றதா புரளி கிளப்பிவிட்டோம். அது நல்லாவே ஒர்க்அவுட் ஆச்சு. ஆனா சிட்னிக்குப் போன மனோவினால் அந்த ரசாயன ஆயுதங்கள் சம்பந்தப்பட்ட ஃபார்முலாக்களைக் கத்துக்க முடியலை. காரணம் சிட்னி போலீஸாரின் கெடுபிடி. தொடர்ந்து சிட்னியில் தங்கியிருந்தால் போலீசால் பிரச்சினைகள் வரும்போல் தெரியவே மனோ இந்தியாவுக்குத் திரும்பிட்டான்."

"சரி... போன மாசம் பதினெட்டாம் தேதி சிங்கப்பூர் ஃப்ளைட்ல வந்ததா ஒரு பொய் சொன்னீங்க...?"

"அந்தத் தேதியில் தீவிரவாத கும்பலைச் சேர்ந்த ஒரு பெண் சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு என்னைப் பார்க்க வர்றதா ஒரு ஏற்பாடு. ஏர்போர்ட் செக்யூரிட்டி ஆபீஸர்களுக்கு அவ பேர்ல எந்தச் சந்தேகமும் வந்துடக் கூடாதுங்கிறதுக்காக வசுந்தரா என்கிற என்னோட பேரில், அட்ரஸில் டிக்கெட் புக் பண்ணி ஃப்ளைட்ல டிராவல் செஞ்சு என்னை ஏர்போர்ட்ல மீட் பண்ணினாள்."

"அவளை வரவேற்கத்தான் நீங்க போயிருந்தீங்க இல்லையா...?"

"எஸ்... ஏர்போர்ட் லௌஞ்சிலேயே அந்தப் பெண்ணை சந்திச்சுப் பேசறதா ஏற்பாடு. அதன்படியே சந்திச்சுப் பேசினோம். அதே ஃப்ளைட்ல வந்த ஜெயவர்த்தன் எங்க பேச்சை எதேச்சையாக ஒட்டுக் கேட்டுட்டார். அந்தப் பெண் மறுபடியும் சிங்கப்பூர் புறப்பட்டுப் போனதும்



ஜெயவர்த்தன் என்னை டார்ச்சர் பண்ண ஆரம்பிச்சார்."

"அதாவது ப்ளாக் மெயில்?"

"ஆமா... நான் சம்பாதிக்கிற பணத்துல ஃபிப்டி பர்செண்ட் கேட்டார். சரின்னு சொன்ன நான் இந்தப் பிரச்சனையைத் தீவிரவாத கும்பலுக்குத் தலைவனாக இருந்த கைமல்கிட்ட கொண்டு போனேன். அதுக்கு கைமல் 'ஜெயவர்த்தனை தீர்த்துக்கட்டற முயற்சியியில் நாம் மிக கவனமாக செயல்படணும். போலீசார் அவன் கொலை செய்யப்பட்டதுக்கான காரணத்தை ஆராயும்போது அவன் ஒரு இல்லீகல் பேர் வழியா அவங்க பார்வைக்குக் கிடைக்கணும். சட்டத்துக்குப் புறம்பா ஜெயவர்த்தன் ஒரு காரியம் பண்ணினதால் தான் கொலையாகியிருக்கக்கூடுமென்று போலீஸ் நினைக்கணும்... ஒருஇயக்கத்தின் ஹிட்லிஸ்ட் ஆப்ரேஷன் மாதிரி."

"ஓஹோ...அதுக்காகத்தான் ஜெயவர்த்தனோட கம்பெனிக்கு சொந்தமான அவரோட பிரிண்டர்ஸில் கள்ள நோட்டுக்களைப் போட்டு வெச்சிங்களா...?"

"ஆமா..."

"சரி... புஷ்பகுமாரனுக்கும் உங்களுக்கும் என்ன பிரச்னை? புஷ்பகுமாரனுக்கும் வானவில்லோட எட்டாவது நிற ரகசியம் தெரியுமா...?"

"புஷ்பகுமாரனுக்கு எதுவும் தெரியாது. பட், புஷ்பகுமாரன் ஒரு மோசமான பேர்வழி. டிவிசீரியல் தயாரிக்கிற போர்வையில் ப்ளு ப்லிம்களை எடுத்து அரபு நாடுகளுக்கு சப்ளை பண்ற ஒரு வியாபாரி. ஹிட்லிஸ்ட்ல அவனையும் சேர்த்தோம். பட் புஷ்பகுமாரனை கொலை செய்யறது எங்க நோக்கம் கிடையாது.

எங்க குறி ஜெயவர்த்தன் மட்டுமே. போலீஸுக்கு என்மேல் எந்த சந்தேகமும் வந்துடக் கூடாதுங்கிறதுக்காக ஹிட்லிஸ்ட்ல என் பேரையும் போட்டோம்.

ஆந்திரா பார்டரில் ஒரு கெமிக்கல் ஃபேக்டரியைக் கட்டறதுக்கு பெரிய இடைஞ்சலா

இருந்தவன் சிராலா சித்தையா என்கிற ரவுடி. அவனை இந்த ஜெயவர்த்தன் விவகாரத்தில் ஏற்படுத்தி தீர்த்துக் கட்ட முடிவு பண்ணினோம். அவனும் அவனோட காதலியும் சினிமா பார்த்துட்டு ராத்திரி பைக்ல திரும்பும்போது தீவிரவாத கும்பலின் ஆட்கள் அவங்க ரெண்டு பேரையும் கடத்தினாங்க. சென்னைக்கு கொண்டு வந்தாங்க. வாட்ச்மேனுக்குத் தெரியாம என்னோட கெஸ்ட் ஹவுஸ்ல அடைச்சு வைச்சோம்.

அடுத்ததாக கெஸ்ட் ஹவுஸ் திரும்பி சித்தையாவை முடிச்சு பாடியை வெளியே கொண்டு போக முயற்சி பண்ணியிருக்காங்க. பட், அன்னிக்கு ஹைவேயில் போலீஸின் வாகன சோதனை இருந்ததால மறுநாள் ராத்திரி பாத்துக்கலாம்னு விட்டுட்டாங்க. பாடி பாத் டப்பிலேயே இருந்தது.

தனவேல் குறுக்கிட்டார்.

"சரி... சுஜா விஷயத்துக்கு வருவோம். உங்களைக் கொலை செய்ய அவனை யார் ஏற்பாடு பண்ணியது?"

வசுந்தரா புன்னகைத்தாள்.

"இதுவும் கைமலோட திட்டத்தின் ஒரு பகுதி. ஜெயவர்த்தனோட கொலையைக் குழப்ப சுஜாவை உபயோகப்படுத்திக்கிட்டோம். சுஜா ஒரு ப்ரொஃபஷல் கில்லராக இருந்தாலும் பெண்கள் விஷயத்தில் ஒரு சாஃப்ட் கார்னர் உண்டு. பெண்களில் யாரையாவது கொலை பண்ணச் சொன்னால் அப்போதைக்கு அதை ஒப்புக் கொண்டு பின் சம்பந்தப்பட்ட பெண்ணிடமே வந்து உங்களை யாரோ கொலை பண்ண முயற்சி செய்கிறார்கள். ஜாக்கிரதையாக இருங்கன்னு சொல்லி எச்சரிக்கிறது அவனுடைய வழக்கம்.

சுஜாவோட இந்த குணாதிசயத்தை நாங்க பயன்படுத்திகிட்டோம். கைமலோட ஆட்கள் என்னைக் கொலை செய்யும்படியாக சொன்னதும் எதிர்பார்த்த மாதிரியே சுஜா என்னை வந்து சந்திச்சான். என்னைக் கொல்ல சதி நடக்கறதாகச் சொன்னான். நான் உடனே உங்களுக்கு போன் பண்ணி வரவழைச்சேன்."



"வெல் ப்ளான்ட். ஹிட் லிஸ்ட்ல உங்க பேரும் இருந்தா போலீஸுக்கு உங்க பேர்ல கண்டிப்பா சந்தேகம் வராது."

"நாங்க போட்டப் ப்ளான்படி எல்லாமே சரியாக நடந்து வந்தது. ஒரே ஒரு விசயம் தவிர..."

"என்ன...?"

"என்னோட கெஸ்ட் ஹவுஸ் பாத் டப்பில் சித்தையாவின் பாடி இருக்கும்போதே என்னை நீங்க கெஸ்ட் ஹவுஸுக்கு போகலாம்னு கூப்பிட்டதை நான் எதிர்பார்க்கலை. வேண்டாம்னு சொன்னா உங்களுக்கு சந்தேகம் வரும். வேறு வழியில்லாமமே கிளம்பினேன்."

"அதுவும் உங்களுக்கு ப்ளஸ் பாயின்டா அமைஞ்சது மேடம். நீங்க தப்பு பண்ணியிருந்தா கெஸ்ட் ஹவுஸ்க்கு போலீஸ் அதிகாரியை கூட்டிக்கிட்டு போயிருக்க மாட்டீங்களே.. பட் கெஸ்ட் ஹவுஸ் வாட்ச்மேனுக்குத் தெரியாமே எப்படி இவ்வளவும் பண்ண முடிஞ்சது.."

"வாட்ச்மேன் பற்றி உங்களுக்கு ஒரு தகவல். அவன் ராத்திரியானால் கஞ்சா அடிச்சுட்டு விழுந்து கிடக்கிற ஆசாமி. எது நடந்தாலும் அவனுக்குத் தெரியாது. பல வருஷங்களாக என்கிட்டே அவன் வேலை பார்ககிறதுனால அவனை வீட்டுக்கும் அனுப்ப முடியலை. அவன் அப்படி இருக்கிறதும் ஒரு வகையில் எனக்கு வசதியா இருந்தது."

"இங்கே நடந்த சம்பவங்கள் எல்லாம் உங்க மகன் மனோகரனுக்குத் தெரியுமா...?"

"தெரியாது... அது முழுக்க முழுக்க கைமலின் ஏற்பாடு... சிட்னியிலிருந்து திரும்பிய பிறகுதான் அவனுக்குத் தெரியும்..."

"சரி... உங்க மகன் பிடியில் மாட்டியிருக்கும் சுஜாதாவை என்ன பண்ணலாம்...?"

"அவனைத் தீர்த்துக்கட்ட வேண்டியதெல்லாம் இல்லை. 'நியூரோபராலீஸ்' என்ற விஷ ஊசியைப் போட்டுட்டா போதும். காலம் பூராவும் சுயநினைவு இல்லாமே ஒரே திசையை வெறிச்சு பார்த்துக்கிட்டு சக்கர நாற்காலி வாசம் செய்ய வேண்டியதுதான்.

மீறிப் போனா ரெண்டு வருஷ காலம் உயிரோடு இருக்க முடியும்... அவ்வளவுதான்..."

"அது விஷ ஊசி போட்டதால்தான்னு டாக்டர்ஸ் கண்டுபிடிச்சுட மாட்டாங்களா?"

"கண்டுபிடிக்க முடியாது. இது ஒரு பக்கவாத நோய் மாதிரி! யார்க்கு வேண்டுமானாலும் எப்ப வேணும்னாலும் வரலாம்..."

தனவேல தன் கையில் இருந்த செல்போனை வசுந்தராவிடம் நீட்டினார்.

"உங்க மகனுக்கு மொதல்ல போன் பண்ணி அந்த 'நியூரோ பராலீஸ் என்கிற ஊசியை சுஜாதாவுக்குப் போடச் சொல்லுங்க..."

## 25

**வ**சுந்தரா செல்போனில் எண்களை அடித்த உடனே இணைப்பு கிடைத்து மனோகரின் குரல் கேட்டது!

"ஹலோ."

"மனோகர்...! இப்போ அங்கே நிலைமை எப்படியிருக்கு... சுஜாதாவை என்ன பண்ணியிருக்கே...?"

"ரெண்டு கைகளையும் பின்பக்கமா கட்டிப் போட்டு வாய்க்கு ப்ளாஸ்டரை ஒட்டியிருக்கேன். உன்கிட்டயிருந்து சிக்னல் கிடைச்சதுமே அவ கதையை முடிச்சிடுவேன்."

"அவசரப்படாதே... அவளைத் தீர்த்துக்கட்டறதுல சில பிரச்சனைகள் இருக்கு. அவள் போலீஸ் டிபார்ட்மெண்ட்டின் ஷேடோஸ் க்வாட் பிரிவைச் சேர்ந்தவ. உளவு பார்க்கறதுக்காவே நம்மகிட்ட வேலைக்குச் சேர்ந்தவ. அவளைத் தீர்த்துக்கட்டினா போலீஸோட சந்தேகம் நம்ம பக்கமா திரும்பும். பாடியை அங்கேயிருந்து டிஸ்போஸ் பண்றதும் பெரிய பிரச்சினை."

"சரி... அவளை வேற என்னதான் பண்றது...?"

"சுஜாதா உயிரோடவும் இருக்கணும். அதே நேரத்துல போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு அவ உபயோகப்படாமலும் இருக்கணும்..."



"எப்படி...?"

"நியூரோபாலீஸ் ஊசியைப் போட்டுடு. ரெண்டு வருஷ காலத்துக்கு ஒரே திசையை வெறிச்சுப் பார்த்துட்டிருந்துட்டு உயிரை விட்டுடும்..."

"அப்ப மட்டும் நம்ம மேல சந்தேகம் வராதா?"

"எப்படி வரும்... எந்த டாக்டர் அவளை டெஸ்ட் பண்ணிப் பார்த்தாலும் ஊசி மருந்தோட அறிகுறிகளே தெரியாதே...! அதுவும் இல்லாம அஸிஸ்டெண்ட் கமிஷனர் தனவேல் இனிமேல் எல்லா வகையிலும் நமக்கு உதவியா இருக்கப் போகிறார்..."

"அவரை நம்பலாமா?"

"பேரம் பேசியாச்சு மனோ...! ஒரு கோடி..."

"இது அதிகம்..."

"நாம சம்பாதிக்கப் போறதும் அதிகம். பயப்படாத மனோ... சுஜாதாவுக்கு மொதல்ல அந்த 'நியூரோ பராலீஸ்' ஊசியைப் போடு..."

"இன்ஜெக்ஷன் எங்கே இருக்கு...?"

"என்னோட பர்சனல் கெமிக்கல் க்யூப்பில்."

"லாக் நம்பர் அதே ட்ரிபிள் ஃபைவ்தானே... மாற்றம் இல்லையே...?"

"இல்லை."

"சரி... சுஜாதாவுக்கு ஊசியைப் போட்டதும் அவளை எப்படி கம்பெனியிலிருந்து வெளியே கொண்டு போறது? செக்யூரிட்டிஸ் இருக்காங்களே..."

"நீ ஊசியைப் போட்டதும் எனக்குத் தகவல் கொடு. நானும் தனவேலும் கம்பெனிக்கு கார்ல வர்றோம். சுஜாதாவை ஒரு அட்டைப் பெட்டிக்குள்ளே போட்டு ஒரு கெமிக்கல் பேக்கேஜ் மாதிரி செட் பண்ணி வை. நாங்க கார்ல எடுத்துக்கிட்டு போய் சுஜாதாவை அவ வீட்டு போர்டிகோவிலேயே படுக்க வெச்சுட்டு வந்துடறோம். காலையில் பக்கத்து வீட்டுக்காரங்க பார்த்து அவளை ஹாஸ்பிட்டலைஸ் பண்ணட்டுமே?"

"அம்மா..."

"என்ன...?"

"திட்டம் கொஞ்சம் சிக்கலாயிருக்கிற மாதிரி தெரியுது."

"சிக்கல்தான்! பட் தனவேல் இருக்கும்போது நமக்கு எதுவுமே சிக்கல் கிடையாது. நீ ஊசியைப் போட்டுட்டு எனக்கு போன் பண்ணு..."

"சரி..."

"என்ன... உங்க சன் மனோகர்க்கு என் பேர்ல நம்பிக்கையில்லை போலிருக்கே... நான் ஒரு ஹானஸ்ட் போலீஸ் ஆபீஸர்ன்னு நினைச்சுட்டார் போலிருக்கு..."

"எஸ்..."

"போன வருஷம் வரைக்கும் நானும் ஒரு ஹானஸ்ட் போலீஸ் ஆபீஸராகத்தான் இருந்தேன். எனக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு அரசியல் காரணமா வேற ஒருத்தர்க்கு எப்போ போச்சே, அந்த நிமிஷத்திலிருந்தே நான் மாறிட்டேன். உண்மையான உழைப்புக்கு இங்கே இடமில்லைங்கறதையும் புரிஞ்சுக்கிட்டேன். எல்லாருமே பணம் சம்பாதிக்கத்தான் ஆசைப்படறாங்க. இதுக்கு நான் மட்டும் விதிவிலக்கா என்ன...?"

"திஸ் ஈஸ் ரைட் டைம் டிஸிஷன். இன்ஸ்பெக்டர் ஜோதிபாண்டியனும் கடைசி வரைக்கும் ஸ்ட்ராங்கா இருப்பாரா...?"

"அந்த ஆள் இந்த விஷயத்தில் டபுள் ஸ்ட்ராங்."

**ச**ரியாய் அரை மணி நேரம் கழித்து மனோகரனிடமிருந்து போன் வந்தது.

"அம்மா...! சுஜாதாவுக்கு 'நியூரோபராலீஸ்' ஊசி போட்டுட்டேன்."

"அட்டைப் பெட்டியில் பேக்கேஜ்!"

"பண்ணிட்டேன்."

"பேக்கேஜுக்குள்ளே ஏர் சர்க்குலேஷன் இருக்கட்டும்."

"எனக்குத் தெரியாதா என்ன... பெட்டியின் பக்கவாட்டுப் பகுதியில் ரெண்டு ஹோல்ஸ் போட்டிருக்கேன்."

"சரி! நானும் தனவேலும் இப்போ புறப்பட்டு வர்றோம்."



"லேட் பண்ணாமே சீக்கிரமா வாங்க."

"இதோ புறப்பட்டோம்..." வசந்தா செல்போனை அணைத்துவிட்டு எழுந்தாள்.

இருவரும் வெளியே வந்து காத்திருந்த காரில் ஏறிக் கொண்டார்கள். தனவேல் காரை விரட்ட அது பறந்தது.

கார் உள்ளே போயிற்று. ஐம்பது மீட்டர் கான்க்ரீட் பாதையில் ஓடி போர்டிகோவின் அரையிருட்டுக்குள் போய் பதுங்கியது. இறங்கி யாரும் இல்லாத வராந்தாவில் நடந்து கம்பெனியின் பிரதான ஆபீஸ் ஹாலுக்குள் நுழைந்தார்கள்.

மனோகர் எதிர்பட்டான். தனவேல் கேட்டார். "மனோகர்...! பேக்கேஜ் எங்கே...?"

"உள்ளே...! கம்ப்யூட்டர் ரூமுக்குள்ளே."

போனார்கள்.

மெலிதான வெளிச்சம் பரவியிருந்த கம்ப்யூட்டர் அறைக்குள் ஃப்ரிஜ் உயரத்துக்கு ஒரு அட்டைப் பெட்டி தெரிந்தது.

வசுந்தரா அட்டைப் பெட்டிக்கு முன்பாய் போய் நின்றாள்.

மகனை ஏறிட்டபடி கேட்டாள்.

"சுஜாதாவுக்கு எவ்வளவு ஆம்பியூல் போட்டே?"

"ரெண்டு..."

"அவளுக்கு கான்ஷியஸ் இருக்கா...?"

"தெரியலை..."

"பார்த்துடலாம்..." சொன்ன வசுந்தரா அட்டையின் ஒரு பக்கத்தை கதவு போல திறந்தாள்.

உள்ளே

சுஜா சம்மணம் போட்டு உட்கார்ந்திருந்தான்.

"வணக்கம் மேடம்!" என்றான் சுஜா.

வசுந்தராவும் தனவேலும் அதிர்ச்சியில் பின்வாங்க, சுஜா அட்டைப்பெட்டிக்குள்ளேயிருந்து சிரிப்போடு வெளிப்பட்டான்.

"சுஜா... நீயா...! நீ எங்கே இந்த நேரத்துல இங்கே! மனோ...! என்னடா இது...?"

"உங்க மகன் இனி பேசமாட்டான் மேடம். நீங்க எது கேட்டாலும் அதுக்கு பதில் சொல்ல நான் தயாராயிருக்கேன். நான் எப்படி இங்கே வந்தேன்னு கேட்டீங்க. நான் ஒரு ப்ரொபஷனல் கில்லர்தான். பணத்தை வாங்கிக்கிட்டு கொலைகளைப் பண்றவன்தான்.

ஆனா நான் பண்ணக்கூடிய கொலையில் கொஞ்சம் நியாமும் இருக்கும். என்றைக்காவது ஒரு நாள் தூக்குல தொங்கப் போறவங்களைத்தான் என் துப்பாக்கி குறிபார்த்து தோட்டாக்களை அனுப்பியிருக்கும்.

ஒரு பெண்ணை எந்தக் காரணத்துக்காகவும் கொலை பண்றது எனக்கு உடன்பாடு இல்லாத விஷயம். இதை எப்படியோ தெரிஞ்சுக்கிட்டு உங்க கொலை வெறி திட்டத்துக்கு என்னை உபயோகப்படுத்திக்கப் பார்த்தீங்க. நானும் உங்களை நம்பினேன்.

ஆனா என்னை போலீஸ் வேஷத்துல வந்து கடத்திக்கிட்டு போனவங்க பேசின பேச்சிலிருந்து உங்க மேல எனக்கு சந்தேகம் பிறந்தது.

என்னை அவங்க வேணும்ன்னே தப்பிக்க விட்டாங்க. உங்களைக் கொலை செய்ய ஒரு கும்பல் இருக்குங்கறதை என் மூலமாக போலீஸுக்கு தெரியப்படுத்தி அவங்களை நம்ப வைக்கிறதுதான் உங்க நோக்கம். இதை நான் புரிஞ்சுக்கிட்டேன்.

ஆனா புரிஞ்சுக்கிட்ட மாதிரி காட்டிக்கலை. ரகசியமா உங்களையும் உங்க மகனையும் கண்காணிச்சேன். முக்கியமா உங்க மகனை.

இன்னிக்கு உங்க மகன் கம்பெனிக்குள்ளே நுழைஞ்ச போதும் நானும் செக்யூரிட்டி ஆட்களை ஏமாத்திட்டு உள்ளே வந்தேன். வந்ததுக்கு ஒரு உருப்படியான காரியம் சுஜதாவைக் காப்பாத்த முடிஞ்சுது.

சுஜா பேசிக் கொண்டிருந்தபோதே தனவேல் தன் இடுப்புக்கு கையைக் கொண்டு போய் அந்த பிஸ்டலை எடுத்தார்.



"இனிமே உன்னோட புத்திசாலித்தனமெல்லாம் இந்த பிஸ்டலுக்கு முன்னாடி எடுபடாது."

சுஜா சிரித்தான்.

"நீங்க இப்படிப்பட்ட முட்டாள்தனமான வேலையெல்லாம் செய்வீங்கன்னு கமிஷனர் ஏற்கெனவே சொல்லி ஒரு ஸ்குவாடை அனுப்பி வெச்சிருக்கார். கொஞ்சம் திரும்பி அந்த கம்ப்யூட்டர்களுக்குப் பின்பக்கம் பாருங்க ஏ.ஸி.சார்."

தனவேலும வசந்தராவும் கலக்கமாய் கம்ப்யூட்டர்கள் பக்கம் திரும்பிப் பார்த்து முகம் இருண்டார்கள்.

கம்ப்யூட்டர்களுக்குப் பின்பக்கமிருந்து உயர்த்திய துப்பாக்கிகளோடு ஐந்து பேர் நிழல் உருவங்களாய் எழுந்தார்கள். தனவேலின் கையில் இருந்த பிஸ்டல் தன்னிச்சையாய் கீழே உதிர்ந்தது.

"ஏ.சி.சார்... ஒரு ஆபத்தான இடம்ன்னு தெரிஞ்சும் சினிமா ஹீரோ ஒருத்தன்தான் தைரியமா போலீஸ் உதவியில்லாமல போவான். நிஜ வாழ்க்கையில் அந்த ரிஸ்க்கை எடுக்க நான் தயாராயில்லை. எனக்கு வசந்தரா மேல என்னிக்கு சந்தேகப்பொறி தட்டிச்சோ அன்னிக்கே கமிஷனர் காதுக்கு விஷயத்தைக் கொண்டு போயிட்டேன். திரை மறைவிலிருந்து டைரக்ஷன் பண்ணினது அவர்தான். இந்நேரம் அவர் ஜீப்ல வந்துக்கிட்டு இருப்பார்..."

"வெளியே ஜீப் ஹாரன் சத்தம் கேட்டது.

"வந்துட்டார்" என்றான் சுஜா.

மறுநாள் காலை.

கையில் மாலையோடு ராகவைப் பார்த்ததும் சீட்டியடித்தாள் சுஜாதா.

"ராகவ்! என்னடா மாலையோடு வந்துட்டே...? என்னைச் சும்மா பாராட்டினா போதாதா?"

"மாலை உனக்குக் கிடையாது."

"பின்னே...?"

"சுஜாவுக்கு...! என்னோட தாலி பாக்கியத்தைக் காப்பாத்திக் கொடுத்தவன் அந்த சுஜாதான்...வா!

ரெண்டு பேருமா போய் மாலை போட்டு ஒரு தேங்க்ஸ் சொல்லிட்டு வந்துடலாம்..."

"சுஜா இப்போ ஜெயில்ல இருக்கான்."

"ஜெயில்ல இருக்கானா...? ஏன்...?"

"இதுவரைக்கும் தான் செஞ்ச கொலைகளை யெல்லாம் ஒத்துக்கிட்டு தண்டனையை அனுபவிக்க முடிவு பண்ணி போலீஸ்ல சரணடைஞ்சுட்டான். திருந்தி வாழ ஒரு வாய்ப்பு கேட்டிருக்கான். சட்டம் இடம் தருமா. கோர்ட் அந்த வாய்ப்பைக் கொடுக்குமான்னு தெரியலை..."

"கோர்ட் கண்டிப்பா அந்த வாய்ப்பைக் கொடுக்கும்."

"எப்படிச் சொல்றே?"

"கெமிக்கல் வெப்பன்லை தயாரித்து அந்நிய நாடுகளுக்கு சப்ளை செய்தல வசுந்தரா - மனோகரின் தேச விரோதச் செயலை இந்தியா வுக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டியது வேறு யாருமில்லை - சுஜாதான். அவன் ஒரு ப்ரொஃபஷனல் கில்லராக இருக்கலாம். அதையும் மீறி அவன்கிட்ட ஒரு நாட்டுப்பற்று இருந்திருக்கு. இன்னிக்கு நாட்டில் இருக்கும் அரசியல்வாதிகளைக் காட்டிலும் நாட்டை ஆள்கிற மந்திரிகளைக் காட்டிலும் சுஜா உத்தமன்."

"யூ ஆர் கரெக்ட்" என்றாள் சுஜாதா" வா ஜெயிலுக்கு போய் மாலையைப் போட்டுட்டு வரலாம்."

கிளம்பினார்கள். கையில் இருந்த ரோஜா மாலை அதிகப்படியாய் மணத்தது.

**(முற்றும்)**

---

Owned & Published by **VIJI** on behalf of **RAAJ SRI PUBLICATIONS**. 49-B, SURYA AVENUE, Near Kurinji Nagar, Chrompet, Chennai-600 044. Printed at Wonder Prints, Chennai-5.

---



## மறைந்த R.M. குமரவேல் (ரேசாகி) பற்றி

விசிட்டர் அனந்த் அவர்களின் மூலம் 'விசிட்டர் லென்ஸ்' பத்திரிகையில் அறிமுகம் செய்யப்பட்டு பத்திரிகைத் துறைக்கு வந்தவர். அதன்பிறகு ரஜினி, கமல், பிரபு நடிகர்களின் சிறப்பிதழ்களை வெளியிட்டு ஏஜெண்ட்கள், வாசகர்களின் அமோக ஆதரவைப் பெற்றவர். க்ரைம் செய்திகள் பத்திரிகையின் மூலம் சமூக அவலங்களை வெளியிட்டு வந்துள்ளார். பின்பு கிரேட் நாவல், எவரஸ்ட் நாவல், சூப்பர் சினிமா, கிரேட் சினிமா, பெஸ்ட் நாவல் என பல பத்திரிகைகளை இன்று வரை சிறப்பாக நடத்தி வந்துள்ளார். 'ரேசாகி' என்னும் புனைப்பெயரில் நாவல்களை எழுதி வாசகர்களின் ஆமோக ஆதரவை பெற்று வந்துள்ளார்.

கடந்த சில வருடங்களாக உடல் நிலை சரியில்லாத போதும் நாவல்கள் எழுதுவது அவருக்கு மனநிறைவையும் சந்தோஷத்தையும் தந்துள்ளது. இதன் மூலம் வாசகர்களின் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளார்.